Regd. M. 1803.

OFFICE OF THE REGISTRAR
No.
10 AUG 1929
MADRAS

லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

Vol. 6. மலர் 6. | விபவஞூ ஐப்பசிமீ 1928 அக்டோபர் | No. 1. இதழ் 1.

பொருளடக்கம்.

1.	லக்ஷ்மி வாழ்த்து	2
2.	புத்துயிர்	6
3.	அரி சுவடி	8
4.	இந்தியமாதர் தற்கால நிலை	10
5.	நட்டாஜி	16
	மதுசாரம்	18
	...ாசிரியர் குறிப்புகள்	21
	...புரை	27
	...த்தாய்	28
	...ித்துறை	29
	... பத்திரிகைகள்	31
	...டு இந்தியர்	33
	...யர் அல்லது பயனற்ற படிப்பு ...	35
	... ...	40

...ராளர்கள் :
...ண்டு கோ., சென்னை.

வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் - - - - - - - - அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கான பட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இரு பக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 6 மு நீளம். 40" அகலம்.

விலை ரூ. 6—8—0 தான்.

கிடைக்கவில்லையே ! என்று வருந்தவேண்டாம் ஏற்கனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்குக் குறைந்து வருவதால் முந்திக் கொள்ளுங்கள்.

முந்துங்கள் ! இதுவே தருணம் !!

ஓமுனியோஸா - - - - - - அங்கவஸ்

அழகான இமிடேஷன் சில்க். கலருக்கு உத்திரவா
னுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக் குஞ்சம் கட்
ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளு முதலிய பல

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2-4
விலை ரூபாய் இரண்டேகால் தான்.

☞ இதுவரை, 6 மாதத்திற்குள் 25,000,
யாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்
ஆர்டர் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்

தபால்பெட்டி 99,

லக்ஷ்மி

10 AUG 1929

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

மலர் 6,	1928௵ அக்டோபர்௴, விபவ௵ ஐப்பசி௴	இதழ் 1

ஸ்ரீமான், K. S. முத்தைய பிள்ளை,

'லக்ஷ்மி' ஸ்தாபகர் எழுதுவது.

அன்புள்ள சுந்தரம்,

தெய்வத்திருவருளால் தோன்றி ஐந்து வருஷம் கடந்து, இன்று ஆறுவதாண்டு புகும் நமது "லக்ஷ்மி" புதிய வடிவத்தில் வெளியிடுவதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியளிக்குமென்பதில் ஐயமில்லை.

உனது, ஒவ்வொரு முயற்சியும் திருமகள் அருளால் நன்கு நடைபெற்றுக் கீர்த்தியுடன் ஜ்வலிக்கவேண்டுமென்பதே எனது உள்ளக்கிடக்கை—முயற்சி என்றும் கூலி தருமென்பதை ஞாபகத்தில் வைப்பாயாக!

...எஸ். முத்தைய...

டாக்டர், வரதராஜுலு நாயுடு

ஆசிரியர், தமிழ் நாடு, எழுதியது.

"லக்ஷ்மி"க்கு ஆருவது ஆண்டு ஆரம்பமாகிறது. ஆருவது வயது முதல் "லக்ஷ்மி" பெரிய உருவத்துடனும், அரிய விஷயங்களுடனும், புதிய அமைப்புடனும் வெளி வருவதைக் கண்டு சந்தோஷ மடைகிறேன். தமிழ் மாத சஞ்சிகைகள் பிறபாஷை மாத சஞ்சிகைகளைப் போல உயரிய நிலைக்கு வாராதது, தமிழ் நாட்டிற்கே ஒரு பெருங் குறையாகும். அக்குறையை "லக்ஷ்மி" இனி நிவர்த்திக்கு மென்று நம்புகிறேன். ஏனெனில், இதற்கு முன் வெளி வந்துள்ள "லக்ஷ்மி" பிரதிகளைப்பார்த்தால், லாபத்தை உத்தேசித்து "லக்ஷ்மி" வெளியிடப் படவில்லை யென்பதையும், தமிழ்த் தாயின் தொண்டிற்காகவே உயர்ந்த விஷயங்களுடனும், சிறந்த இதழ்களுடனும் அது வெளி வந்திருக்கிற தென்பதையும் அறிந்து கொள்ளலாம். "லக்ஷ்மி" யின் ஆசிரியர் ஸ்ரீ. சுந்தரம் பிள்ளை வர்த்தக நுட்பத்தை அறிந்தவரா யிருப்பதோடு, தமிழ் நாட்டிற்குத் தொண்டு செய்ய வேண்டு மென்று அளவற்ற ஆவல்கொண்டவராயு மிருக்கி... ...ரர். அவருடைய வர்த்தக நுட்பமும், தாய்பாஷை அபிமானமும், உயர்... ...மும் "லக்ஷ்மி"யைத் தமிழ் நாட்டில் உயர்ந்த மாதசஞ்சிகையா... ...பதில் சந்தேகமில்லை. தமது வர்த்தக வேலைகளுக் கிடையில், ...தால் தூண்டப்பட்டு, "லக்ஷ்மி"யை நடத்தும் பொறுப்பையு... ஸ்ரீ. சுந்தரம் பிள்ளையின் முயற்சி வெற்றியடையுமாறு பிரா... தமிழ்ச் செல்வியான "லக்ஷ்மி" தனக்குரிய உயர் பதவியைத் த... ...கைகளுக் கிடையில் பெறும் காலத்தை வெகு ஆவலுடன் எதி...

வர...

10 AUG 1929

'லக்ஷ்மி' வாழ்த்து.

நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் பாடியது.

பூந்தேன் வண்டே! பூந்தேன் வண்டே! தென்றற் பொதியும் மன்றற் பொருநையும்
முத்துக் கடலும் ஒத்து வளஞ்செய் மேழிநெல் வேலி ஆழிசுந்தரனின்
'இலக்குமி' என்னும் இலக்கிய மின்னும் அமிழ்தச் செல்வி தமிழத் திங்கள்
காம தேனுவாய் நாமநீர் வைப்பில் நிலவு காலப் புலவோர் பெற்ற
ஐந்தாண் டளவைச் சிந்தா மணிகள் பலப்பல இன்னுமந் நலம்பல பெருக்க
ஆறும் அகவை எறு நிற்கும் இன்று சென்று நீ "என்றும் வாழ்க
வாழ்க 'இலக்குமி வாழ்க" என்று வாழ்த்துதி வண்டே! வாழ்த்துதி
வண்டே! மகிழ்வுடன் கண்டே இனிதே.

'லக்ஷ்மி' வாழ்த்து

திருவாளர்-பா. ஆதிமூர்த்தி, காசி.

1. வாழிய நீ "இலக்குமி" இவ் வையகத்தோர் போற்ற
   வளமருளி, பலமருளி, மனமருளி எவர்க்கும்
   ஊழியமே தாய் நாட்டிற் குறுதி யெனக் கருதி
   உத்தமமாம் சுதந்தரத்தை யுதவி யிதம் பெருக்கி (வாழியநீ.)

2. பொங்குக நீ "இலக்குமி" இப்பூவுலகி லெங்கும்
   புன்மையொடு, வறுமையினைப் போக்கியுயர் புகழே
   தங்குக வென் றன்னுனை தனித்தனியே யுதவி
   தரியலர்தம் கொடுமையினைத் தகர்த்தருளைப் பெருக்கி (வாழிய நீ.)

3. ஓங்குகநீ " இலக்குமி " இவ்வுலகிலருள் ஒழுக்கி
   உத்தம சத்தியக் கலைகள் ஒன்றுபட வுயர்த்தி,
   தாங்குக எம்பொருட் பெருக்கைத் தரணியெலா மதிக்கச்
   சமரசமே திசை தோறும் தழைத் துணையே துதிக்க. (வாழியநீ.)

4. பெருகுக நீ " இலக்குமி " இப்பேருலகம் துதிக்க
   பிழையறு நம் ' பாரதத் தாய் ' பீடுபெற வுயர்த்தித்
   தருகவுன்றன் அருள்வெள்ளம் தனித்தனியே யெவர்க்கும்
   தனித்தொழிலும் இணைத் தொழிலும் தழைத்து வினை பெருக்கி
   (வாழியநீ.)

5. நீக்குகநீ " இலக்குமி " இந் நில வுலகினின்றும்
   நீசமுறும் வறுமையையும் அடிமையையும் நேரே
   போக்குக எம் பலக்குறைவை; புன்மையினைப் புரையைப்
   புனித நிலை தந்தருளிப் புகழ் நிலைக்கச் செய்தே (வாழிய நீ.)

6. யாரொப்பார் " இலக்குமி " யுன் அருட் பெருக்காலன்றோ
   ஐரோப்பா அமெரிக்கா அடைந்த வுயர்நிலையை,
   நேரொப்பாரிலை யென்ன நிதிப் பெருக்கினோடும்
   நிகரரிய கலைப் பெருக்கும் பலப் பெருக்கும் நேர்ந்த (வாழிய நீ.)

7. அன்னாய் உன் கடைக்கணருள் யாவனுறும் அவனே
   அழியாத சக்திகள் தான் அமைவதை யாம் அறிவோம்
   உன்னாலே மானிடரும், வானவரும் வாழ்வார்
   உலகிலுள உயிர்க ளெலாம் உயிர்தரித்து வாழும் (வாழிய நீ.)

அவ்வளவும் தித்திப்பே!

நமது சொந்த பிரசுரங்களில் பொறுக்கி யெடுத்த சிலவற்றை இதன் கீழ் குறிப்பிட்டுள்ளோம். ஒவ்வொரு புஸ்தகமும் ஒன்றை விட ஒன்று ஆச்சர்யமாகவும், மனதைக் கவரும் அபூர்வ விஷயங்க ளடங்கியதாயு மிருக்கின்றது—இவைகளில் நீங்கள் வாங்கும் ஒரே புஸ்தகம் மற்றயாவற்றையும் வாங்கத் தூண்டு மென்பதில் ஐயமில்லை.

இந்திய மாதா	... 1—8
இந்திய பிதா	... 2—0
துரதிர்ஷ்ட இந்தியா	... 2—8
பச்சை மோதிரத்தின் மர்மம்	... 1—0
காசி அல்லது புண்ணியபூமி	... 1—4
வர்த்தக யுக்தி	... 0--12



ஒரே தடவையில் மேல் கண்ட எல்லா புஸ்தகங்களுக்கும்
ஆர்டர் செய்பவர்களுக்கு எங்களின்

சிறு கதை செட் இனும்!!!

முத்தையா புக் டிபோ,

தபால் பெட்டி நெ. 99,

சென்னை.

குழந்தைகளை நேசியுங்கள்.

அழுகிற குழந்தைகளை அடிக்க வேண்டாம். உங்கள் அருமைக் குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரமிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கி யிருக்கின்றன. அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப் பட்டு, மிகுத்த அழகோ டிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும் மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப்பெற்றவை.

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0.

நெ. 2 செட் ,, ரூ. 3—4—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் :: :: காசி.

அன்னியரால் பல முறையும் நசுக்கப்பட்டு ஒற்றுமை யற்றுச் சக்தியற்றுத் தவித்து வாழ்ந்து வந்த சீன தேசமானது, புத்துயிரின் வல்லமையால் சக்தியும் வீரமும் பெற்றுத் தற்போது மேலோங்கி வருவதை நம்மவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

நாற்பது கோடி ஜனத்தொகையுள்ள சீன தேசம் முப்பது கோடி இந்தியர்களைத் தட்டி யெழுப்பத் தொடங்கி யிருக்கிறது.

சகோதரர்களே! ஒரு மனிதன் பல்லாயிரம் மனிதர்களைத் தட்டி யெழுப்பலாம். எனினும், அடிமை வாழ்வில் வெகு காலம் தூங்கிக்கிடக்கும் நம்நாட்டாரை எழுப்ப, முப்பது கோடிக்கு நாற்பது கோடி சீன சகோதரர்கள் தயாராகி விட்டார்கள். ஆகவே இனிமேலும் தூங்குவது தகுதியன்று. எழுமின்! எழுமின்!! விழிமின்!!!

இரத்தம் வற்றிச் சாகாப் பிணமாகக் கிடந்த நாடுகளாகிய ஆப்கானிஸ்தானமும், பெர்ஷியாவும் ஐரோப்பாவின் நோயாளியான துருக்கியும் புத்துயிர் பெற்று விட்டன. ருஷிய தேசம் உலகத்தின் கொடுங்கோல்களை அழித்துத் தரும ராஜாங்கங்களை உலகம் முழுவதும் ஸ்தாபிக்கத் தயாராகிவிட்டது. சிற்றடிச் சீனம் மஹாத்மா "லெனின்" உபதேசங்களைப் பின்பற்றி நிமிர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். ஆசியா கண்டத்தில் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கும் நாடு நமது பாரத நாடு ஒன்றே என்ற பழிச் சொல் வேண்டாம்! புத்துயிர் பெற நாம் தயாராக வேண்டும்.

"புத்துயிர் புத்துயிர் பெற்றோங்குக"

ஆகவே நம் நாட்டு இராஜ தந்திரப் புத்துயிர் எழுச்சி எக் காரணத்தாலும் மங்காததாகிப் புத்துயிர் பெற்று வளரக்கடவது. நம்மவர்[illegible]ின் மனத்தளர்ச்சியும் சக்தி ஹீனமும், பிற்[illegible]ாக்கும் நசித்துச் சுதந்தர தாகம் பெருகக் [illegible]வது.

புத்துயிரின் போக்கு.

நாட்பட்டு முதிர்ந்து கிழத்தன மடைந்த [illegible]ந மரத்தினின்றும் விழுந்த ஒரு சிறு விதை [illegible]னது முளைத்து வளர்ந்து ஓங்கித் தளிர்த்துப் பூத்துக்காய்த்து, பழுத்துத் தன் தாய்மரத்திலும் அழகியதாயும் பலமுள்ளதாயும் வளர்ந்தோங்குவதை நாம் பார்க்கிறோம். இதுபோலவே உயிரானது உலகத்தில் என்றும் அழிவதில்லை. வளர்ந்தோங்குதலும் மறுபடியும் புத்துயிர் பெறுதலுமே அதற்குச் சுபாவமாகும். தேகம் பலஹீனமானதா யிருப்பினும், அப்புத்துயிர் பல ஹீனத்தைநீக்கி யௌவனத்தை யுண்டாக்கும். புத்தி மங்கி மறதிகள் மேலோங்கி யிருப்பினும் புத்துயிர் அப்புத்தியை விஞ்ஞான புத்தியாக்கி மறதியை மாற்றி ஜாக்கிரதையை யுண்டாக்கும். இவையே புத்துயிரின் அஸ்திவாரமான வேலை யென்று அறிய வேண்டியது. புத்துயிருக்குமுன் தரித்திரம், நோய், துக்கம், கஷ்டங்கள், அடிமைத்தனம், அநீதி ஆதியன நாசமாகிவிடும். இவைகளுக்கு எதிரான நன்மைகள் ஓங்கி வளரும். எவ்விடத்தில் கஷ்டங்க ளிருக்கின்றனவோ அவ்விடத்திற்குப் புத்துயிர் வேண்டும் என்பதே பொருள். எவ்விடத்திற்கு அல்லது எச்சமயத்திற்குப் புத்துயிர் வேண்டும் என்று கோரப்படுகிறதோ, அவ்விடத்திற்கு அச்சமயத்திற்குப் புத்துயிர் தோன்றிப் பொலிவதே இயற்கை. இதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும்.

புத்துயிர் பெறும் வழி.

ஆனால் புத்துயிரானது விரும்பாத இடத்திற்குச் செல்ல மாட்டாது என்பதையும் நாம் அறியவேண்டும். அறிவது நமது கடமையாகும்.

புத்துயிர் ஒன்றிருப்பது நிஜமெனவும் அதை விரும்பினால் அடையலாம் எனவும் அறியாத ஜன சமூகமே உலகத்தில் நிறைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். சென்ற நானூறு ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பா முழுவதும் இத்தகைய மயக்கத்திலேயே யிருந்து வந்ததை யாவரும் அறிவர். புத்துயிரைக் கண்டு கொண்ட பின்னரே ஐரோப்பிய ஜாதியார் புத்துயிர் பெற்று நாகரீகர்களாகத் தொடங்கினர். நம் கீழ் நாடுகளும் அங்ஙனமே சென்று போன சிலவாண்டுகள் வரை புத்துயிரை மறந்து அடிமைத்தனத்தாலும் அறிவீனத்தாலும் கஷ்டப்பட்டுவந்தன. தற்போதே புத்துயிரின் நிலையையும் புத்துயிரைக் கைக்கொள்ளும் வகையையும் அறியத் தொடங்கி யிருக்கின்றன. இனி நம் கீழ் நாடுகள் உயர்பதவியை யடைவதில் தடைகள் ஒன்று மில்லை யென்பது நிஜமாகும்.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் புத்துயிர் பெற முயல வேண்டும்.

புத்துயிரைச் சதா பெருக்கிக் கொண்டே யிருத்தல் வேண்டும்.

பயம் கஷ்டங்களைக் கண்டு நடுங்குதல், அடிமைப்புத்தி, அடிமை வார்த்தைகள், அடிமை வழக்கங்கள், சுய நலம், தூக்கவழக்கம், சோம்பல், பின்வாங்குதல், பொறுப்பற்ற நட்பு, அன்பற்ற ஆர்வம், முதலிய கெட்ட குணங்களை நாம் அடியுடன் நீக்கி விடல் வேண்டும்.

தளரா நெஞ்சம், ஊக்கம், உற்சாகம், மனோ திடம், ஏகாக்கிர சித்தம், பொய்யின்மை, உண்மை, வைராக்கியம், பிடிவாதம், ஹடம், சாகஸம், திடம், விடாமுயற்சி, எந்தத் துன்பங்களையும் சகித்தல், சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றுதல், சொல்லியபடி அல்லது ஒப்புக்கொண்டபடி செய்து முடித்தல், மூட சகவாசம், துஷ்டச் சேர்க்கை இவைகளை நீக்குதல் முதலிய வைகளைப் பெருக்கிக் கொண்டே யிருத்தல் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேல் ஒவ்வொரு நாளும் நாம் இழந்த பிராண சக்தியை மறுநாட்காலையில் அல்லது ஒவ்வொரு நாட் காலையிலும் "பிராண சம்பாத்தியம்" என்ற முறையினால் பெருக்கிக் கொள்ள வேண்டும். இச்செய்கை விடாப் பிடிவாதமான விரதமாக விருத்தல் வேண்டும்.

அவனே மனிதன், அவனே, பெண், அவனே நீண்டாயுளும் விஞ்ஞானமும் உள்ளவன். அவனே 'புத்துயிர்'பெறத் தகுதியுள்ளவன்.

உண்மையாகவே மனிதவாழ்வின் பயனை அறிந்தவன் புத்துயிரின் சக்தியை யறிந்தவனாகவே யிருக்கிறான் என்பதை ஒரு சிலரே யறிந்தவர்களாக விருக்கிறார்கள். இக்குறையை நீக்குவது புத்துயிரை யறிந்த ஒவ்வொருவரின் கடமை யாகக் கொள்ளுதல் அவசியமாகும்.

புத்துயிர் பெற்றுப் புவியில் புகழ் பெருக்கிச்
சத்தியில் வல்லோனாய்த் தன் மதிப்போ--டெத்
(தினமும்
ஓயாத வூக்கத்துயர வுயர் வெய்தி
வீயாது வாழல் விதி.

வந்ே மாதரம்.

அரி சுவடி

(மயிலை சீனி. வேங்கிடசாமி எழுதியது)

இந்நிலவுலகில் மக்களால் வழங்கப்படும் மருத்துவ நூல், தாவர நூல், சோதிட நூல், விவசாய நூல், தேச சரித்திரம், பூகோளம், தர்க்கம் முதலிய பல நூல்களும் தத்தங் கருத்துக்களை வாக்கியங்களால் தெரிவிக்கின்றன. வாக்கியம் பல சொற்களா லமைந்தது. சொல்லும், ஒன்று அல்லது பல எழுத்துக்கள் சேர்ந்துண்டாயது. ஆகவே, மக்களும் முதலில் எழுத்தையும் பின்னர் சொல்லையும் அதற்கு மேல் வாக்கியத்தையுங் கற்று நூலாராய்ச்சி செய்கிறார்கள்.

சொல்லுக்கு முதற்காரணமா யிருப்பது எழுத் தென்று சொன்னோம். அவ்வெழுத்துக்களின் உருவம் இருவகைப்படும். ஒன்று ஒலிவடிவு; மற்றொன்று வரிவடிவு. ஒலிவடிவு, செவிப்புலன் வழியாய் அறியப்படும் எழுத்தோசையாம். வரிவடிவு, மணல், ஏடு, பலகை முதலியவற்றின் மேல் வரைவதால், கட்புலன் வழியாய் அறியப்படும் எழுத்தாம். நாம் படிக்கும்போதும் எழுதும் போதும், எழுத்துக்களின் வரிவடிவையே காண்கிறோம்; எழு கிறோம்.

நாம் புத்தகத்தைப் படிக்கிறோம். புத்த என்னும் சொல்லுக்குத் தமிழில் சுவடி என் பெயர். இக்காலத்தில் புத்தகம் என் வழக்கு சாதாரணமாக வழங்கப்படுகிறதுபே பண்டைக் காலத்தில் சுவடி என்னும் செ வழங்கிவந்தது. சுவடி என்பது சுவடு என்னும் சொல்லி னின்றுண்டாயது. சுவடு என்ப தன் பொருள் அடையாளம், பதிவு என்பன வாம். எழுத்துக்களின் பதிவைத் தன்னிடம்

கொண்டுள்ளமையால் புத்தகத்திற்குச் சுவடி என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. புத்தகம் என்பதைவிட சுவடி என்பதே அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது.

சிறு பிள்ளைகள் முதன் முதல் எழுத்தைக் கற்க வேண்டியவர்களாதலால், அதற்கென ஏற்பட்ட சுவடி எழுத்துக்களின் வரிவடிவைமாத்திர முடையதாய் அமைக்கப்பட்டது. ஒவ்வொருநூலுக்கும் (சுவடிக்கும்) ஒவ்வொரு பெயர் இருக்கவேண்டுவது அவசியமாகலின், சிறுபிள்ளைகளின் எழுத்துச் சுவடிக்கும் ஒரு பெயர் அமைக்க வேண்டியதாயிற்று. ஆகவே, பிள்ளைகள் முதலில் படிக்கும் சுவடி எழுத்துக்களின் வரிவடிவைத்தன்னிடங்கொண்டிருப்பதாலும், எழுத்துக்களின் உருவத்தை (வரிவடிவை) தெரிவிப்பதற்காகவே ஏற்பட்டபடியாலும் அதற்கு வரிசுவடி என்று நமது அறிவு சான்ற பண்டைப் பெரியோர் பெயரிட்டிருக்க வேண்டும்.

ஆனல், நாமும் நமது முன்னேரும் படித்த இப்போதும் சில தெருப் பள்ளிக் கூடங் ல் கணக்காயர்களால் (கணக்காயர்-ஆரம்ப சிரியர்-Elementary School Teachers) கற்பிக்கப்படுவதும் அரிசுவடி யாயிற்றே; வரிசுவடி யல்லவே யெனின்,—உண்மைதான்; வரிசுவடி என்னுஞ் சொல் நாளடைவில் அரிசுவடி என்று திரிந்து வழங்குகிறது போலும். இத்திரிபைத் திருத்தாமலே. இன்றும் அரிசுவடி யென்றே வழங்கி வருகிறோம், நிற்க.

வரிசுவடியின் திரிபாய அரிசுவடி தானும் இக்காலத்துப் பெரும்பாலும் வழக்கொழிந்து "சிறுவர்களுக்குத் தண்டனை" என்று பொருள் படும் "பால சிக்ஷை" என்றும் 'முதல் வாசகம்' என்றும் பல பெயருள்ள சுவடிகள் வழங்கி வருகின்றன. அவைதானும்,

"சிறப்பினும் இனத்தினுஞ் செறிந்தீண்டம் முதல்
நடத்தல்தானே முறையா குமமே"

என்னும் சூத்திரக் கருத்தையும் மறந்து டகரத்தையும் பகரத்தையும் சிறுவர்களும் ஆரம்பத்திலேயே கற்பிக்கத் தொடங்கி விட்டன. இதற்குக் காரணம் பகாமும் ட காமும் இரண்டு மூன்று நேர் கோடுகளால் அமைந்தனவாகலின், பிள்ளைகள் அதனை விரைவில் எழுதக் கற்றுக் கொள்வார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனல், சிறுவர்கள் கோடுகளை நோாக வரைவதற்கு அதிகமாக முட்டுப்படுவதையும் வளைவான கோடுகளை வருத்த மில்லாமல் எழுதுவதையும், அவர்களின் இயற்கையை உற்று நோக்கியவர்கள் நன்குணர்வார்கள். அகரம், ஏனைய எழுத்துக்களைவிட, எழுதுவதற்குக் கஷ்டமானதென்று வைத்துக் கொண்டாலும், அதனைச் சற்று கஷ்டத்துடன் முதலில் கற்பிப்பதனல் நன்மையேயன்றி தீமையாகாது. எங்ஙனமெனின் கஷ்டமான எழுத்தை எழுதத் தெரிந்து கொண்ட பிள்ளை ஏனைய எழுத்துக்களைச் சுலபமாக எழுதக்கற்குமன்றோ?

இனி, இக்கட்டுரையின் கருத்து, பிள்ளைகளுக்கு எழுத்துக்களின் வரிவடிவைக் கற்பிக்கும் சுவடிக்கு வரிசுவடி என்னும் காரணப் பெயரை நமது பண்டைப் பெரியோர் வழங்கியிருக்க வேண்டுமென்பதும், அச்சொல் பிற்றை ஞான்று அரிசுவடி எனமருவி வழங்கி வருகிறதென்று நினைக்க இடந்தருகிறதென்பதும், எழுத்துக்களைக் கற்பிக்கும் போது முதலில் அகாத்தை முதலாகவுடைய உயிரெழுத்துக்களையும் பின்னர் மெய்யெழுத்துக்களையும் முறைப்படி கற்பிக்க வேண்டியதுவான்முறை என்பது மாம்.



இந்திய மாதர் தற்கால நிலை.

ஸ்ரீ. நிர்மல சந்திர பாலர், எம். ஏ; பி. எல். எழுதியது.

பண்டு பெண்கள் புருஷர் சொத்தாக இருந்தனர். புருஷர்கள் தம்மிஷ்டப்படி பெண்களை விற்கவும் வாங்கவும் செய்தனர். புராதன கிரேக்கர்கள் தம் மனைவிகளையும் புத்திரிகளையும் வீட்டுத் தட்டு முட்டுகளைப் போல் விற்கவும் இரவல் கொடுக்கவும் செய்தனர். ஞானியான சாக்ரடீசும் தம் மனைவி சாந்திபேயை தம் சிஷ்யர்களில் ஒருவருக்கும் நண்பரான அல்சிபியேடசுக்கும் இரவல் கொடுத்தனராம். ஸ்பார்த்தர்கள் தம் மனைவிகளை இரவல் கொடுப்பதும் பிறர் மனைவிகளை இரவல் வாங்குவதும் பெருந்தகைச் செயலாக மதித்திருந்தனர். யூதர், பாபிலோனியர் முதலிய ஜாதியாருள்ளும் இத்தகைய உணர்ச்சி இருந்ததாகத் தெரிகிறது. ஆதியில் இந்தியாவிலும் பெண்கள் வியாபாரச் சரக்காகவே இருந்தனர். நாரத தர்மசாஸ்திரத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. "ஒருவன் விலைக்கு வாங்கின பெண்ணின் சந்ததிகளும் அவனுக்கே சொந்தம். ஒருவன் விலை கொடாமல் ஒரு பெண்ணை வாங்கினால் அப்பெண்ணின் சந்ததிகள் அப்பெண்ணின் உண்மைக் கணவனுக்கே சொந்தம்."

பூர்வீக ஹிந்துக்கள் கையாண்டு வந்த அசுர மணமும் ஒருவகைப் பெண் வர்த்தகமே.

மத்திய காலம்.

மத்திய காலத்தில் பெண்கள் நிலைமை சிறிது மாற்றமடைந்தது. பெண்களும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென மதிக்கப்பட்டனர்; எனினும் புருஷர்களுக்கு அடிமைகளாகவே இருந்தனர். புருஷர் தேவையைப் பூர்த்தி செய்வதே பெண்ஜன்மத்தின் கடமையென கம்பப் பட்டது. பெண்கள் பாப மூட்டைகளெனினும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்கள் என சாஸ்திரங்களும் கோஷிக்கின்றன. பெண்களுக்கு ஆத்மா இல்லாததினால் அவர்களுக்கு மதம் தேவையில்லை யென்று மத்திய காலத்துக் கூடிய ஒரு பாதிரிக் கூட்டத்தார் தீர்மானித்தனராம். பெண்கள் பழிபாவக்குடியிருப் பென்றும் சூத்திரர்களைப் போலவே பெண்களுக்கும் வேதம் பயில உரிமையில்லை யென்றும் நமது ஆதி சங்கராசாரியரும் விதித்திருக்கின்றனர்.

அக்காலச் சட்டப்படி பெண்களுக்கு எத்தகைய உரிமையு மிருந்ததில்லை. சுதந்தர வாழ்க்கையும் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இளமையில் பெற்றோருக்கும், விவாகத்துக்குப் பின் புருஷனுக்கும் வைதவ் புத்திரர்களுக்கும் பெண்கள் அடங்கி நட வேண்டும்.

ஐரோப்பிய மாதர் நிலை.

ஜனநாயக உணர்ச்சி உதயமாயிருக்கும் இக்காலத்தில் அதிர்ஷ்டவசமாக, பெண்களுக்கும் சம அந்தஸ்தும் உரிமையும் அளிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உருப்பெற்றுவருகிறது. பிரஞ்சுப் புரட்சிக்குப்பிறகே இந்த அபிப்பிராயம் தோன்றத் தொடங்கிற்று. 1789-ல் பிரஞ்சுப் புரட்சி யுண்டான போது, புருஷர்களுக்குள்ள உரிமைகளெல்லாம் தமக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று பெண்க தேசிய சபையில் விண்ணப்பம் செய்தன பிரஞ்சு புரட்சியால் உருப் பெற்ற சமத்து சகோதரத்துவ சுதந்தர உணர்ச்சி உலக மு தும் பரவத் தொடங்கிற்று. ஐரோப்பிய தேச களிலெல்லாம் பெண்கள் விடுதலை முழ கம் எழுந்தது. இங்கிலாந்தில் ஜான் ஸ்டுவார் மில் "பெண்கள் அடிமைத்தனம்" என்ற நூலை வெளியிட்டார். புருஷர்களுக்குள்ள உரிமைகளெல்லாம் பெண்களுக்கும் அளிக்கப் பட வேண்டும் என்பது அந்நூலின் சாரம். கல்வி கற்ற பெண்களும் மில்லின் கொள்கையைப் பின்பற்றித் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தனர். எனினும் 1882 வரை பெண்கள் நிலை

மையில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. 1882-ல் விவாகமான பெண்களின் சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அந்தச் சட்டப்படி பெண்கள் தம் சொந்தப் பேரால் சொத்து வைத்துக் கொள்ளவும் வாங்கவும், கிரய விக்கிரயம் செய்யவும் தொழிலாற்றவும் உரிமை வழங்கப்பட்டது. அரசியல் விஷயங்களிலும் சம உரிமை கிடைக்க வேண்டுமென்று, சென்ற மகாயுத்தம் வரைப் பெண்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். பொது வாழ்வு நடத்த பெண்களுக்குள்ள ஆற்றல் வெளியாவதற்கு மகாயுத்த காலத்தில் ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டது. மகாயுத்த காலத்தில் பெண்கள் ஆற்றிய பொதுஜன சேவையின் பயனாக, யுத்தம் முடிந்தவுடன் பெண்களுக்கு வாக்குச் சுதந்தரம் (ஓட்டுரிமை) அளிக்கப்பட்டது. ஓட்டுரிமை அளிக்கப்பட்டதோடு சட்ட சம்பந்தமாக பெண்களுக்கிருந்த குறைபாடுகளெல்லாம் ஒழியத் தொடங்கின. அடுத்த வருஷத்தில் பால் வேற்றுமை ஒழிப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்துக்கு அநுரூபமாக ஏனைய சட்டங்களும் திருத்தப் பட்டன. இன்னும் மீதமாயிருக்கும் அற்ப சொற்பக் குறைபாடுகளை ஒழிப்பதற்கு பார்லமெண்டில் முயற்சிகளும் நடந்து வருகின்றன.

இந்திய மாதர் நிலை.

இந்தியாவிலும் அநேக வருஷங்களுக்கு முன்பே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப் பட்டுள்ளது. சில மாகாணங்களில் பெண்கள் சட்டசபை அங்கத்தினராகவும் இருக்கின்றனர். எனினும் சட்டசம்பந்தமாகப் பெண்களுக்குள்ள குறைபாடுகள் நீங்கவில்லை.

பலதார மணம் தேவையா ?

இந்தியப் பெண்களின் குறைபாடுகளிற் பல பயங்கரமாயும் அவமானகரமாயுமிருக்கின்றன. நாகரிகம் பெற்ற நாடுகளிலெல்லாம் விவாகம் ஒரு புனிதச் சடங்காக மதிக்கப்பட்டிருக்கிறது. பெண்களும் புருஷர்களும் தத்தமக்குப் பிரியமுடையவர்களை மணஞ் செய்கிறார்கள். விவாகம் செய்த புருஷன் வேறு பெண்ணுடன் வாழக்கூடாது; பெண்ணும் அந்நிய புருஷனைத் தீண்டக் கூடாது. இந்தியாவிலோ பெண்கள் விஷயத்தில் மட்டுமே இந்தக் கட்டுப்பாடு வற்புறுத்தப் படுகிறது. ஹிந்து சட்டப்படியும் முஸ்லிம் சட்டப்படியும் புருஷர்களுக்குப் பல பெண்களை மணக்க உரிமை இருக்கிறது. பெண்களுக்கு அத்தகைய உரிமையில்லை. பொருளாதார காரணங்களை முன்னிட்டு, பலதார மணம் குறைந்து வருகிறதாயினும் சட்டப்படி பலதாரமணம் ஒழிக்கப் பட்டாலன்றி, பெண்கள் குறை நீங்காது. பலதாரமணத்தை ஆதரிப்பாரும் அதிகமில்லை. எனினும் அதை ஒழிக்க ஒருவராவது முயற்சிப்பதில்லை. ஸ்ரீ அமீர் அலி எழுதிய "இஸ்லாமின் நோக்கம்" என்னும் புத்தகத்தில் பலதார மணம் நபிகள் நாயகத்தின் போதனைக்கு மாறானதென்று கூறியிருக்கிறார். முஸ்தபகமால் பாஷா துருக்கியில் பலதார மணத்தை ஒழித்து ஏகதாரமணத்தை நிலைநாட்டி விட்டார். எனவே ஹிந்துக்கள் மட்டும் பல தார மணம் செய்வது ஒழுங்காகுமா ? அந்திய கருமங்கள் செய்ய ஒரு மகன் தேவை என்று வைதீக ஹிந்துக்கள் விரும்புகிறார்களானால் ஒரு புத்திரனை அவர்கள் ஏன் ஸ்வீகாரம் செய்யக் கூடாது ? தன் சொந்த புத்திரனுக்குள்ள உரிமைகளெல்லாம் சட்டப் படியும் மதாசாரப் படியும் ஸ்வீகார புத்திரனுக்கு இருக்கும்போது, ஒரு புத்திரனைப் பெறுவதற்காக ஹிந்துக்கள் ஏன் இரண்டா முறை விவாகம் செய்ய வேண்டும்? பெண்கள் புருஷர்களுக் கடங்காது போய் விட்டால் ஏகதார மணக் கட்டுப் பாட்டுக் குட்பட்ட புருஷன் கதி என்னாகுமென்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் பன்னூன்றாண்டு காலமாக அதேகஷ்டத்தைப் பெண்கள் அனுஷ்டித்து வருகிறதை மட்டும் அவர்கள் கவனிப்பதில்லை. பலதார மணத்தை ஒழித்து ஏகதார மணத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தால் புருஷர்கள் கள்ளப்புணர்ச்சியிலீடுபடுமாறு தூண்டப்படுவார்கள் என்று வேறொரு சாரார் வாதம் செய்கிறார்கள். ஆனால் புருஷர் பல தாரமணம் செய்யச் சம்மதியளிக்கும் நாம், புருஷர்களால் உபேட்சிக்கப்பட்ட பெண்கள், சட்டப்படி புனர் விவாகம் செய்வதைத் தடுத்து, கள்ளப்புணர்ச்சியிலீடுபடுமாறு தூண்டவில்லையா ? விவாக விடுதலைச்சட்டம் ஏற்படுத்தாமலே ஏகதாரச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் புருஷர்களுக்கு உண்டாகும் துன்பத்தைவிட, பல தார மணத்தால் பெண்கள் தற்காலம் அனுபவிக்கும் துன்பம் எவ்வளவோ ஜாஸ்தியானதென்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

தற்கால நிலைமையில், ஹிந்து விவாகத்தை ரத்துசெய்ய முடியாத ஒரு புனிதச் சடங்கென எவ்வாறு ஒப்புக்கொள்ளலாம்? முஸ்லீம்களும் ஹிந்துக்களும் முதல் மனைவி உயிரோடி

ருக்கையில் தம்மிஷ்டப்படி எத்தனை பெண்களை வேண்டுமானாலும் விவாகம் செய்கிறார்கள். தன் புருஷனால் கைவிடப்பட்ட ஒரு ஹிந்துப்பெண்ணோ முஸ்லிம் பெண்ணோ, தன் புருஷன் உயிரோடிருக்கையில் வேறு புருஷனை மணந்தால் இ. பி. கோ. 494-வது வகுப்புப்படி, வியபிசார வழக்குத் தொடரப்பட்டு 7 வருஷத்துக்குக் குறையாத சிறைவாசத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுகிறாள்.

மனைவி வியபிசாரியாய் விட்டால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் அவளை நடுத்தெருவில் விரட்டி விடுகிறார்கள். அவளது ஜீவனாம்சத்திக்கு வழி விடவும் சட்டப்படி எத்தகைய கட்டுப்பாடும் இல்லை. புருஷர்களுக்கோ அவர்கள் இஷ்டப்படி வியபிசாரம் செய்யலாம்; வைப்பாட்டிகளை வைத்துக் கொள்ளலாம். இத்தகைய அநியாயங்களுக்கு இடமளிக்கும் சட்டமும் ஒரு சட்டமாகுமா? அம்மட்டோ! புருஷன் வியபிசாரியான காரணத்தால், மனைவி அவன் கூட வாழ மறுத்தால், தன் கூட வாழும்படி கோர்ட்டுத் தீர்ப்பு மூலம் கட்டாயப்படுத்தவும் புருஷனுக்கு "உரிமையிருக்கிறது. இந்தச் சட்டத்துக்கு ஆதாரமாக மனுஸ்மிருதி கூறுவதாவது—"புருஷன் துர்நடத்தைக் காரனாயிருந்தாலும் வைப்பாட்டி வைத்திருந்தாலும், மூர்க்கனாயிருந்தாலும் கற்புடைய மனைவி அவனைக் கடவுளாகவே பாவிக்கவேண்டும்".

இதைப்பற்றி ஒரு பெயர்பெற்ற ஹிந்து வக்கீல் வியாக்கியானம் செய்திருப்பதாவது:— "மனு வகுத்திருக்கும் இந்த விதியால் தன் கஷ்டங்களைத் தாங்கும் உணர்ச்சி மனைவிக்கு உண்டாய் விடுகிறது. புருஷன் எவ்வளவு கஷ்டப்படுத்தினாலும் அவனுக்குத் திருப்தியாக நடக்கவேண்டியது தன் கடமை என மனைவி உணர்ந்து கொள்ளுகிறாள். எனவே புருஷன் மீது அவளுக்கு வன்ம உணர்ச்சி உண்டாவதில்லை."

அந்த வக்கீலைப் பற்றி எனக்கு மிக மதிப்புண்டானாலும், அவரது வியாக்கியானத்தை ஒப்புக் கொள்ள எனக்கு முடியவில்லை. பாரபட்சமற்ற நீதி வழங்குவதே சட்டத்தின் தலைமையான நோக்கம். பெண்களுக்கு ஒரு நீதியும் புருஷர்களுக்கு ஒரு நீதியும் வழங்கும் ஹிந்து சட்டம் ஒழுங்கான சட்டமாகுமா?

தற்கால விவாகம்.

தற்காலக் கலியாணம் ஒரு வெறும் கன்னிகா தானச் சடங்கே யாகும். தந்தையோ, தமயனோ, அல்லது சுற்றத்தாரோ பெண்ணைக் கைப்பிடித்துக் கொடுக்க புருஷன் பெண்ணை பாணிக்ரகணம் செய்கிறான். பெண் சுதந்தரமாகப் புருஷனை வரிப்பதில்லை. பெண்ணின் பெற்றோர் அல்லது சுற்றத்தார் விருப்பப் படியே கலியாணம் நடை பெறுகிறது. ஹிந்து 'லா'ப்படி புருஷன் தன்னிஷ்டப்படி பெண்ணை ஒப்புக் கொண்டால் மட்டிலுமே கலியாணம் செல்லுபடியாகும். ஆனால் இந்த சுதந்தரம் பெண்ணுக்கு இல்லை. பெண் இஷ்டத்துக்கு மாறாக பெற்றோரோ மற்றோரோ அவளைக் கலியாணம் செய்துகொடுத்தாலும் அந்தக் கலியாணம் ஹிந்து'லா'ப்படி செல்லத் தக்கதாகவே இருக்கிறது. பெண்கள் மைனர் களாயிருக்கும்போது நடக்கும் கலியாணங்களில் பெண்ணின் இஷ்டத்தைப் புறக் கணிப்பது ஒரு கால் சரியா யிருக்கலாம். ஆனால் இப்பொழுது பெண்கள் மேஜர் ஆனபிறகு கலியாணம் செய்வது சர்வ சாதாரணமா யிருப்பதால் பெண் இஷ்டத்தை கவனிக்க வேண்டியது அவசிய மல்லவா? வங்காளத்திலே தேசாசாரப்படி 15 வயதில் பெண்கள் மேஜராகி விவாகம் செய்ய உரிமை யுடையவர்கள் ஆகிறார்கள். எனவே தன் ஜீவிதகால முழுதையும் பாதிக்கக்கூடிய ஒரு சடங்கில் பெண்ணின் சம்மதத்தை அலக்ஷியம் செய்வது சட்டத்துக்கு ஒழுங்காகுமா? ஹிந்துப்பெண்கள் எப்பொழுதுமே மைனர்கள் என்பதுதான் ஹிந்து 'லா'வின் கருத்தா?

பெண் சம்மதம் பெறாமல் நடைபெறும் விவாகங்களெல்லாம் அமங்களமாக முடிகின்றன வென்று நான் அபிப்பிராயப் படவில்லை. ஹிந்து தம்பதிகளில் பெரும்பாலார் ஏனைய நாட்டு தம்பதிகளை விட சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்துகிறார்கள். அநேக மனைவிகள் தம் அடிமை வாழ்க்கையை யுணரும் சந்தர்ப்பம் வாய்க்காமலே வாழ்வது முண்டு. இதனால் ஹிந்துலாப்படி நமது பெண்களுக்குள்ள குறைபாடு பரிகாரமாகுமா? அநேக மனைவிகள் திருப்தியா யிருப்பதினால் சில பெண்களின் அதிருப்தியைக் கவனிக்க அவசிய மில்லை என்று ஏற்படுமா? மனிதனது மிருக குணத்துக்குப் பெண்கள் இரையாகாமல் தடுப்பது சட்டத்தின் தலைமையான கடமைகளில் ஒன்றாகும். ஹிந்துலாப்படி பெண்களுக்கு அளவற்ற குறைபாடுகள் இருப்பதால் புருஷர்களின் கொடுமைகளி லிருந்து காப்பாற்றப்படப்

பெண்கள் அசக்தர்களாக இருக்கிறார்கள். ஹிந்து லாப்படி விவாக விடுதலை கிடையாது. ஏகதார மணம் ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தால் விவாக விடுதலை யின்மையால் உண்டாகும் நன்மைகளையும் தின்மைகளையும் பெண்களும் புருஷர்களும் சமமாகவே அனுபவிப்பார்கள். ஆனால் புருஷர்களுக்குப் பல பெண்களை மணக்க உரிமை யிருப்பதினால் பெண்கள் துயரம் மிகுதியாகிறது. உதாரணமாக டாக்காவில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கே கூறுகிறேன். அந்தஸ்துடைய ஒரு குடும்பத்தில் பிறந்த பெண்ணை கல்விப் பயிற்சியுடைய ஒரு பணக்கார இளைஞன் விவாகம் செய்தான். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவனுக்கு பெண்ணிடம் எக் காரணத்தாலோ வெறுப்புத் தோன்ற, பெண்ணை தந்தை வீட்டுக்கு அனுப்பி விட்டு இரண்டாவது கலியாணம் செய்து கொண்டு ஒன்று மறியாதவன் போல் சுகமாக வாழ்கிறான். பெண்ணின் கதியோ அதோ கதியாய் விட்டது. தன்னைப் புருஷன் ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப் படுத்த சட்டப்படி அவளுக்கு உரிமை யில்லை. தன் பெற்றோரையும் இனத்தாரையும் மறந்து பிறமதம் புகுந்தாலன்றி அவளுக்குப் புனர் விவாகம் செய்து கொள்ள முடியாது. மதமாறிய பெண்ணுடன் புருஷனுக்கு வாழ இஷ்டமில்லையானால் விவாக விடுதலை யளிக்க ஹிந்து லா அனுமதி யளிக்கிறது. ஹிந்து மதப் பெண்களுக்கு விவாக விடுதலை பெற பெண்களுக்கு உரிமை யளிப்பதே தருமமாகும்.

முஸ்லீம் லா விவாக விடுதலைக்கு அனுமதி யளிக்கிறதாயினும், விவாக விடுதலைக் கான விதிகள் பாரபட்ச முடையனவா யிருக்கின்றன. ஒரு காரணமும் கூறாமல் பெண்ணை உபேக்ஷிக்கப் புருஷனுக்கு சுதந்தர மிருக்கிறது. புருஷன் சம்மதமின்றி விடுதலை பெறப் பெண்ணுக்கு உரிமை யில்லை. புருஷன் மனைவியை பட்டினி போட்டுக் கொன்றாலும், அவளைக் கண்ணெடுத்தும் பாராமல் ஒரு வைப்பாட்டி யுடன் வர்ழ்ந்தாலும் விவாக விடுதலை பெற பெண்களுக்கு உரிமை யில்லை. அகாரணமாகவும் பெண்ணை உபேக்ஷிக்கப் புருஷனுக்கு உரிமையிருக்கிறது. நியாயமான காரணங்களால் புருஷனை உபேக்ஷிக்கவும் பெண்களுக்கு உரிமை யில்லை.

இந்தியக் கிறிஸ்தவர்களுக்குள், பெண்கள் வியபிசாரியாய் விட்டால் அவர்களை உபேக்ஷிக்கப் புருஷர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் புருஷர்கள் வியபிசாரம் செய்தால் விவாக விடுதலைபெற பெண்களுக்கு உரிமை யில்லை. புருஷர்கள் வியபிசாரம் செய்வதுமன்றி தம்மைப் பட்டினி போட்டும் அடித்தும் கஷ்டப் படுத்துவதாக ருசுவானாலன்றி கிறிஸ்துவப் பெண்களுக்கு விடுதலை பெற முடியாது. வியபிசாரம் (புருஷர்கள் செய்தாலும்சரி, பெண்கள் செய்தாலும் சரி) எப்பொழுதும் குற்றகரமானதே. ஆகவே இங்கிலீஷ் விவாக சட்டப்படி வியபிசாரக் குற்றத்தினால் விடுதலை பெற புருஷர்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமை யளிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய மாதர் சொத்துரிமை.

இனி, புருஷனுக்கும் மனைவிக்கும் உள்ள பரஸ்பர சொத்துரிமையைப் பற்றி கவனிப்போம். ஆதியில் இங்கிலாந்தில் விவாகம், பெண்கள் சொத்துக்களை புருஷர்கள் பெறுவதற்குச் சாதகமான ஒரு சடங்காகவே இருந்து வந்தது. ஆனால் புருஷன் சொத்துக்கு சொந்தம் பாராட்டும் உரிமை பெண்களுக்கு அளிக்கப்படவில்லை. இங்கிலீஷ் சட்டப்படி விவாகத்துக்குப் பின் பெண்ணின் தனி வாழ்க்கை ஒழிந்து விடுகிறது. பெண் புருஷனோடு அபேதமாகக் கலந்து விடுகிறாள். ஐரோப்பிய தம்பதிகளில் புருஷனுக்குத்தான் சமூகத்தில் சட்டப்படி ஸ்தான முண்டு. பெண்கள் அநாமதேயர்கள் ஆய்விடுகிறார்கள். 1882-ல் விவாகமான பெண்களின் சொத்துரிமைச் சட்டம் நிறைவேறியபொழுது பெண்கள் நிலைமையில் மகத்தான மாற்றம் ஏற்பட்டது. பெண்ணுக்குச் சொந்தமான சொத்துக்களில் அவளுக்குத் தனியுரிமை யேற்பட்டது. அதைத் தன்னிஷ்டப்படி கையாளவும் அவள் அதிகாரம் பெற்றாள். 1925-ல் சொத்து நிருவாகச் சட்டம் நிறைவேறிய பொழுது பெண்கள் நிலைமை பின்னும் கொஞ்சங் கூட விருத்தியடைந்தது. தம்பதிகளில் யாராவது இறந்தால், மரணச்சடங்குச்செலவுபோக, மீதமுள்ள சொத்தில் (தம் சொந்தச் சொத்தைத்தவிர) 1000 பவுன் உயிரோடிருப்பவர் எடுத்துக்கொள்ளலாம். பின்னும் ஏதாவது மீதியிருந்தால், இறந்தவருக்குக் குழந்தைகளிருக்கும் பட்சத்தில் பகுதியை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதியை உயிரோடிருப்பவர் எடுத்துக் கொள்ளலாம். குழந்தைகள் இல்லையானால் முழுதுமே எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இங்கிலாந்தில்

இப்பொழுது புருஷன் சொத்தில் மனைவிக்கும் மனைவி சொத்தில் புருஷனுக்கும் சமமான உரிமை இருந்து வருகிறது.

இந்திய மாதர் சொத்துரிமை.

ஆங்கிலப் பெண்கள்சொத்துரிமை பெறுவதற்கு முன்னமேயே இந்தியாவில் ஹிந்து லாப்படியும் முஸ்லீம்லாப்படியும் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டிருக்கிறது. எனினும் இந்தியசட்டங்கள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தது போலவே இப்பொழுதும் இருக்கின்றன. இங்கிலாந்திலோ சென்ற 50 வருஷங்களுக்குள் பெண்களுக்கு அனுகூலமான பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. சீதன சொத்துக்களைத் தவிர ஏனைய சொத்துக்களில் ஹிந்துலாப்படி பெண்களுக்குப் பூரண சுதந்தரம் அளிக்கப்படவில்லை. சொத்துடைய பெண்கள் வருமானத்தை மட்டுமே தம்மிஷ்டப் படி செலவு செய்யலா மென்றும் மூல சொத்தை விற்பனை செய்ய முடியாதென்றும் ஹிந்துக்களுக்குள் பொதுவாக ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. பெண் இறந்தால் அவள் சொத்துக்க ளெல்லாம், அந்த சொத்துக்குக் கடைசியில் சொந்தக்காரனா யிருந்த புருஷன் சந்ததிகளுக்கு இறங்கிவிடும். பொதுவாக, சீதன சொத்தைத் தவிர ஏனைய சொத்துக்களை விற்கவோ, ஒற்றிவைக்கவோ, தானம் செய்யவோ பெண்களுக்கு உரிமை யில்லை. புருஷன் ஆயுட் காலத்தில் சீதனச் சொத்தைக் கூட புருஷன் சம்மதம் பெறாமல் விற்க மனைவிக்கு உரிமை யில்லை. தம் பந்துக்கள் அன்பு மேலீட்டினால் அளித்த சௌதாயிக சீதனச் சொத்துக்களைப் பெண்கள் விற்கவோ, ஒற்றி வைக்கவோ, தானம் கொடுக்கவோ செய்யலாம். தன் சொந்த சம்பாத்தியத்தினால் தேடிய சொத்துக்களையும் கணவன் அநுமதி யின்றி விற்கவோ, தானம் செய்யவோ உயில் எழுதவோ மனைவிக்கு உரிமை யில்லை. ஆனால் புருஷனுக்குத் தேவை யுண்டாகும் காலத்தில் மனைவி சம்மதி பெறாமல் அவளது சீதன சொத்துக்களை விற்பதற்கு ஹிந்து லா அனுமதி யளிக்கிறது. பெண்கள் சம்பாத்திய விஷயமாகவுள்ள ஹிந்து லா நிபந்தனைகள் மிகவும் மோசமானவை. மனைவி சம்பாத்தியத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றவும் தன்னிஷ்டப்படி செலவு செய்யவும் புருஷனுக்கு அதிகார மிருக்கிறது. பண்டு பெண்கள் சூத்திரரினும் கடையான அடிமைகளாய் மதிக்கப்பட்டு வந்ததை மேலே கூறிய குறை பாடுகள் நினைப்பூட்டுகின்றன. ஆனால் அடிமைகள் எவ்வளவோ காலத்துக்கு முன்பே விடுதலை பெற்று விட்டனராயினும் பெண்கள் மட்டும் பூரண சுதந்தரம் பெறாமல் வருந்துகின்றனர். எனவே மேலும் காலந் தாழ்த்தாது பெண்கள் விடுதலைக்காக நாம் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும். கலியாணம் என்பது பெண்களைப் புருஷர்களுக்கு அடிமையாக்கும் சடங்கல்ல வென்று நாம் உணர வேண்டும்.

முஸ்லீம் மாதர் சொத்துரிமை.

பெண்கள் சொத்துரிமை விஷயத்தில்ஹிந்து லாவைவிட முகமதிய லா தாராள நோக்குடையது. முகமதிய லாப்படி பெண்ணின் சொந்தச் சொத்துக்கள் அவளுக்கே சொந்தம். அவளுக்கு சொத்தைக் கையாட்சி செய்ய பூரண சுதந்தர முண்டு. பெண் சம்பாத்தியக்காரியா யிருந்தால் சம்பாத்தியத்தை அவள் இஷ்டப் படி செலவு செய்யலாம். முஸ்லீம் மனைவியின் சொத்தில் கணவனுக்கு எத்தகைய உரிமையு மில்லை.

கணவன் சந்ததியின்றி இறக்கவும், இறக்கும் காலத்தில் மனைவி அவனோடு ஐக்கியமாக வாழவும் நேர்ந்தால் மனைவி கணவன் சொத்து முழுதையும் பெறலாம். மனைவி வாரிசின்றி யிறந்தால் அவளது ஸ்திரீதன சொத்துக்களைப் பெறக் கணவனுக்கு உரிமையுண்டு. ஆனால் மனைவி இறக்கும் காலத்தில் கணவன் அவளோடு ஐக்கியமாக வாழ்ந்திருக்கவேண்டுமென்று நிபந்தனை யில்லை. பொதுவாக ஹிந்து லாப்படி பெண்களுக்குப் பூரண சுதந்தரமில்லையாதலால், புருஷன் இறந்த பிறகு கிடைக்கும் சொத்திலும் விதவைக்குப் பூரண சுதந்தரமில்லை. கணவனுக்கோ தன் மனைவியிடமிருந்து பெறும் சொத்தில் பூரண சுதந்தரமுண்டு. முகம்மதியர்களுக்குள் மனைவி யிறந்தால் அவள் சொத்தில் நான்கிலொரு பகுதியோ விதவைக்குப் போகும்.

தாயார் உரிமை.

இனி, தாய்மாரின் உரிமையைப்பற்றிக் கவனிப்போம். இந்தியக் குடும்பங்களில் தாயைவிடத் தந்தைக்கே குழந்தைகள்மீது ஜாஸ்தி அதிகார மிருக்கிறது. ஹிந்து லாப்படியும் முகம்மதிய லாப்படியும் மைனர் குழந்தைகளைக் காப்பாற்றவும் அவர்கள் சொத்துக்களை நிருவாகம் செய்யவும் தந்தைக்கே அதிகாரமுண்டு

தந்தை உயிரோடிருக்கும் காலங்களில் தாய்க்கு எத்தகைய அதிகாரமு மில்லை. தந்தையும் தாயும் பிரிந்திருந்தால் குழந்தைகளைக் காப்பாற்றும் பொற்றுப்பு குழந்தைகள் எவ்வளவு பால்யமாயிருந்தாலும் சரி, தந்தைக்கே உரியது. குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயத்திலும் விவாக விஷயத்திலும் தந்தைக்கே தாயைவிட அதிகாரம் மிகுதி. ஹிந்துத் தந்தை மத மாறினாலும் குழந்தை யின்மீது அவனுக்குள்ள அதிகாரம் பறிமுத லாவதில்லை. தாய் மதமாறினால், குழந்தைகளை அவளிடமிருந்து பிரித்து, தந்தையிடமோ அல்லது தந்தையின் மதத்தைப் பின்பற்றும் அந்நியரிடமோ விட்டுவைக்கக் கோர்ட்டுக்கு அதிகார மிருக்கிறது. சாதாரணமாக, தந்தை யிறந்த பிறகு தாயே குழந்தைகளுக்கு இரட்சைகர்த்தா ஆகிறாள். மரண காலத்தில் வாக்கு மூலமோ எழுத்து மூலமோ தன் குழந்தைகளுக்கு அன்னியரை இரட்சை கர்த்தாவாக்க ஹிந்துக்களுக்கு உரிமை யுண்டு. கணவனே, கணவனது தந்தைவழிச் சுற்றத்தாரோ உயிரோடிருக்கையில் தன் மகளை கலியாணம் செய்து கொடுக்க ஹிந்துலாப்படி தாய்க்கு உரிமையில்லை. ஸ்வீகாரம் செய்யும் உரிமையும் தந்தைக்கே யுண்டு, தாய்க்கு இல்லை. தாயின் விருப்பத்துக்கு மாறாக தந்தை ஒரு குழந்தையை ஸ்வீகாரம் செய்தாலும் தாய் அக்குழந்தையை வாரிசாக ஒப்புக்கொள்ள வேண்டியது தான். தாய் இறந்த பிறகு அவளது சீதனச் சொத்திலும் அந்த ஸ்வீகார புத்திரனுக்கு உரிமையுண்டு. பொதுவாக, இந்தியக்குழந்தைகள் தந்தைக்கும், தந்தைக்குப் பிறகு தந்தையால் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கும் சொந்தமே தவிர தாய்க்குச் சொந்தமானவர்க ளல்ல.

மைனர் குழந்தைகள் பாதுகாப்பு விஷயத்தில் 1925-வரை இங்கிலீஷ் லாவும் அநேகமாக ஹிந்து லாவுக்கு சமமாகவே இருந்தது. 1919-ல் பால்வேற்றுமை நீக்கச் சட்டம் நிறைவேறியதோடு மைனர் குழந்தைகள் பாதுகாப்புக்கும் பெண்களுக்கும் உரிமையளிக்கப்பட்டது.

புத்திரிகள் உரிமை.

ஹிந்து லாப்படி தந்தை சொத்தில் புத்திரிகளுக்கு உரிமையே யில்லை. பெண்களை இவ்வளவு அலக்ஷியமாக ஒதுக்கியத் தள்ளிய சட்டம் உலகத்தில் வேறெங்குமே கிடையாது. இங்கிலீஷ் லாப்படி பெற்றோர் சொத்தில் புத்திரிகளுக்கும் சம உரிமை யுண்டு. முகமதிய சட்டப்படி பெற்றோர் சொத்தில் மகனுக்கு ஒருபங்கும் மகளுக்கு பாதிப்பங்கும் அளிக்கப்படுகிறது. ஹிந்துக்களல்லாதாரையும் முகமதியரல்லாதாரையும் பாதிக்கும் இந்திய வாரிசுரிமைச் சட்டப்படி (Indian Succession Act) பெற்றோர் சொத்தில் புத்திரிகளுக்கும் புத்திரர்களுக்கும் சமபங்கு விதிக்கப்பட்டிருக்கிறது. தந்தை சொத்தில் புத்திரிகளுக்கும் உரிமையளிக்கப் பட்டால் பெண்கள் கலியாண விஷயத்தில் ஹிந்துக்குடும்பங்கள் அனுபவிக்கும் கஷ்டம் அநேகமாக ஒழிந்து விடக்கூடும்.

வங்காளத்தில் ஹிந்து லாப்படி சகோதரன் சொத்துக்கு சகோதரி உரியவளல்ல. ஒரு சகோதரன் வாரிசின்றி இறந்தால் அவன் சொத்து சகோதரருக்குச்சேருமே யன்றி சகோதரிக்குக் கிடையாது. கலியாணமாகாத சகோதரி யிறந்தால் அவளுக்குத் தாய்வழியாக வந்த சொத்துக்கு சகோதரன் உரிமையுடையவனாகிறான்.

நாம் செய்யவேண்டிய தென்ன ?

மேலே கூறிய வரலாறுகளால் சட்ட சம்மதமாக, பெண்கள் புருஷர்களை விட எவ்வளவு கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள் என்பது விளங்கும். மனைவி நிலையிலும் தாய்நிலையிலும் மகள் நிலையிலும் சகோதரி நிலையிலும் பெண்கள் மிகவும் இழிவான ஸ்திதியிலேயே இருக்கிறார்கள். சட்டசம்பந்தமாக பெண்கள் மிக்க கேவல நிலைமையிலிருப்பதால் நாம் பெண்களை இழிவு படுத்துகிறோம், என்று நான் கூறவில்லை. இந்திய மாதர்களை இந்தியர்களாகிய நாம் மிக கண்ணியமாகவே நடத்தி வருகிறோம். இவ்விஷயத்தில் உலகத்திலுள்ள வேறெந்த ஜாதியாருக்கும் நாம் பிற்பட்டவர்களல்ல. இந்திய இல்லங்களுக்கு மாதர்களே அரசியாக இருக்கிறார்கள். பெண்களைத் தாயாகக் கருதும் பெருமை இந்தியாவுக்கே உரியது. “பெண்கள் கண்ணியம் செய்யப்பட்டால் தேவர்கள் மகிழ்வார்கள். பெண்கள் அவமதிக்கப்பட்டால் தேவ பூசனையால் ஒரு பயனுமுண்டாகாது.” என மனுஸ்மிருதி கூறுகிறது.” “பெண்கள் நூறு குற்றம் செய்தாலும் அவர்களை ஒரு பூவாலும் அடியாதே” என வேறொரு ஞானி எச்சரித்

திருக்கிறார். ஆகவே பெண்களிடத்து நாம் காட்டும் பக்தி விசுவாசத்தைப்பற்றி சந்தேகமேயில்லை. எனினும் சட்ட விஷயத்தில் புருஷர்களைவிடத் தாழ்வான நிலைமையில் பெண்களை வைத்திருப்பது தருமமாகாது. சமுதாய ஆசாரங்களால் ஏற்படும் குறைகளை நீக்குவதே சட்டத்தின் நோக்கம். பைத்தியக்காரர்களுக்கும், மூடர்களுக்கும், மைனர்களுக்கும் சட்ட சம்பந்தமான உரிமைகள் இல்லை. அறிவில் பெண்கள் புருஷர்களைவிடக் குறைந்தவர்கள் என்று ஒருவரும் சொல்லத் துணிய மாட்டார்கள். ஏனைய விஷயங்களிலும் பெண்கள் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களல்ல. எனவே இந்தியாவில் மட்டும் பெண்களுக்கு இத்தகைய சட்டசம்பந்தமான குறைபாடுகள் என் இருக்க வேண்டும்? நாகரீக நாட்டாரெல்லாம் பெண்களுக்கு சம உரிமை யளித்து விட்டார்கள். நாம் தான் பின்னணியில் நிற்கிறோம். பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் தோன்றிய சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நம்மைப் போல திருப்தியோடு வாழ்பவர்களை வேறெங்குமே காண முடியாது. பெண்களுக்கு சம உரிமை யளிக்காத நாம் வெளி நாட்டாரோடு சம உரிமை பாராட்ட முயலுவதைப் பார்த்து அன்னோர் எள்ளி நகையாட மாட்டார்களா? பெண்கள் இப்பொழுது வாக்குரிமை பெற்றிருப்பதினால் சட்ட சபைக்குட்புகுந்து சம உரி[illegible] யளிக்கும் படி சட்ட சபையைச் கட்ட[illegible] படுத்த அவர்கள் முன் வரவேண்டும்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்.

ஸ்ரீ. மயிலை. சீனி. வேங்கடசாமியவர்கள் எழுதியது.

முன் தொடர்ச்சி.

15-ம் அத்தியாயம்.

காசிபாயின் சிறை மீட்சி.

வேங்கடவாகு சொல்லியதைத் தூதனால் அறிந்த சிவாஜி திடுக்கிட்டார். கள்ளர்களைப் பிடித்துத் தண்டிப்பது அவருக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஆனால், கள்ளர் தலைவன் சொல்லியது போல், தாதாஜியையும் காசிபாயையும் கொன்று விடுவானோ என்று யோசித்து அவர் அஞ்சினார். ஆனால், எந்த விதத்திலாகிலும், தமது நண்பர் தாதாஜியையும் அவர் மகளையும் உயிருடன் சிறை மீட்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

உடனே ஒரு ஆலோசனை சபை கூட்டப்பட்டது. சிவாஜி, நட்டாஜி, லோககாட் கோட்டையிலிருந்து வந்த இன்னும் இரண்டு சேனைத்தலைவர்கள் ஆகிய இவர்கள் கலந்து யோசித்தார்கள். தாமதமின்றி கள்ளக் கூட்டத்தாரை உடனே எதிர்ப்பதென்றும், குகைக்குள் தங்கள் நண்பர்கள் சிறைவைக்கப் பட்டிருப்பதால் குகையைத் தாக்கும்போது துப்பாக்கியை உபயோகப் படுத்தக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இன்னும், சந்தர்ப்பத்தை நோக்கி கள்ளர்களை எதிர்க்க இவ்விதமாக முடிவு செய்யப்பட்டது. சிப்பாய்களை மூன்று பகுதியாகப் பிரித்துவிட வேண்டும். அதிக தொகுதியுள்ள சிப்பாய்களை சிவாஜி அழைத்துக் கொண்டு குகைக்கு நேராகச் செல்ல வேண்டும். மற்ற இரண்டு தொகுதி சிப்பாய்களும், கள்ளர்கள் அறியாதபடி குகைக்குப் பின் புறமாக மறைந்து சென்று குகையின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலுமாக வந்து சேரவேண்டும். குகையில் இருபுறத்திலும் சிப்பாய்கள் வந்து சேர்ந்தவுடன், குகையின் எதிர்ப்புறத்திலிருக்

கும் சிவாஜி, கொடியை அசைத்துச் சைகை காட்டியவுடன் மூன்று பகுதியாரும் சேர்ந்து கள்ளர்களை எதிர்க்க வேண்டும்.

இவ்வாறு முடிவு செய்து கொண்ட பிறகு, சிவாஜி தன் பகுதி சேனையைப் பாஜா மலைக் குகையை நோக்கி நடத்திச் சென்றார். சிவாஜி போய் சற்று நேரங் கழித்து, மற்ற இரண்டு பகுதி சேனைகளும் தெற்குப் பக்கமும் வடக்குப் பக்கமுமாகப் பிரிந்து ஒருவர் கண்ணிலும் படாமல் ஒளிந்து மறைந்து சென்றனர். கள்ளர்கள், தங்களுக்கு நேராக குகையை நோக்கி வரும் சிப்பாய்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வேறுவழியாக இன்னும் சேனைகள் வரும் என்று அவர்கள் சிறிதும் எதிர் பார்க்கவில்லையாதலால், மறைந்து வரும் சிப்பாய்களை அவர்கள் கவனிக்கவே யில்லை. சிவாஜி சிப்பாய்களுடன் குகைக்கு எதிரில் போய்ச் சேர்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் மற்ற இரண்டுபகுதி சிப்பாய்களும் குகையின் இருபுறத்திலும்வந்து சேர்ந்தார்கள். உடனே சிவாஜி கொடியையசைத்து சைகை காட்டினார். இக்குறிப்பறிந்த சிப்பாயகள் குகையின் வாயிலண்டை மூன்று பக்கமும் நிடீரென்று எதிர்த்தார்கள். இவ்விதம் எதிர்த்ததால் கள்ளர்களுக்குத் திகைப்பை உண்டாக்கி விட்டது. அவர்களுக்கு, இரண்டு புறத்திலும் சிப்பாய்கள் இருக்கிறார்கள் என்று தெரியாதாகையால் சிவாஜியின் சேனை மேலேயே கண்ணுங் கருத்துமா யிருந்து விட்டார்கள். எதிர் பாராதபடி, மற்ற இரண்டு பக்கத்திலும் சிப்பாய்கள் தாக்கிய படியால் அவர்கள் முதலில் முழுவதும் திகைத்துப் போனார்கள். சிப்பாய்களில் சிலர் மதிற் சுவரின் மேல் குரங்குகளைப் போல் தாவி எறினார்கள். சிலர் கட்டைகளினாலும் பாறைக் கற்களாலும் செய்யப்பட்ட மதில் சுவரை இடித்தும் வெட்டியும் தள்ளினார்கள்.

குகையின் வலது பக்கத்துச் சேனைக்குத் தலைவனா யிருந்த நட்டாஜி, தன் சண்டைக் கோடரியினால் மரக்கட்டைகளை வெட்டி வழியுண்டாக்கிக் கொண்டு மதில் சுவரின் மேல் குதித்தேறி உள்ளே குதித்தான். அதற்குள் கள்ளர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். நட்டாஜி, தனது நீண்ட சண்டைக் கோடரியைச் சுழற்றிக் கொண்டே "உயிருடன் தப்ப வேண்டுமானால் பேசாமல் குகைக்குள் போய் விடுங்கள்" என்று கூவினான். இச்சமயம், மற்றொரு பக்கத்தில் வந்து எதிர்த்த சிப்பாய்களில் இரண்டு மூன்று பேரை, கள்வர் தலைவனாகிய வேங்கடவாகு தன் கை வாளினால் வெட்டி வீழ்த்தி விட்டுத் திரும்புகையில், நட்டாஜி கோடரியைச் சுழற்றிக் கொண்டு நிற்பதைக் கண்டு, அவன்மேல் பாய்ந்தான். நட்டாஜியின் நிலைமை ஆபத்தாய் விட்டது. ஏனென்றால் அவன் மாத்திரம் தனியே மதிலுக்குள் குதித்தானே யன்றி, அவனைப் பின் தொடர்ந்து அவனுக்கு உதவி செய்ய இன்னும் சிப்பாய்கள் உள்ளே வரவில்லை. ஆகையால் நட்டாஜி தனிமையாகக் கள்ளர்களை எதிர்க்க வேண்டியதாயிற்று. தனியேயிருந்தும், சற்றும் அஞ்சாமல் தன் நீண்ட கோடரியைச் சுழற்றிக் கொண்டு நிற்பதால், கள்ளர்கள் அவனை எதிர்க்கப் பயந்து அவனைச் சுற்றிலும் சற்று விலகி நின்று சமயத்தை எதிர் பார்த்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் தான் வேங்கடவாகு அவன் மேல் பாய்ந்து, தனது நீண்ட பளபளப்பான வாளை அவன் தலைமேல் வீசினான். இந்த அபாயகரமான கத்தி வீச்சை நட்டாஜி, வெகு திறமையாகத் தன் கோடரியால் தடுத்துக் கொண்டான். ஆனால், நட்டாஜியினுடைய கோடரியின் கைப்பிடி, மரத்தால் செய்யப்பட்டிருந்ததனால் அது இரண்டாக வெட்டுண்டு கோடரியின் தலை தூரத்தில் சென்று பாறையின் மேல் கணீரென்று விழுந்தது. கோடரியின் கைப்பிடி மாத்திரம் அவன் கையில் நின்றது. கள்ளனுடைய நீண்ட வாளும் இரண்டாக ஒடிந்து போயிற்று.

நட்டாஜியின் ஆயுதம் ஒடிந்து போய் விட்டபடியால், கள்ளர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனைத்தாக்கி உடம்பிலும் கையிலும் காலிலும் காயமுண்டாக்கி விட்டார்கள். நட்டாஜி தன் இடுப்பில் தொங்கும் வாளை எடுப்பதற்குக் கூட நேரமில்லாமற் போய்விட்டது. அவன் வெகு திறமையாக ஒடிந்து போன மரக் கைப்பிடியினாலேயே அவர்களை எதிர்த்தான். வேங்கடவாகு தன் வாள் ஒடிந்துவிட்ட வுடனே, வேறொரு வாளை எடுத்துக் கொண்டு நட்டாஜி மேல் பாய்ந்தான். நட்டாஜி, மற்றக் கள்ளருடன் போராடிக் கொண்டிருப்பதனால், வேங்கடவாகு தன்மேல் வாள் வீசுவதைக் கவனிக்கவே இல்லை. வேங்கடவாகு, நட்டாஜியின் தலைமேல் குறிவைத்துத் தன் நீண்ட கூர்மையான வாளை வீசக் கையைத் தூக்கி விட்டான் அடுத்த விநாடியில், நட்டாஜியின் மண்டை இரண்டாக பிளவுபடப்போகிறது! ஓஓ! என்ன

ஆச்சரியம்! அந்த நிமிஷமே நட்டாஜிமேல் வாள் ஓச்சிய வேங்கடவாகு, பொத்தென்று கீழே விழுந்தான். அசைவற்றுப் பிணமானான்! அவன் மார்பிலிருந்து இரத்தம் ஆறாய் ஓடுகிறது! அவனருகில் மாயமாய் சிவாஜி நிற்கிறார்! கள்ளர்கள், தங்கள் தலைவன் திடீரென்று கீழே விழுந்து இறந்ததையும், மாயமாய் சிவாஜி நிற்பதையும் கண்டு அச்சமும் திகைப்பு மடைந்தார்கள். தங்கள் தலைவன் இறந்துவிட்டபடியால், இனி போர் செய்வதில் பயனில்லை என்று தேர்ந்து, எதிர்ப்பதை விட்டுத் தங்களை மன்னிக்கும்படியும் ஒன்றும் செய்ய வேண்டாமென்றும் கீழ்ப்படிந்து விட்டதாகவும் சொல்லிக் கெஞ்சி வேண்டினார்கள். இவ்விதமாக சிவாஜி அப்போரில் வெற்றி யடைந்தார்.

சிவாஜி அங்கு திடீரென்று எப்படி வந்தாரென்றால், நட்டாஜியைக் கள்ளர்கள் ஒன்றுகூடி எதிர்த்துக் கொண்டிருந்தபடியால் மதில் சுவரை அவர்கள் கவனிக்காமலிருந்து விட்டார்கள். சிவாஜிக்குத் தன் நண்பரான தாதாஜியையும் அவர்மகளையும் உயிருடன் மீட்கவேண்டும் என்னும் எண்ணமே குடிபுகுந்திருந்தமையால் அவர் உடையுண்ட மதிலின் மேல் குதித்தேறி உள்ளே வந்தார். போராடிக் கொண்டிருந்தபடியால் ஒருவரும் அவர் உள்ளே வந்ததைப் பார்க்கவில்லை. அவ்விடத்தில், நட்டாஜியைக் கள்ளர்கள் எதிர்ப்பதையும் அதேசமயத்தில் வேங்கடவாகு வாள் வீசுவதையும் கண்டு, உடனே தன் வாளை ஓங்கி கள்ளன் மார்பில் பலமாகக் குத்தினார். குத்துண்ட வேங்கடவாகு கீழே வீழ்ந்து இறந்தான். அச்சமயம், சிவாஜி அங்கு வந்திராவிட்டால் நட்டாஜியைக் கள்வர் தலைவன் யமலோகம் அனுப்பி யிருப்பான்.

இவ்விதமாக அன்று சிவாஜி வெற்றி யடைந்தார். காசிபாயும் தாதாஜியும் சிறை மீட்கப்பட்டார்கள். குகைக்குள்ளிருந்த வேங்கடவாகுவின் பெரிய பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதில் பொன்னும் வெள்ளியும் ஏராளமாகக் காணப்பட்டன. அப்பொற்கட்டி, மோரகான் என்னும் ஊரிலிருந்த கணபதியின் விக்கிரகத்தைக் களவாடி வந்து அதை உருக்கி வைத்திருப்பதாகத் தெரிந்தபடியால், அப்பொன் முழுவதையும் மரோபா சுவாமிகளிடம் கொடுத்து அதைக்கொண்டு புதிதாக ஒரு கணபதி விக்கிரகம் செய்து வைக்கும்படி சிவாஜி ஏற்பாடு செய்தார். வெள்ளிகளை யெல்லாம், தன்னிடம் அடைக்கலம் புகுந்த கள்ளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். இராமன் சொல்லியது போல, அவனை சிறையிலிருந்து தப்பி ஓடவிட்ட கோபாலனுக்கு அதிக பங்கு வெள்ளிகள் கொடுக்கப் பட்டன.

கள்ளர்கள் எல்லோரும் சிவாஜியிடம் சிப்பாயாக அமர்ந்து சம்பளத்திற்கு வேலை செய்ய சம்மதித்தபடியால், அவர்களை அவர் தமது ஊழியத்தில் சேர்த்துக் கொண்டார். ஆனால், நன்றியறிதலோடு உண்மையாக ஊழியம் செய்ய வேண்டும் என்றும் வேங்கடவாகுவிடம் நன்றியற்ற விதமாக நடந்து கொண்டதுபோல தம்மிடமும் அவர்கள் நடந்து கொள்ளக்கூடாதென்றும் கண்டிப்பாக அவர்களுக்குக் கட்டளை யிடப்பட்டது.

மதுசாரம்.

ஸ்ரீமான். ஏ. சோக்கலிங்கம் பிள்ளை யவர்கள் எழுதியது.

முன் தொடர்ச்சி.

---

1. மதுசாரத்தால் தன்னடக்கம் (Self Control) கெட்டுப் போய் தீமையான காரியங்களைச் செய்ய மிகவும் எளிதாகிறது. நன்மையான காரியங்களைச் செய்ய வருத்தமாகிறது. இதனை நியாயாதிபதி யொருவர்,

"ஒரு மனிதன் மதுக்கடைக்குட் புகுந்ததும் அவன் நன்கு மதிக்கப்படுகின்றான். நன்கு மதிப்புள்ளவனாயு மிருக்கின்றான். ஆனால், அவன் குற்றவாளியாக வெளி வருகின்றான் என்று கூறுகின்றார். அதேன்?

மனிதர்கள் ஆவேச (மதுசாரம்) நீரின் அதிகாரத்திலிருக்கும் போது, அவர்கள் பேசுஞ் சொற்களையும் செய்யுங் காரியங்களையும், அவர்கள் வெறிதெளிந்த பின்னர் அவ்வாறு செய்ய கூச்சப்படுகிறார்கள்.

(2) தன்னடக்கங் கெட்டுபோவதால் ஒரு மனிதனுடைய நற் செய்கைக்குத் தடையேற்படுகின்றது. ஏனெனின்,

மதுசாரம்,

கையின் உறுதியைக்
கண்ணின் கூர்மையைக்
பகுத்தறியுந் தன்மையைக்
நினைப்பு, செய்கை யிவற்றின் வேகத்தைக்
} கெடுக்கிறது.

பழுதான கைக்கடிகாரம் சரியான காலத்தைக் காட்டுவதினும் மதுசாரத்தால் சேதப்பட்ட மூளைக்கு நற் கருமங்களைச் செய்ய இயலாது. அதற்குத் திருட்டாந்தம் :—

குறிபார்த்துச் சுடும் பரீக்ஷை.

குறிபார்த்துச் சுடுவதில் கைதேர்ந்த அறுவர் முப்பது நாட்களுக்கு மேற்பட்ட குறிசுடும் பரீக்ஷைக்கு முன்வந்தனர். முதல் முறையிலும் அவர்கள் ஆவேச நீர் அருந்தவில்லை. இரண்டாம் முறையில் குறி சுடுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன் ஒரு ஒயின் கிளாசில் மூன்றில் இரண்டு பங்கு (two third of a wine glass) பிராந்தியும், இரவில் படுக்கைக்குப் போகுமுன் அதே அளவு பிராந்தியுங் குடித்து வந்தார்கள்.

அவற்றின் சராசரி பயன் :—

முதல் 10 நாள் 30 முறை சுட்டதில் 23 குண்டுகள் குறியில் பட்டன.	இரண்டாவது 10 நாள் 30 முறை சுட்டதில் 3 குண்டுகள் குறியில் பட்டன.	மூன்றாவது 10 நாள் 30 முறை சுட்டதில் 26 குண்டுகள் குறியில் பட்டன.

இதனால் அதிக திறமையோடு வேலை செய்வதற்குக் குடிப்பழக்கமே யில்லாதிருப்பது அவசியமாகு மென்று தெரிகிறது.

(3) தன்னடக்க மில்லாமை, தற்செயலாயுண்டாகுஞ் சங்கடங்கட்கும் மற்றக் கேடுதிகட்குங் காரணமாகின்றது.

மதுசாரம்,

1. அபாயத்தை யறியுஞ் சக்தியை
2. அபாயத்தை விலக்குஞ் சக்தியை
} அழிக்கின்றது.

அன்றியும், சுறுசுறுப்பைக் குறைக்கிறது. விவேகத்தைக் கெடுக்கிறது. தாமதத்தையும் பேச்சுத் தடுமாற்றத்தையு முண்டாக்குகிறது.

ஒரு விநாடி நேரந் தாமதிப்பதால் சில சமயம் மரணம் நேரிடுகின்றது. அன்றியும், அபாயமான அல்லது நெருக்கடியான சமயத்தில் தவறாக எண்ணித் துணிவதால் கடலிலுந் தரையிலும் பயங்கரமான விபத்துகளுண்டாகின்றன. ஏனெனின், சிறிதளவு மதுசாரம் உட்கொண்டாலும் அதுவே நம் அறிவின் விளக்கத்தை மறைத்துத் தீவிரமாக வுண்டாக வேண்டிய சமயோசித புத்தியையும் செயலையும் தாமதப்படுத்துகிறது. தீவிரமாக வேலை செய்யும் யந்திரங்களில் (ட்ராம்கார், மோட்டார்கார், பஸ் முதலியன) விரைவாகப் பிரயாணஞ் செய்யு மிந்நாட்களில் அவற்றைச் செலுத்துவோர்க்குச் சுத்தமான மூளையும் ஊக்கமுள்ள புலன்களறிவு மிருக்க வேண்டியது இன்றியமையாதனவாம். மதுசாரம், அடிக்கடி மரணத்திற்கு ஏதுவான காரணமாகின்றது.

1916ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ந் தேதியன்று நாலுமணி நோரத்திற்குள் கிளாஸ்கோ (Glasgow) நகரத்தில் டிராம் வண்டிகள் செல்லும் பாதையில் (Tramways) 17 ஆபத்துக்கள் உண்டாயினவாம். விசாரணை செய்ததில் டிராம் வண்டியைச் செலுத்திய ஒவ்வொருவரும் ஆவேசநீரின் (Alcohol) அதிகாரத்திலிருந்தன ரென்று தெரிய வந்ததாம்.

ஒவ்வொருவர் செய்யும் நல்ல வேலை, சுத்தமான மூளையைக் கேட்கிறது. சுத்தமான மூளையோ ஆவேசநீர் வேண்டாமென்கிறது. ஆதலால், சிறுவர், சிறுமிகள், வாலிபர், பெரியோர் முதலியோர் தங்கள் சுவாதீனத்திலுள்ள நல்ல மூளையை எவ்விதப் பொருள்களாலுஞ் சேதப்படுத்தாமலும், வேலையின் நிட்டமும் அளவுங் குறைவுபடாதபடியுங் காப்பாற்றிக் கொள்ளல் வேண்டும்.

மதுசாரஞ் சேராத மூளையே உத்தமமான மூளையாம்.

பைத்தியத்திற்குப் பல காரணங்களிருப்பி னும் அவற்றுள் மதுசாரமும் ஒரு முக்கிய காரணமாகும்.

ஆயிரக் கணக்கான சனங்கள் அறிவிழந்து பித்தாச்சிரமங்களில் (Lunatic Asylum) அடைபட்டிருக்கின்றனர். அதேன்? "ஐயோ அவன் தன் மூளையைக் கொள்ளை யிடும்படி, தன் வாய்க்குள்ளே பகைவனுக்கு இடங் கொடுத்தனன்" (Oh! that man should put an enemy in his mouth to steal away his brain. Shakespeare) அதனாலே, மதுசாரம் பைத்தியத்திற்கு முக்கிய காரணமாகின்றது. முதல் கிளாஸ். (First Glass) அல்லது முதல் கலசம் மலையுச்சியி லிருந்து மலையடிவாரஞ் சேருவதற்கு முதற்படியாகும் (first step.)

மதுசாரம் மூளைக்கு விஷமாகும்

ஜீவிய சந்தா ரூ. 20

அன்பர்களே!

நீங்கள் இதுவரை ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்திராவிடில் ரூபா இருபதும் உங்கள் போட்டோப் படமும் உடனே அனுப்புங்கள். எங்கள் செலவில் பிளாக் செய்து பத்திரிகையில் பிரசுரிப்பதோடு, பத்திரிகையையும் உங்கள் ஜீவித காலம் முழுதும் இனமாக அனுப்பி வருவோம்.

மானேஜர்,

"லக்ஷ்மி"

பத்திராசிரியர் குறிப்புகள்

ஆருவதாண்டு.

தெய்வத் திருவருளால் நமது ‘லக்ஷ்மி ’க்கு இன்று ஆருவதாண்டு ஆரம்பமாகின்றது. வயதேற ஏற வடிவும், வனப்பும் மிகுதல் இயல்பாதலின், நமது ‘லக்ஷ்மி’யும் ஆருவதாண்டு ஆரம்பத்தில் புத்துருக் கொண்டு வெளி வருகின்றது. ‘லக்ஷ்மி’ இதழ்களைக் கண்ணுற்றவர்கள், நாம் பொருளீட்டும் நோக்கத்துடன் ‘லக்ஷ்மி’யை நடத்தவில்லை யென்று ஒப்புக் கொள்வர் என்றே நம்புகிறோம். தமிழ் மொழி வளர்ச்சியும் தமிழர் முன்னேற்றமும் நமது ‘லக்ஷ்’யமாகும். அந்த உயரிய ‘லக்ஷ்ய’த்தை முன் நிறுத்தியே நாம் இதுகாறும் நம் சக்திக் கியன்றவாறு உழைத்தும் வருகின்றோம்.

ஸ்வராஜ்யத்துக்கு முதற்படி ஸ்வபாஷை வளர்ச்சி, ஸ்வபாஷை வ்ளர்ச்சிக்கு அடிப்படை ஸ்வபாஷாபிமானம். பாஷாபிமானம் இல்லாத நாடு முன்னேறுவது அரிது. நம் கன்னித் தமிழ் மொழி—தெய்வத் தமிழ் மொழி, இன்னும் எத்தனையோ வழிகளில் விருத்தியடைய வேண்டி யிருக்கிறது. ‘பாவடிகள் தேன்வடியும்’ பாமணிக் குவியல்களை நம் முன்னோர் ஏராளமாக ஈட்டி வைத்திருக்கின்றனர். ‘மனங் கரைத்து மலங்கெடுக்கும்’ வாசகமாதிய அருள் மொழிகளும் நம்மிடம் செழிப்பாக உள்ளன. ‘தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்’ காவியங்களும் அநந்தம் இருக்கின்றன.

‘கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறளும்’

நமக்கே சொந்தம் ! சொந்தம் ! ! சொந்தம் !!!

ஆயினும் என்? இவையனைத்தும் ஆத்ம வேட்கையைத் தணிக்கத் தக்கன. ‘பசி’ என்னும் ஒரு பாவி தமிழுலகத்தில் இல்லையேல், தமிழர்களைப் போல், பாக்கியசாலிகள்—புண்யாத்மாக்கள்—பேரின்பவாரிதிகள் யாருளர் ?

“நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து
செழுக்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர் கலந்து
உவட்டாமலினிக்கும்”

இன்பம் உளத்துக்கு உரியதே யன்றி வயிற்றுக்குரியதாமோ ?

நம் முன்னோர் அகஅழகில் சொக்கி, புறஅழகைப் புறக்கணித்ததனால் நாம் தற்போது அடிமைவாழ்க்கையிலீடுபட்டு அல்லற்படுகின்றோம்.

‘செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை’ என்றபடி மேனாட்டார் உலக வாழ்க்கையை விதி வழி விடுவதில்லை; மதிவயப் படுத்தியே நடத்துகின்றனர். மனிதவாழ்வின் ஒவ்வொரு பகுதியும் அவரது நுண்ணிய ஆராய்ச்சிக்கு இலக்காகி யிருக்கின்றது! (பொருளில்லார்க்கிவ்வுலகம் இல்லை) என்ற உண்மையை அவர்கள் நன்குணர்ந்து சொற்ப முயற்சியால் மிக்க பொருளைத் தேடும் வழிகளை ஏராளமாகக் கண்டிருக்கின்றனர்; கண்டும் வருகின்றனர். சமய சமூக விஷயங்களையும் அவர்கள் ஒதுக்கித் தள்ள வில்லை. சமயமும் சமூக ஆசாரங்களும் மக்கள் முன்னேற்றத் துக்காக மக்களால் ஏற்படுத்தப்பட்ட உண்மையை ஒப்புக்கொண்டு கால பேதத்துக் கியன்றவாறு மாற்றங்களும் சீர்திருத்தங்களும் செய்து வருகின்றனர். எனவே உலகப் போராட்டத்தில் ஒவ்வொரு நாளும் அன்னோர் முன்னேறிச் செல்லுகின்றனர்.

நாமோ?

என்ன விடையிறுக்க? பழமையினும் மடமையினும் வறுமையிலும் ஆழ்ந்து உழலுகின்றோம். நம் நாட்டின் அடிமைத் தனத்துக்கு வறுமையே காரணம். பசிவந்திடப் பத்தும் பறந்துபோமாதலால் நாம் எலாச் சோம்பர்களாய் உயிர் தாங்கி நிற்கிறோம்.

இங்கிலைமை ஒழியவேண்டுமானல் வறுமை தொலையவேண்டும். வறுமை தொலைய, விவசாயம் வர்த்தகம் கைத்தொழில் முதலியன விருத்தியடைய வேண்டும். விஞ்ஞான சாஸ்திரஞானமின்றி மேலே கூறிய முத்துறையிலும் நாம் முன்னேற முடியாது. பௌதிகசாஸ்திர ஞானமே நமது தற்காலத்திய இன்றியமையாத் தேவை.

ஆனல் அந்த ஞானமூட்டும் நூல்களும் அதை விருத்தி செய்யும் கருவிகளும் மிகச் சொற்பமாக விருக்கின்றன.

நம் நாட்டுக் கலாசாலைப் பட்டதாரிகளோ தமது கடமைகளை யுணராது காலந்தள்ளுகின்றனர். தேச முன்னேற்றம் இவர்கள் கையிலே அடங்கி யுள்ளது.

பட்டதாரிகளான அறிஞர்களே! உங்கள் பொறுப்பை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? உங்கள் கல்வியை நாட்டுமக்களுக்குப் பயன்படுத்த என்ன முயற்சி செய்கிறீர்கள்! பண்டைப்புலவர் பெருமக்கள் நம் தமிழ்த்தாய்க்குச் சாத்திய பணிகயெல்லாம் பழம்பணிகள் ஆய் விட்டன. நம் தாய்க்கு இப்பொழுது புதுப்பணிகள் மிகவும் தேவை. உங்கள் மனைவி மக்களுக்குப்புதுப்பணி பூண்டு வனப்பு நோக்கும் நீங்கள் நம் தாயை மறத்தல் அழகோ? மாத்ரு பக்தியுடைய மைந்தருக்கு அது முறையோ? அது தகுமோ? அது தர்மந்தானே?

இளங்கோ, கம்பர் ஆதிய கவிச்சக்ரவர்த்திகளின் பாமாலை சூடிய நம் தமிழ்த்தாய் உங்கள் சொன்மாலையை ஏற்றுக்கொள்வரோ என நீங்கள் ஐயுறுதல் வேண்டாம்.

அன்பு மேலீட்டினல் நீங்கள் அணியும் ஒரு சிறு அறுகையும் நம் அம்மையார் மனமுவந்து ஏற்றுக்கொள்ளத் தயாராக விருக்கின்றார்.

ஆகவே நம் அருமை அன்னையாருக்குப் பௌதிகநூலணி அணிந்து போற்ற நீங்கள் முன் வாருங்கள். வங்காளர், கன்னடர் தெலுங்கர், மலையாளர் முதலியோர் இவ்வழியில் நம்மைவிட எவ்வளவோ சிறப்பாக உழைக்கின்றனர். நாம் பழம் பெருமை பேசி மகிழ்கின்றோம்; அன்னோர் புதுப்பெருமை பூண்டு புகழெய்துகின்றார்.

தமிழர் முன்னேற்றங்கருதி சமயசமூக சாஸ்திரஞான விருத்திக்கு உழைக்கும் நமக்கு தமிழ் நாட்டுக் கல்விமான்களும் பொது மக்களும் தக்க உதவி புரிந்து ஊக்க மூட்டுவார்களென்று நம்புகிறோம்.

* * *

நேரு கமிட்டி யாதாஸ்து.

இரண்டு நண்பர்கள் சண்டை போட்டுக் கொண்டனர். முயலுக்கு எத்தனை கால் என்பதே அவர்கள் சண்டைக்குக் காரணம். ஒருவன் நான்கு கால் என்றான்; மற்றவன் மூன்று கால் என்றான். வாதம் வளர்ந்து கொண்டே போயிற்று. அவர்களால் ஒரு முடிவுக்கு வரக் கூடவில்லை. கடைசியில் ஒரு மத்தியஸ்தரிடம் சென்றார்கள். அவரோ எல்லார்க்கும் நல்லாராய் நடக்கும் புண்ணிய சீலர். வழக்கின் வரலாற்றைக் கேட்டார்; ஆழ்ந்து யோசனை செய்தார்; முயலுக்கு மூன்றரைக்கால் என்று முடிவு கூறினர்.

இரு கட்சியாரும் அத்தீர்ப்பை ஒப்புக் கொண்டு குதூகல மடைந்தனர். "என் கணக்கில் அரைக்கால் குறைந்தாலும் எதிரி தோற்றது போதும்" என்று திருப்தி யடைந்தான். நான்கு கால் வாதி. "மத்தியஸ்தர் என் கணக்கில் அரைக் காலைக் கூட்டிவிட்டார். ஆனலும் என்ன! மற்றவன் ஜயிக்கவில்லையே" என்று மூன்று கால் வாதி சமாதானப்பட்டார்.

இம்மாதம் முதல் வாரத்தில் டெல்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரின் முடிவைப் பார்த்த வுடன் இந்தக்கதையே நமது ஞாபகத்துக்கு வருகிறது. சுயேச்சைத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவில்லை யானல் ஸ்ரீநிவாஸய்யங்கார் கட்சியார் கோபித்துக் கொள்வார்கள். நேரு கமிட்டி யாதாஸ்தை ஒப்புக்கொள்ள வில்லை யானல் நேரு கட்சியார் சீறுவார்கள். ஆகவே இரண்டையும் ஒப்புக்கொண்டு இரு கட்சியாரையும் திருப்திப்படுத்தி விடலாம் என்று கமிட்டியார் எண்ணினர் போலும்.

ஆனல் நேர்ந்த பலன் என்ன? பண்டித நேரு கூறியபடி காங்கிரஸ் காரர் இப்பொழுது ஏககாலத்தில் இரணடு குதிரை மீது சவாரி செய்யக்கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அவ்விரண்டு குதிரைகளுமோ ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத சண்டிக்குதிரைகள். ஆகவே சம்பவிக்கப்போகும் பலனை நாம் கூறவும் வேண்டுமோ?

பூரண சுயேச்சை காங்கிரசின் லட்சியமாம்; குடியேற்ற நாட்டு அந்தஸ்து தேசத்தின் மிதமான கோரிக்கையாம். ஆனால் காங்கிரஸ்காரர் எதை நிறைவேற்றி வைக்க முயற்சி செய்யப்போகிறார்கள் ? இந்தக் கேள்வியின் விடையிற்றான் குட்டு அடங்கியிருக்கிறது.

சிலர் காங்கிரசின் அந்தஸ்தைப்பற்றிக் கவலைப்படுகிறார்கள். சிலர் கட்சிகளின் நிலைமைக்கு இரங்குகிறார்கள். சிலர் மிதவாதிகளோடு ஒத்துழைப்பதா என்று ஏங்குகிறார்கள். ஆனால் இவை யாவற்றிற்கும் மேலாக "தேசம்" ஒன்று இருக்கிறதென்று ஒருவராவது நினைக்கவில்லை. இதுதான் பாரதமாதாவின் துரதிர்ஷ்டம்!

பர்க்கன்ஹெட் பூச்சாண்டிக்கு விடையிறுக்கும் பொருட்டுத் தலைவர்கள் செய்த முயற்சி, குரங்கு பிடிக்கப் பிள்ளையாராய்ச் சமைந்த கதையை எண்ணி மெய்யான தேசாபிமானிகள் கவலைப்படத்தான் செய்வார்கள். எது எவ்வாறாயினும் சரி, ஒரு காரியம் மட்டும் உறுதி. அடுத்த பொதுத்தேர்தல் தென்னிந்தியாவைப்பொறுத்த மட்டில் மிக ரஸகரமாகவே இருக்கும். அடுத்த பொதுத்தேர்தலை மனதில் வைத்துக்கொண்டே தென்னிந்தியத் தலைவர்கள் இப்பொழுது உழைத்து வருகிறார்கள். இது வரை காங்கிரஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுதந்தரக்கட்சி, என மூன்று கட்சிகளே இருந்தன. அடுத்த பொதுத் தேர்தலில், 1. குடியேற்ற நாட்டு அந்தஸ்து அல்லது பெசண்டு—ராமசாமி கட்சி. 2. பூரண சுயேச்சை அல்லது ஸ்ரீநிவாஸய்யங்கார் கட்சி, 3. ஜஸ்டிஸ் கட்சி 4. தமக்கென ஒருகொள்கையுமில்லாது, தருணத்துக் கேற்றபடி சட்ட சபையில் ஆதிக்கம் பெறும் கட்சியாரோடு சேரும் சுதந்தர வௌவால்கட்சி என நான்குகட்சியார் போராடப் போகின்றனர். பிராமணர்கள் எல்லாம் காங்கிரஸ் காரர்களுக்கே ஓட்டுக்கொடுக்கிறார்கள் என்று ஜஸ்டிஸ் கட்சியார் கவலைப்படுவதுண்டு. இனி அவர்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். பிரம்மஞான சபையைச் சேர்ந்த பிராமணர்களும் சுமார்த்தப் பிராமணர்களும் பெசண்டு-ராமசாமி கட்சி பக்கம் திரும்பி விடுவார்கள். சுய ஆட்சியில்லாத நாட்டில் இப்படித்தானிருக்கும் போலும்.

* * *

புதுக்கோட்டை வார்சுரிமை.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பிடித்திருந்த சனி, கடைசியாக, தொலைந்து விட்டதைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மாட்சிமை தங்கிய ராஜகோபால தொண்டமானை, புதுக்கோட்டை சமஸ்தானாதிபதியாக இந்திய சர்க்கார் தேர்ந்தெடுத்திருக்கும் சமாசாரம் இந்தியர்களுக்கெல்லாம் திருப்தியளிக்குமென்றே நம்புகிறோம். பிராமணர் பேரிலுள்ள துவேஷத்தினால் ஸ்ரீ சிட்னி மார்த்தாண்டரை புதுக்கோட்டை மன்னராக்கவேண்டுமென்று வாதித்தவர்களுக்கு இந்த முடிவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கலாம். சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ் வேந்தர் மூவர் வாழ்ந்த தமிழ் நாட்டில் அருமருந்தன்ன புதுக்கோட்டையில் மட்டுமே ஒரு தமிழ் முடிமன்னர் இருந்து வருகிறார். எனவே திரு. சிட்னி மார்த்தாண்டர் மன்னராகவும், தமிழ்த்தாய் முடியிழக்கவும் நேர்ந்துவிடுமோ என்று நாம் மிக அஞ்சினோம். இப்பொழுது அவ்வச்சம் ஒழிந்து விட்டதையெண்ணி மிகவும் மனம் பூரிக்கின்றோம். தம் மதத்தையிழந்தும், மரபை இழந்தும் சமூக ஆசாரங்களையிழந்தும், இந்திய இராணியமாராக விருப்பங்கொள்ளும் மாதர்கள் பல்லாயிரம்பேர் ஐரோப்பாவில் இருக்கிறார்கள். அத்தகையாரின் வயிற்றில் பிறக்கும் சந்ததிகளை சமஸ்தானாதிபதிகள் ஆக்குவதென்றால் இந்தியா முழுதும் ஒரு வியாழ வட்டத்துக்குள் வெள்ளையர் மயமாகிவிடும். இந்த உண்மைகள் ஒன்றையும் ஓராது ஸ்ரீ. சிட்னி மார்த்தாண்டருக்காக வக்காலத்துப் பேசியவர்களின் தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் என்னென்று உரைப்பது !

பாஞ்சாலச்சிங்கத்துக்கு அடியா ?

சைமன் கமிஷன் பாஞ்சாலத்தில் கால்வைத்ததும் இந்தியர்கள் திடுக்கிடும்படியான சமாசாரம் வெளி வந்திருப்பது, சைமன் கோஷ்டியாருக்கு ஒரு அவசகுனமென்றே தோற்றுகிறது. பகிஷ்கார ஊர்வலத்தை நடத்திய லாலாஜி, டாக்டர் சத்தியபால், ஹான்ஸ்ராஜ், மௌலானா தாவுத் உசன் முதலியோர் போலீசாரால் தாக்கப்பட்டார்களாம். ஒரு பொறுப்புடைய ஐரோப்பியப்பொலிஸ் உத்தியோகஸ்தரே லாலாஜியின் ஹிருதயத்தை நோக்கி அடித்தராம். இந்தப் பயங்கர வர்த்தமானத்

தைக் கேட்டவுடன் நம் இரத்தம் கொதித்தது! கொதித்துப் பயனென்ன! அடிமை ரத்தத்துக்கு வீரிய முண்டா?

* * *

புட்டு வாணிச்சிக்காக மண் சுமந்த சொக்கர், வேலை செய்யாமல் மழுப்பிக்கொண்டு அலைவதைப்பார்த்த பாண்டியன் தன் கைப்பிரம்பால் சொக்கர் முதுகில் அடிக்க அவ்வடி மதுரைமா நகரத்தார் முதுகிலும், பாண்டிய ராஜ குடும்பத்தார் முதுகிலும் கருப்பையிலிருந்த சிசுக்கள் முதுகிலும் விழுந்ததாம். அதுபோலவே, லாலாஜி உள்ளிட்டோர் மேல் விழுந்த ஒவ்வொரு அடியும் லாலாஜி கூறியதுபோல் "பிரிட்டிஷ் எகாதிபத்தியத்தின் கொள்கையின் சவப்பெட்டி மீது வைத்து அடிக்கப்பட்ட ஒவ்வொரு ஆணிகளாகும்!

* * *

வாழ்த்து.

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராய் நியமனம் பெற்றிருக்கும் ஸ்ரீமான். W. P. A. சௌந்தர பாண்டிய நாடாரவர்களுக்கும் மதுரை நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் ஸ்ரீமான் R. S. நாயுடு அவர்களுக்கும் மனமார ஆசி கூறுகிறோம். ஸ்ரீமான் நாடார் சென்னைச் சட்ட சபை அங்கத்தினராயிருப்பவர். பொதுஜன சேவையில் மிக ஊக்கமுடையவர். பொது ஜனத் தலைவருக்குத் தேவையான குணங்களெல்லாம் நன்கமையப் பெற்றவர். ஸ்ரீமான் நாயுடுகாரு மதுரையில் பிரபல பாரிஸ்டர். சென்ற ஆறு ஆண்டுகளாக மதுரை நகரசபைத்தலைவராயிருந்து அரிய ஊழியம் செய்தவர். மூன்றாம் முறையும் பெரும்பான்மை யோட்டுகளால் அன்னவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதினாலேயே பொதுஜனங்கள் அன்னாரிடத்து வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் இனிது விளங்கும். இவ்விரு கனவான்களும் இன்னும் பல்லாண்டு பொதுஜன சேவை செய்து மதிப்புப் பெறுமாறு இறைவன் திருவருள் புரிக!

* * *

சைமன் விசாரணை.

சைமன் கமிட்டியார் விசாரணை வரவர மிக விநோதப் போக்கடைந்து வருகிறது. இந்தியாவின் அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ பொறுப்புடைய 'தேசிய' ஜனத் தலைவர்கள் ஒருவரும் கமிட்டியாரிடம் சாட்சியங் கொடுக்க முன்வரவில்லை. எனவே இஷ்டமுள்ளவர்கள் எல்லாம் சைமன் கோஷ்டியார் முன் ஆஜராகி தத்தம் இஷ்டப்படி சாட்சியமும் கூறுகிறார்கள். சாட்சியத்தின் போக்கோ நமது துரதிர்ஷ்ட நிலைமையைத் தெள்ளிதில் விளக்கிக் காட்டுகிறது. இதுகாறும் சாட்சியம் கூறியவர்களில் ஹிந்து சபையாரும், முஸ்லீம் சங்கத்தாரும், சீக்கிய சபையாரும் முக்கியமானவர்கள் ஆகும். அவர்கள் எல்லாம் பொதுவாக குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கோருகிறார்கள். ஆனாலும் அதை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் முறையில் அபிப்பிராய வித்தியாசம் காணப்படுகிறது. ஹிந்து சபையார் தனித்தேர்தல் தொகுதிகளை ஒழித்துக் கலப்புத் தொகுதிகள் எற்படுத்த வேண்டுமென்றும் அது சாத்தியமில்லையானால் தற்காலம் அமுலிலிருக்கும் சீர்திருத்தங் கூடத் தேவையில்லையென்றும் கூறுகிறார்கள். முஸ்லீம்களோ கலப்புத் தொகுதிகள் வேண்டாமென்றும் தனித் தொகுதிகள் சாசுவதமாக இருக்க வேண்டுமென்றும் அது சாத்தியமில்லையானால் சீர்திருத்தமே தேவையில்லையென்றும் வாதிக்கிறார்கள். இந்த இருபெரும் கட்சியாருக்கு இடையில், சீக்கியர்கள நுழைந்து தங்கள் நலனுக்குப் பாதுகாப்பு அளிக்கப் படாவிட்டால் எத்தகைய சீர்திருத்தத்தையும் எதிர்த்து நிற்போம் என கர்ஜிக்கிறார்கள்.

* * *

இந்த மூன்று கூட்டத்தாரின் கூக்குரலைக் கேட்டு சர். ஜான் சைமனும் திகைப்படைகிறார். "ஒவ்வொரு வகுப்பாரும் இவ்வாறு பிடிவாதம் செய்தால் நான் என் செய்வேன்" என்றும் எங்குகிறார்.

* * *

இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைக்கு யாரைக் குறை கூறுவது. தேசிய வாதிகளை குறை கூறுவதா? வகுப்புத் தொகுதிகளை எற்படுத்திய லார்டு மார்லியையும் ஸ்ரீ மண்டேகுவையும் குறை கூறுவதா? யார் எப்படித்தான் மழுப்பினாலும் வகுப்புத்திமிர் நாட்டில் வேரூன்றியிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். செல்வாக்குடைய வகுப்பார் கைவலியற்ற வகுப்பாரை அமிழ்த்தி வைக்கவேண்டுமென்றே நினைக்கிறார்கள். உண்மையாக நாட்டில் ஒற்றுமை உண்டாகவேண்டுமானால் முன்னணியில் நிற்கும் சமூகத்தார் தமது விசேஷ உரிமைகளை விட்டுக்கொடுத்துத் தான் ஆகவேண்டும்.

அன்னோர் பின்னணியில் நிற்போரின் நம்பிக்கையையும் பெறவேண்டும். யாவரும் இந்திய மாதாவின் பிள்ளைகள் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். உயர்வுதாழ்வு என்ற எண்ணம் தொலையவேண்டும். நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்ளாமல் வெள்ளையர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை இந்தியாவில் நீடித்திருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பத்தான் செய்வார்கள். ஏனென்றால் அந்நிலைமை நீடித்திருப்பது தான் அவர்களுக்கு இலாபம். மதியீனத்தால் அவர்கள் வலையில் சிக்கிக் கொள்ளாதிருக்கவே நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இரண்டு மாகாணத்தில் விசாரணை முடியும் முன்னரே கமிட்டியாருக்கு இவ்வளவு திகைப்பு ஏற்பட்டு விட்டது. இந்தியா முழுதும் விசாரணை செய்தபிறகு சைமன் கமிட்டியார் என்ன செய்யப் போகிறார்களோ அறியோம்.

நம்மவர்களோ இன்னும் பிணக்கைக் கைவிட்ட பாடில்லை. நேரு கமிட்டி யாதாஸ்தை சர்வ கட்சியாரும் ஒப்புக் கொள்ளும்போது, ஒரு சிறு கூட்டத்தார் பூரணசுயேச்சை வாதத்தைக் கிளப்பி மித்திர பேதம் விளைக்கிறார்கள். தலைவர்கள் போக்கை நோக்கும்போது, சிரிப்பதா அல்லது அழுவதா வென்ற திகைப்பு உண்டாகிறது. ஐயோ! துரதிர்ஷ்ட இந்தியாவே! உனக்கு நந்நாள் பிறப்பது எந்நாளோ!

அமானுல்லா வாழ்க!

ஆப்கான் அரசர் அமானுல்லா சமீபகாலத்தில் மேனாடுகளில் பிரயாணம் செய்து தம் நாடு திரும்பியதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். ஆப்கானிஸ்தானத்தை சீர் திருத்துவதே அவ்வரசரின் தற்காலமுயற்சியாக இருக்கிறது. துருக்கியில் முஸ்தபா கமால் பாஷா ஏற்படுத்திய சீர்திருத்தங்களை யெல்லாம் நம் அமானுல்லா அரசர் ஆப்கானிஸ்தானத்திலும் ஏற்படுத்த எண்ணியிருக்கிறார். சென்ற ஜூலை மாதத்தில் ஒரு பிரதிநிதி சபைகூட்டி பலதார மணத்தை ஒழித்திருப்பதாய் முடிவு செய்தார். ஆகஸ்டு மாதத்தில், ஷை பிரதிநிதி சபையாரின் சம்மதப்படி கட்டாய இராணுவப் பயிற்சி காலத்தை இரண்டு வருஷத்திலிருந்து மூன்று வருஷமாக உயர்த்தினார். அந்தப் பிரதிநிதி சபை அங்கத்தினர்களி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதிநிதிக ளடங்கிய ஒரு தேசிய சபையையும் அவர் ஏற்படுத்தி யிருக்கிறார். இந்த தேசிய சபை மூன்று வருஷங்களில் வேலை செய்யும். சீர்திருத்த முயற்சிகளில் அரசருக்கு உதவிபுரிவதே அந்த தேசிய சபையின் கடமை, அவர் செய்யும் பல சீர்திருத்தங்களை, பொது ஜனங்கள் ஆதரிக்கவில்லை யாயினும், நன்மை யளிக்கக் கூடிய சீர் திருத்தங்களை, பொது ஜன எதிர்ப்பையும் மதிக்காது அவர் தைரியமாக அமுலுக்குக் கொண்டுவருகிறார். 'பர்தா' முறையை ஒழிக்க வேண்டுமென்று அவர் செய்த தீர்ப்பை வைதீகர்கள் எதிர்த்தும் ஒன்றும் பலிக்கவில்லை. மகாராணியாரே முகமூடியின்றி ராஜ சபையில் பிரசன்னமாயிருந்து ஆப்கான் மாதர்களுக்கு வழி காட்டினார். துருக்கியர் வெகு காலமாக இராணுவ சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் இயல்புடையவர். ஆகவே கமால் பாஷா செய்யும் சீர்திருத்தங்களை அவர்கள் பணிவுடன் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆப்கான் ஜனங்களோ அப்படியல்ல. அவர்கள் இது காறும் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து அறியாத ஒரு முரட்டு ஜாதியார். எனவே அவர்களுக்கு இடையில் புது சீர் திருத்தங்களை அமுலுக்கு கொண்டு வருவது ஆப்கான் அரசருக்குச் சிறிது கஷ்டமாகவே இருக்கிறது. எனினும் விவேகமும் தாராள நோக்குமுடைய தலைவர்களின் உதவி அரசருக்கு இருப்பதால் அவரது சீர்திருத்த முயற்சிகள் வெற்றி பெறுவது உறுதி. பிரயாண வசதிகளை விருத்தி செய்வதிலும் அரசர் பிரத்தியேக கவலை செலுத்துகிறார். பிரயாண வசதியுண்டாகும் போது நாகரீக ஒளி பாவாத ஆப்கான் மலைப் பிரதேசங்கள் சீர்திருத்தம் பெற்றே தீரும். கல்வியபிவிர்த்திக்காகவும் அமானுல்லா அரசர் பகீரதப் பிரயத்தினங்கள் செய்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு இரண்டு பவுன் செலவில் சாமானிய ஜனங்களுக்குக் கல்வி கற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாகவே கல்வி புகட்டப் படுகிறது. வைதீகர்கள் அரசருடைய முன்னேற்ற ஏற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். சுதந்தரப்பிரியரான அரசர் அவைகளை எட்டுணையும் மதிக்கவில்லை. அன்னார் முயற்சி நற்பயனடைவதாக!

சென்னையும் குதிரைப் பந்தயக் கடைகளும்.

இரண்டு வருஷங்களுக்கு முன், கிண்டிக் குதிரைப் பந்தய மென்றால், அதைப் பார்த்த

வர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே தெரிந்திருந்தது. இன்றோ கொத்தவால் சாவடியில் கூடை சுமக்கும் கூலிகளுக்குங் கூட நன்கு தெரிந்திருக்கிறது. பணக்காரர்களை விட ஏழைகளுக்கே இந்த பந்தயப் பைத்தியம் ஜாஸ்தியாகப் பிடித்திருக்கிறது.

கிண்டியில் குதிரைப் பந்தயம் நடக்கும் தினங்களில் தேச வாஞ்சை யுடையோர் போய்ப் பார்த்தால், அவர்கள் எக்கட்சியாரா யிருப்பினும் சரி-திடுக்கிட்டுப போவார்கள் என்பது திண்ணம். வயிறு நிறைய உண்ண வழியில்லாமல் வாடி வதங்கின தோற்ற முடைய ஏழைகள் அரும்பாடு பட்டுத் தேடிய பணத்தையும்--காதணி கழுத்தணிகளை அடகு வைத்துப் பெற்ற பணத்தையும் பந்தயத்தில் கட்டி, வெறுங் கையர்களாய் ஏமாந்து திரும்புவதைப் பார்த்தால் யார்தான் கண்ணீர் வடிக்கமாட்டார்கள்? குதிரைப் பந்தய தினங்களில் சுமார் 3 லக்ஷம் முதல் 4 லக்ஷம் வரையில் பந்தயம் கட்டப் படுகிறதாம். இந்த மூன்று நான்கு லக்ஷம் ரூபாயும் ஏழைகள் இரத்தம் சிந்தி சம்பாதித்த பணமாகும்.

இந்தப் பந்தயக் கொடுமையை விரித்தெழுதுவதானால் அதுவே ஒரு இராமாயணமாகி விடும். ஒன்றிரண்டு பேருக்குக் குருட்டாம் போக்கில் 100, 200 கிடைத்து விடுகிறது. அதைப் பார்த்துப் பேராசை பிடித்த ஏழைகள் தமக்கும் கிடையாதா வென்றெண்ணி, கஷ்டப் பட்டுத் தேடிய பணத்தைக் கட்டி ஏமாற்றமடைகிறார்கள். இதனால் திருட்டும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

முற்காலங்களில் கிண்டிப் பந்தயம் வருஷத்துக் கொருமுறை இரண்டு மாதங்கள் நடைபெற்று வந்தது. இன்றோ பார்க்கு மிடங்க ளெல்லாம் பந்தயக் கடைகளாகவே இருக்கின்றன. "Race Club" என்று ஒரு பெரிய விலாசப் பலகையும், ஒரு ஒட்டை மேஜையும் நான் கைந்து நாற்காலிகளும் உடையவர்க ளெல்லாம் பந்தயக்கடை முதலாளிகளாய் விடுகிறார்கள். இன்று புனாவில், நாளை கல்கத்தாவில், மறுநாள் கொழும்பில் என நாள் தவறாமல் பந்தயங்களும் நடைபெறுகின்றன. குதிரைகளின் வயது எடை முதலிய வரலாறுகள் அடங்கிய புத்தகங்களும் ஏராளமாக விற்கப் படுகின்றன. பந்தயப் பித்தர்களுக்கு அதுதான் இப்பொழுது பாராயண நூல்களாக இருக்கின்றன. தேவார திருவாசகங்களுக்குக் கூட அவ்வளவு மதிப்பு இப்பொழுது காணப் படவில்லை. குதிரைச் சரித்திரத்துக்கு அவ்வளவுமதிப்பு ஏற்பட்டு விட்டது. ஜெயிக்கும் குதிரைகளைப் பற்றி ஜோசியம் சொல்லுவோரும் ஒரு பக்கம் நல்ல சம்பாத்தியம் நடத்துகிறார்கள்.

மாலை நேரங்களில் குதிரைப்பந்தயக்கடைகள் முன் கூடும் கூட்டத்தை அடக்க போலீசாருக்கும் முடியவில்லை. பந்தய தினங்களில் ஏழைகள் பணம் லக்ஷக்கணக்காகக் கொள்ளை போகிறது.

5-10 மாதச்சம்பளம் வாங்கும் சொற்ப சம்பாத்தியக்காரர்களும் 5 அணா 10 அணா கட்டி ஏமாந்து போகிறார்கள்.

இந்தக் குதிரைப் பந்தயத் தொல்லையால் வியாபார மில்லையென்று காபி ஹோட்டல்காரர்கள் கத்துகிறார்கள். டிராமா சினிமா காரர்களும் அவ்வாறே கதறுகிறார்கள். ஜவுளிக் கடைக்காரர்களும் துணி விற்பனை குறைந்து விட்டதென்று கூக்குரலிடுகிறார்கள், உண்மையில் இந்தப் பந்தயத் தொல்லையால் எல்லாத் தொழில்களும் பாதிக்கப்பட்டே இருக்கிறது.

நம் சர்க்கார் செய்யவேண்டிய வேலையென்ன ? பந்தயக்கடைகள் என்னும் மோசடிக் கிளப்புகளைத் தொலைக்க அவர்கள் உடனே வழி தேடவேண்டும்.

சென்னைச் சட்டசபையில் இது விஷயமாக ஒரு மசோதா வந்திருப்பதாக அறிகின்றோம். கூடிய விரைவில் அதைச் சட்டமாக்க சட்டசபை மெம்பர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்.

வாழ்த்து :—சென்னை கார்ப்பரேஷன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாரவர்களுக்கு நாம் மிக மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறுகிறோம். ஸ்ரீமான் முதலியார் ஐரோப்பாவுக்குப் பல முறை சென்று ஐரோப்பிய நகர சுகாதார நிலைகளை நேரிற் பார்த்த அநுபவ முடையவர். அதி தீவிர புத்திசாலி ; உழைப்பாளி. எனவே அவரது தலைமையில் சென்னை நகர சுகாதாரம் விருத்தி யடையுமென்று நம்புகிறோம்.

"இந்திய மாதா" இது கன்னி மேயோ என்னும் அமெரிக்கமாது எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்தியர் மீது துவேஷங் கொண்ட மேயோ, இந்தியர்களின் சமய சமூக ஆசாரங்களைப் பழித்து ஒரு பழி மூட்டை கட்டி விட்டார். அதனை நம்மவர் உணர்ந்து சீர்திருந்துமாறு இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட் டிருக்கிறது. முதற் பதிப்பு, வெளிவந்த சொற்ப காலத்துக்குள் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருப்பதினாலேயே, இது தமிழகத்தாரால் நன்கு மதிக்கப் படுவது இனிது விளங்கும். இரண்டாம் பதிப்பையும், தமிழ்ப் பெரு மக்கள் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். விலை. ரூ. 1—8—0.

இந்திய பிதா:—ஷை நூலுக்குப் பதிலாக, இந்தியச்சட்டசபைமெம்பர் ஸ்ரீமான். ஸி. எஸ். ரெங்கய்யர் எழுதியது இந்நூல். கன்னி மேயோவின் கையைக்கொண்டே, அவரது கன்னத்தில் அடிப்பது போல் அமெரிக்க ஐரோப்பிய எழுத்தாளர்களின் அபிப்பிராயங்களைக் கொண்டே திரு. ரெங்கய்யர். மேயோவின் பொய்யுரைகளைச் சின்னாபின்னப் படுத்தி விட்டார். சாந்த மொழிகளில் எதிரி மனதில் ஊடுருவிச் செல்லும்படி விஷயங்களைக் கூறும் ஆற்றல் திரு. அய்யரிடம் மிகுதியாக அமைந்திருக்கிறது. மூலநூலின் அழகு ஒரு சிறிதும் குறைவு படாமல் இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பும் விளங்குகிறது. தேசாபிமான முடையவர்கள் எல்லாம் இந்நூலை வாசிக்க வேண்டு மென்று சிபார்சு செய்கிறோம். விலை ரூ. 2—0—0.

துரதிர்ஷ்ட இந்தியா:—இது இந்திய மாதாவுக்குப் பதிலாக, பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதிராய் எழுதிய நூல். கன்னிமேயோவுக்கு, மறுப்பெழுத, படிப்பினாலும், உலக அனுபவத்தினாலும், தேச ஊழியத்தினாலும், லாலாஜியைவிடச் சிறந்தவர்கள் இந்தியாவில் உண்டா? அவர் 15 வருஷ காலம் அமெரிக்காவில் இருந்து அமெரிக்கர்களின் குணாதிசயங்களை நன்கறிந்தவர். அமெரிக்கா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து சமூக அரசியல் கல்வி விஷயமாக, பல ஆராய்ச்சிகள் நேர்முகமாகச் செய்து அமெரிக்காவைப்பற்றி ஒரு சிறந்த நூல் எழுதியவர். எனவே அவர் எழுதிய நூலின் சிறப்பைப்பற்றி நாம் அதிகம் விரித்துக் கூறத் தேவையில்லை. கிறிஸ்தவர்களுக்கு பைபிளும் முஸ்லீம்களுக்கு குர்ஆனும், ஹிந்துக்களுக்குப் பகவத்கீதையும் எவ்வளவுக்கு முக்கியமோ அவ்வளவுக்கு, இந்தியமாதாவிடம் உண்மை பக்தியுடைய பாரத புத்திரர்களுக்கு இந்த துரதிர்ஷ்ட இந்தியாவும் முக்கியமானதாகும்.

விலை ரூ. 2—8—0.

இம்மூன்று புத்தகங்களும் முத்தையா புக் டிப்போ, தபால்பெட்டி, 99 சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதினால் கிடைக்கும்.

ஸ்ரீ பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் ஜீவிய சரித்திரச்சுருக்கம்.

இது, யாழ்ப்பாணம் நவாலியூர் தமிழ்ப்புலவர் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை யவர்களால் செய்யுள் நடையில் யாக்கப்பெற்ற ஒரு சிறு நூல். சர். பொன்னம்பலம் அவர்களின் ஜீவிய சரித்திர வரலாறுகளெல்லாம் மிக அழகாக எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. விலை சதம். 20. வேண்டுவோர் சுதேச நாட்டியம் ஆபீஸ், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

காவிரித்தாய்.

ஸ்ரீ. மணி. திருநாவுக்கரசு முதலியா ரவர்கள்.

(1) குடகு வரைப்பிறந்து கோலம் பல சிறந்து
கடகடென ஓடிவரும் காவேரிப் பாவாய் நின்
நடையழகைப் பாவாணர் நற்றமிழாற் பாடினரே
இடையழகைக் கண்டாரங்கர் இன்றும் இருந்தாரே.

(2) வாடாத செல்வம் வருவிப்பாய் சோணாடர்
தேடாத் திரவியமே! செல்வத் திருவிளக்கே!
ஓடாத நாட்டார் ஓங்குந் துணையிழந்தார்
பாடாத நாட்டாரும் பாவும் இழந்தாரே.

(3) வான்மறந்து போனாலும் வையமிருட் டானாலும்
தான்மறவாக் காவேரி தண்டமிழின் இன்சுவையை
நான்மறவேன் என்றோடி நல்வளமே செய்திடலால்
தேன்மொழியால் நாவலர்கள் செப்புவதும் கைம்மாறோ?

(4) சந்தனத்தைக் குங்குமத்தைத் தான்சாடிப் பொன்கொழித்து
வந்தனத்தை ஊட்டுகின்ற வண்மைமிகு காவேரி
முந்திக் கவேரனுக்கு மொய்குழலே நீ தோன்ற
எந்தத் திசையும் இருள்நீங்கி வாழ்ந்ததுவே.

(5) காவேரி நீருண்டால் சாவேரி வருமென்பார்
காவேரியே தண்ணீர் காசினியிற் றாமென்பார்
காவேரி நீராடப் பாவம் கழியுமென்பார்
காவேரி செந்தமிழோர் நாவேறு காரிகையே.

(6) மூவரங்கம் உன்னாலே முத்தமிழும் உன்னாலே
தேவரங்கே பூசை சிறந்ததுவும் உன்னாலே
பூவனைத்தும் அன்னம் புசிப்பதுவும் உன்னாலே
காவனைத்தும் உன்னாலே காவேரி வாழியரோ!

(7) சோற்றுவளந் தந்தாய் சோணாடர் என்றென்றும்
பொற்றுவளந் தந்தாய் பொன்னியெனும் பேர்பூண்டாய
தாற்றுவளந் தந்தாய் தண்டமிழின் நாட்டினுக்கே
ஆற்றுவளந் தந்தாய் அல்லல் தவிர்த்தாயே.

(8) தஞ்சாவூர் எங்கே தனித்த சிராப் பள்ளியெங்கே
எஞ்சாத கோவில்களின் ஏற்றமெங்கே பாட்டெங்கே
தஞ்சாம் அரங்கமெங்கே தண்டில்லை மன்றெங்கே
பஞ்சாய்ப்பறக்கும், நின் கண்ணோட்டம் பாயாதேல்

(9) நீறுகுழைத்திட்டார் நாமம் தரித்திட்டார்
தேறும் அனுட்டானம் செய்தார் மடமமைத்தார்
கூறும் அறம் வளர்த்தார் குன்றாக்கொடையளித்தார்
ஆறு காவேரியாம் அன்னை யருளாலே.

நாலடியார் ஆராய்ச்சி.

(ஆசிரியர் மு. மாணிக்க நாயகர், புதுவை.)

* உரிமை ஆசிரியருக்குரியது,

நமது தமிழகத்துப் பண்டை நூல்களின் திறனையுஞ் செவ்வியையும், நூலாராய்ச்சி மிக்கோர் பற்பல சமயங்களிலும் தத்தமது நுண்ணிய ஆராய்ச்சியின் மூலமாய் வெளியிட்டுள்ளனர்.

முச்சங்கங்களினாலும் நமக்குக் கிடைத்துங் கிடைக்காமற் போன பொன் போன்ற நூல்கள் பல மறைந்தொழிய, கடைச் சங்கக் காலத்து நூற்களிற் சிலவாயினும் எஞ்சியிருந்து நமது தமிழ் நாட்டின் சீரையும், சிறப்பையும், நாகரீகத்தையும் மலரச் செய்வதைக்கொண்டே நாம் ஒருவாறு திருப்தி கொள்ளவேண்டியிருக்கிறது. ஒரு தேசத்தின் பண்டைப் பழக்க வழக்கங்களையும் நீதி நேர்மைகளையும் வீரப்ரதாபங்களையும், நற்குண நல்லொழுக்கம் முதலியவைகளையும் அறிந்து கொள்வதற்கு அத்தேசத்தின் பண்டை நூல்களே தக்க உதவி செய்வனவாகும்.

அங்ஙனமே நமது தமிழ் நாட்டின் முற்கால நிலையைச் செம்மையாய் அறிந்து கொள்வதற்குத் தகுந்த தமிழ் நூல்களும் ஈண்டு பலவுள. அவைகளை நமது முன்னோர்கள், மேற் கணக்கென்றுங் கீழ்க்கணக்கென்றும் இரு வகையாகப் பிரித்துள்ளனர். அதில் நாலடியார் "கீழ்க் கணக்கு நூல்கள் பதினெட்டினுள் முதன்மையானது. இதனை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்பதனாலு மறியலாம்.

ஆக்கியோர் வரலாறும் நூல்வரலாறும்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சமண முனிவர் எண்ணாயிரவர் பொறுக்க முடியாத கொடும் பஞ்சத்தால் தத்தம் நாடுவிட்டுச் செந்தமிழ்ப் பாண்டி நாடடைந்து அம்மன்னவனால் ஆதரிக்கப்பெற்று அவனது அவைக்களத்தில் அமர்ந்திருந்தனர். பன்னாள் கழித்த பின்னர், பஞ்சம் நீங்கித் தந்நாடு செழித்ததென்றறிந்து, அவர்கள் தத்தம் பிறப்பிடஞ் செல்ல விருப்ப முற்றவராய் பாண்டியனைத்' தாம் செல்லுதற்கு விடை தருமாறு வேண்டினர். அவனும் பன்னூற் பயிற்சியுள்ள நல்லிசைப் புலவர்கள் தன் சபையில் இருப்பது, அதற்கு ஓர் அலங்காரமாமெனக் கருதி, அவர்களைப் பிரிந்திருக்கக் கருத்தில்லாதவனாய் விடை யளியாது தாமதித்து வந்தனன். இங்ஙனமிருக்க, அச்சமண முனிவரனைவரும் ஓர் நாள் சங்கேதமாய், "அறம் பொருள் இன்பம் வீடு" என்னும் நான்கு புருஷார்த்தங்களும் நன்கு புலப்படுமாறு தனித்தனி ஒவ்வோர் வெண்பாவைப் பாடிச் சிற்றேட்டில் எழுதித் தமது பீடத்தின் கீழ்வைத்து இரவில் யாரும் அறியா வண்ணம் அந்நாட்டை விட்டகன்றனர். பொழுது புலர்ந்ததும், அவ்வரசன் அப்புலவர்களைக் காணாமலும் சென்ற இடம் தெரியாமலும் வருந்தி, ஏவலாளரைக்கொண்டு, அவர்களிருந்த ஆசனங்களை அப்புறப்படுத்திச் சோதிக்கையில், ஒவ்வொரு பீடத்தின் கீழும்ஒவ்வொரு வெண்பா சீட்டில் எழுதிவைக்கப்பட்டிருந்ததைக்கண்டான். அவையனைத்தையும் எடுத்துப் பார்த்த அரசன், அப்புலவரைப் பிரிந்த ஆற்றாமையான் ஒன்றோடொன்று தொடர்பில்லாத அவற்றை வைகைப் பேராற்றில் வாரியெறிய ஏவினான். அவ்வாறு எடுத்தெறியப் பட்ட அவற்றுள், நானூறு பாடல் நீர் வழிச் சென்று நெடுங் கடல் சேராது எதிரேறிச் சென்றன. இம்மகிமைகண்டு, அரசன் மிகவும் வியப்புற்று அவற்றையெடுத்து ஒரு நூலாக்கி, "நாலடியார்" என ஓர் சிறப்புப் பெயரிட்டுப் போற்றிக் கொண்டனன். இதனை,

மன்னன் வழுதியர் கோன் வையைப் போற்றின்
எண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்,

என்னும் வெண்பாவினால் அறியலாம்" என்று வேலூர் காலேஜ் தமிழ்ப் பிரதம பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் தாம் பதிப்பித்த நாலடியாரிற் குறித்துள்ளார்.

நாலடியார் என்ற பெயர்.

நானூறு புலவர்கள் தனித்தனியாக ஒவ்வோர் வெண்பாவே பாடினதினாலும் நானூறு வெண்பாக்களையும் ஒருவரே பாடாமையினாலும் நூல் முழுதும் வெண்பாக்களாகவே அமைந்து விட்டமையாலும், அவ்வெண்பாக்கள் யாவும் மூன்றடியான் வரக்கூடிய சிந்தியல் வெண்பாக்களொன்றேனு மின்றி நந்நான்கு அடிகளால் வரக் கூடிய நேரிசை, இன்னிசை வெண்பாக்களாகவே பொருந்தி விட்டமையினாலும், இவைகளை வாரி யெடுக்கக் கண்ட அரசன் அருங்கலை விநோதனாகையினாலும் நூலுக்குப் பொருத்தமற்ற பெயரைக் கொடுப்பது தகுதி யின்மை யென்பதை யுணர்ந்தவனாகையினாலும் நாலடி வெண்பாக்களினாலாகிய இதற்கு "நாலடி" எனப் பெயரிட்டனன்.

குறள் வெண்பாக்களினா லாக்கப்பட்ட நூல்களுக்குக் குறள் என்ற பெயர் கொடுத்திருப்பதும் இதற்குப் பொருத்தமாகும். அவை திருக்குறள், ஔவைக்குறள் முதலியனவாகும்.

"நாலடி" என்பதுடன் சிறப்புப்பெயர்விகுதி "ஆர்" என்பதையுங் கூட்டி, இதனை "நாலடியார்"என வழங்கப்படுகிறது. "திருக்கோவை" என்பதற்கும், "ஆர்" விகுதி கூட்டி "திருக்கோவையார்" என்று வழங்கப்படுவதும் இதற்கு ஒப்பாகும்.

ஆகவே இந்நூலுக்கு "நாலடி" என்றும். "நாலடி நானூறு" என்றும் "நாலடியார்" என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

நாலடியார் மேன்மை.

இது நானூறு வெண்பாக்களைக் கொண்டு திகழ்கிறது. அவை 304 நேரிசை வெண்பாக்களும் 96 இன்னிசை வெண்பாக்களுமாக நிறைந்துள்ளன. அன்றியும் இது பால் வகையால் மூன்றும், இயல் வகையால் பதினொன்றும், அதிகார வகையால் 40ம் ஆக, பதுமனார் என்னும் அம்மதத்தைச் சார்ந்த பேரறிஞரால் முறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்நூலுக்கு அவராலேயே ஓர் சிறந்த உரையுஞ் செய்யப் பட்டதென்றுங் கூறப்படுகின்றது.

இந்நூலை நுணுகி யாராய்வார்க்குப்பல நறும் பொருள்கள் கிடைக்கு மென்னலாம். முற்காலத்தில் நமது அருந்தமிழ் மொழி எவ்வித உன்னத நிலை யிலிருந்த தென்பதும் எம்மாதிரியான உயர்வான தமிழ்ச் சொற்களை அற்றை நாளில் கையாண்டிருந்தார்களென்பதும், அக்காலத்துப் புலவர்கள் எத்தகைய கல்வி மேன்மையுற்றிருந்தன ரென்பதும் அவர்கள் மன உறுதி, நேர்மை, தைரியம், உள்ளத்தூய்மை முதலியவைகளின் தன்மை இன்னதென்பதும் இன்னும் பலவும் இந்நூலால் கிடைக்கும்.

பாக்களின் செவ்வியும் புலவர் திறனும் இந்நூற்பாக்கள் முழுதும் ஒருவகையான புதிய நயத்தை வாசிப்போர்கட் குதவு கின்றன. பாக்கள் முழுதுஞ் சொற்செறிவும், பொருட் செறிவும், உவமான உபமேயப் பொருத்தமும் சீரிய நற்கருத்துக்களுங் கொண்டனவாய் விளங்குகின்றன.

இக்காலத்தில் ஒரு வெண்பா வரையத் திறனற்றிருக்கும் நம்மிடையே அருமையான—பொன் போன்ற நானூறு பாக்களைக்காணும் போது ஓர் வகைத் திகைப்பும் வியப்பும் நமக்கு உண்டாகிறது. ஒவ்வொரு வெண்பாவிலும் இலக்கண வமைதி நிரம்பவும் பொருத்தமுறப் பொருட் செறிவுள்ள பல அரிய சொற்களைப் புணர்த்தி யிருப்பது வியக்கத்தக்கது. இந்நூலை நாம் கவனத்துடன் ஆழ்ந்து பார்க்கும் போது இப்பாக்களின் செம்மைக்கும் தற்காலப்பாக்களின் தன்மைக்கும் ஒரு பெரிய வேறுபாடு காண்போம். வார்த்தைகள் பலவும் வாயில் நுழைந்தும் உடனே மறக்குந்தன்மையை யுண்டுபண்ணுகின்றன.

(வரும்)



சபர்மதி ஆசிரமம்.

ஆமதாபாத்தை அடுத்து சபர்மதி நதி தீரத்திலுள்ள மகாத்மா காந்தியின் சத்தியாகிரக ஆசிரமத்தில் இப்பொழுது சில சீர்திருத்தங்கள் செய்யப் போகிறார்கள். மகாத்மா அந்த ஆசிரமத்திலுள்ளவர்களுக்குப் பெரிதும் கடுமையான விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அங்குள்ளவர்களுக்கு நாவடக்கமும் புலனடக்கமும் தலைமையானவையாகக் கருதப் பட்டன. உணவில் உப்புப் புளி சேர்க்கலாகாது. கலியாணமானவர்கள் அங்கு சேர்ந்த பின் மனைவிகளை உடன் பிறந்தார்களாகக் கருதி பிரமசரிய வாழ்க்கை நடத்த வேண்டும். இந்த விதிகள் மிகவும் சிறந்தவை யாயினும் தற்கால மக்களிடம் அவற்றை முற்றிலும் பூரணமாக நிறைவேற்றக் கூடிய உறுதியை எதிர் பார்ப்பது முடியாத காரியம். மேலும் உலக வாழ்க்கை வாழ்ந்து பின் உலகத்தைத் துறந்து சந்நியாச வாழ்க்கை வாழ விரும்புகிறவர்களுக்கே அவ்விதிகள், முற்றிலும் பொருந்தும். எனவே மேற்கண்ட இரண்டு விதிகளையும் நீக்கி விட்டதுடன் அந்த ஆசிரமத்தின் பொறுப்பை மகாத்மா ஒரு பஞ்சாயத்தாரிடம் ஒப்புவித்து விட்டார். கடுமையான விதிகளுக் கஞ்சிக் காந்தி யடிகள் ஆசிரமத்தில் சேர்ந்து வாழும் பயனை அடைய முடியாமலிருந்த பல இளைஞர்கள் இனி அதில் சேர்ந்து வாழ்ந்து பெரும் பயனடைவார்கள். ஆசிரமமும் வளர்ச்சியடையும்.

லோகோபகாரி.

12000 ஆசிரியர்.

துருக்கி அரசாங்கம் மிகுந்த வேகத்தோடு அபிவிருத்தியடைந்து வருவதை உலகமறியும். 46 வயதிற்கு மேற்பட்டுள்ள ஆண் பெண் மக்களுள் கல்வி அறிவு பெறாதிருப்பவர்க்குக் கல்விப் பயிற்சி அளிக்கும் பொருட்டு பன்னீராயிரம் உபாத்தியாயர்கள் துருக்கியில் நியமிக்கப்பட்டிருக்கின்றனராம். இதனால் மேலுலகத்தை நோக்கி நிற்கும் வயோதிகருக்கும் கல்வி நலமளிக்க வேண்டுமென்று அவ்வரசாங்கத்தார் விரும்புவது விளங்குகிறது. கல்வி அறிவை நாட்டிலுள்ள அத்தனைபேரும் பெறவேண்டுமென்று துருக்கி அரசாங்கம் தீர்மானித்து விட்டது. துருக்கியானது கமால் பாட்சாவின் ஆட்சியின் கீழ் வந்து மிகச்சில ஆண்டுகளே ஆகின்றன. இதற்கிடையில் ஆங்கு தோன்றியிருக்கும் அபிவிருத்தி எழுத முடியாததாகும். நமதுகல்வியின் நிலை எக்கதியிலிருக்கின்றது? வெட்கம்! வெட்கம்!

குமரன்.

வியபிசாரத்துக்கும் ஆதரவா?

சமீபமாக சென்னை சட்டசபையில் ஸ்ரீமான் கே. ஆர். வெங்கிடாராமய்யர் என்பவரால் விபசாரத்தைத் தடை செய்ய ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு அதை ஒரு தனிக் கமிட்டியாரின் ஆலோசனைக்கு விடவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப் பட்டது. இத் தீர்மானத்தைக் குறித்துப் பொது மககள் அபிப்பிராயம் அறியும் பொருட்டு இதன் ஆலோசனையை மூன்று மாதங்கள் ஒத்திவைக்கவேண்டுமென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இத்தகைய பொது விஷயங்களைப்பற்றி பொது மக்கள் விருப்பத்தை அறிவது அவசியமே. ஆனால் அத்திருத்தத்தைக் கொண்டுவரும் பொழுது அவர் நிகழ்த்திய பிரசங்கத்தைக் கவனிக்குங்கால் விபசாரத்தை ஒழிக்க முற்படலாகாது என்ற மனப்பான்மையையே அவர் பெரிதும் கொண்டுள்ளாரென்பது நன்கு புலனாகிறது. உண்மையில் இவரது மனப்பான்மையை நம்மால் அறியக்கூடவில்லை. நாட்டின் நலங்கருதி உழைப்பவரென்று கூறிக் கொள்ளும் இவர் நாட்டைப்பாழ்படுத்தி மக்கள்வாழ்க்கையை நிலைகுலையச் செய்துவரும் விபசார விடுதிகளை ஒழிப்பதற்கு எதிரிடையாகப் பேசியது கண்டிக்கத்தக்க தொன்றே. விபசாரத்தடை மசோதாவை எதிர்த்து இவர்கூறுங்காலை ‘இம்மசோதாவில் டாப்பர் வேலை செய்பவருக்கு சவுக்கடிகொடுக்கலாமென்று தண்டனை குறிப்பிட்டிருக்கிறது. நாகரீகம் அதிகரித்து வரும் இக்காலத்து இத்தகைய காட்டுமிராண்டிச் சட்டமியற்றுவது நியாயமா?’ என இவர் வாய் கூசாது வெளியிட்டுள்ள மொழிகளிலிருந்து டாபர் வேலை பார்ப்பதும் விபசாரம் செய்வதுமே நாகரீகத்தின் அடையாளங்களென இவர் கொண்டுள்ளாரென்பது வெட்டவெளிச்சமாகின்றது. இந்திய சட்டசபையில்ஆச்சாரியார் இளமை மணமில்லாவிடின் பெண்கள் ஒழுக்கமும் கற்பும் குன்றுமென்றார். தற்போது சென்னையில் திரு. சத்தியமூர்த்தி விபசாரத்தை ஒழிக்க சட்டம் கொண்டு வருவது காட்டுமிராண்டித்தனம் என்று கூறிவிட்டார். அந்தோ! இத்தகைய போலித் தலைவர்கள் பலர் தோன்றின் நம் பாரதத்தாய் விடுதலை பெறுவதெங்ஙனம்? இவர் போன்றார்க்கு இத்தகைய சமூக சீர்திருத்தச் செயலில் கலந்து நன்மையளிக்க விருப்ப மில்லாவிடின் வாயைமூடிக்கொண்டு வாளாயிருத்தலே சாலவும் சிறந்ததென்பதே எமது மனப்பூர்வமான அபிப்பிராயம். இவ்வாறு செய்ய இவர்கள் இனிமேல் முற்படாமல் மக்களிடையே தமக்குள்ள சிறிது நன்மதிப்பையும்இழந்து விடாமல் இவர்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கிறோம்.

சுதேச பரிபாலினி.

பரம்பரை இயந்திரம்.

இன்று உலகம், இயந்திர உலகமாகவே மாறிக் கொண்டிருக்கிறது. ரசாயன சாஸ்திர அறிவு உலகத்தில் இன்னும் என்னென்ன மாறுதல்களைச் செய்யப் போகிறதென்னும் விஷயம் சிறந்த மேதாவிகளின் அறிவிற்கும் எட்டாததா யிருக்கிறது. சென்ற இருபத்தைந்து வருஷங்களுக்குள்ளாக உலகத்தில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருற்கின்றன? பூமியில் மோட்டார்கள் பறக்கின்றன. ஆகாயத்திலோ விமானங்கள் பறக்கின்றன. தந்திச் செய்திகள், கம்பி முதலியவைகளில்லாமலே பதினாயிரக் கணக்கான மைல் தூரமுள்ள இடங்களிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. ஆஸ்திரேலியாவிற்கும் இங்கிலாந்திற்கும் கம்பியில்லா டெலிபோன் மூலம் பேச்சு நடக்கிறது. சமீபத்தில் ஸ்ரீ. பெயிர்டு என்ற ரசாயன சாஸ்திரி, கம்பியில்லா டெலிபோனிலேயே பேசுவோர் உருவமும் தெரியும்படி செய்யும் புதிய இயந்திரத்தையும் கண்டு பிடித்து விட்டார். மற்றோர் ரசாயன சாஸ்திரியோ, பிறர் வாயைத் திறந்து தங்கள் கருத்தைத் தெரிவிக்காமலே ஒரு இயந்திரத்தைக் கொண்டு அவர் கருத்தைத் தெரிந்து கொள்ளும் முறையைக் கண்டு பிடித்திருக்கிறார். முற்கால யோகிகளுக்கு ஞான திருஷ்டி யுண்டென்றும், ஒருவரைக் கண்டதும் அவருடைய கருத்துக்களை யெல்லாம் தெரிந்து கொண்டு விடுவார்களென்றும் புத்தகங்களில் படித்திருக்கிறோமே யன்றி நேரில் கண்டதில்லை. ஆனால் இப்பொழுது சாதாரணமானவரும் ஞான திருஷ்டியால் அறிந்து கொள்வது போன்றே, ஒரு இயந்திரத்தின் சகாயத்தால் அறிந்து கொள்ள முடியுமாயின் ரசாயன சாஸ்திரத்தின் பெருமையை என்னென்று கூறுவது? அமெரிக்காவிலோ இயந்திர மனிதன் நடமாட ஆரம்பித்திருக்கிறான். சாதாரண மனிதர் என்ன வேலைகளைச் செய்கின்றனரோ அந்த வேலைகளை யெல்லாம் இயந்திர மனிதனும் செய்கிறான். அதிகம் கூறுவானேன்? உலகம் முழுவதும் இயந்திர உலகமாகவே மாறிக் கொண்டிருக்கிறது. இந்த யுகம் இயந்திர யுகமாதலின் வாரந்தோறும் நூதன நூதனமாகத் தோன்றிக் கொண்டிருக்கும் இயந்திரங்களைக் குறித்தும், மற்ற ரசாயன சாஸ்திர ஆராய்ச்சிகளைக் குறித்தும் எழுதிவருவது நன்மையாகும்.

ஒரு சாமானை நிறுப்பதற்கும், அதனுடைய குணத்தைத் தெரிந்து கொள்வதற்குங் கூட இயந்திரமிருக்கிறது. ஆனால் மனிதர், மிருகங்கள் முதலியவைகளின் பரம்பரையைத் தெரிந்து கொள்வதற்குத்தான் இதுவரையில் இயந்திரமில்லாதிருந்தது. இக் குறையையும் ஸ்ரீ. ஆர். ஆர். கிரேவஸ் தாம் கண்டு பிடித்திருக்கும் புதிய இயந்திரத்தால் போக்கி விட்டார். சாதாரணமாக மனிதருக் குள்ளேயே "நான் அந்த பரம்பரையைச் சேர்ந்தவன், இந்த பரம்பரையைச் சேர்ந்தவன்" என்ற போட்டியும் சண்டைகளும் அதிகமாயிருக்கிறதென்பதை நன்கறிவோம். மேலும், மாடு குதிரை முதலியவைகளில் சில வகையான பரம்பரைகளை, அவற்றிடமுள்ள சில அரிய குணாதிசயங்களுக்காகவே உபயோகிக்கின்றனர். இவ்விதமிருக்கும்பொழுது கலப்பு ஜாதி கால்நடைகளை வாங்கி ஏமாந்து போகாமலிருப்பதற்காக இப்புதியஇயந்திரத்தை முக்கியமாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இத்தகைய இயந்திரமிருப்பது அத்தியவாசிய மென்பதற்கு உதாரணமாக ஒரு முக்கியவிஷயத்தை கவனிப்போம். திருச்சி ஜில்லாவிலுள்ள காங்கயம் முதலிய விடங்களிலிருக்கும் உயர்ந்த ஜாதி மாடுகளிடம் முக்கியமாகச் சில சிறந்த குணங்களிருப்பதாகக் கூறுகின்றனர். அத்தகைய மாடுகளையே வாங்கவேண்டு மென்ற அபிப்பிராயத்தோடு பலர் வேறு வகையான மாடுகளை வாங்கி ஏமாந்து போகின்றனரென்பதைக் கேள்வியுறுகிறோம். அதோடு சில ஜாதி மாடுகள் நல்ல பால்கறக்கக் கூடியவைகளா யிருக்கின்றன. அத்தகைய மாடுகளைப் போன்ற தோற்றமுடைய மாடுகளைப் பலர் வாங்கி ஏமாந்துவிடுகிறார்கள். இத்தகைய கஷ்டங்களெல்லாம் இப்புதிய இயந்திரத்தால் அடியோடு நீங்கிவிடும்.

ரசாயன சாஸ்திரிகள் இந்தப் புதிய இயந்திரத்தால் பலவித நன்மைகள் ஏற்படப் போவதாகக் கூறுகின்றனர். இந்த இயந்திரத்தில் வரிசை வரிசையாக அலுமினியத்தால் செய்த பல சிறு கிண்ணங்களிருக்கின்றன. ஒவ்வொரு வரிசையும் ஒரு மிருகத்தின் பரம்பரையைக் காட்டுவதற் கிருப்பதோடு, மற்ற சந்ததிகளைக் காட்டுவதற்கும் மற்றும் மூன்று வரிசைகளிருக்கின்றன. அவற்றுள் அதிக வெண்ணெய் முதலிய சத்துக்களைக் காட்டக் கூடியதற்கும், வெண்ணெய் அதிகமாய் எடுக்கா

34-வது பக்கம் பார்க்க.)



சுமார் 20 லட்சம் இந்தியர் வெளி நாடுகளில் கூலிகளாகவும், வர்த்தகர்களாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் குடியேறி வாழ்ந்து வந்தபோதிலும், அவர்களைப் பற்றி கவனிக்க, தனியாக இந்தியசர்க்காரில் ஒரு இலாகா இல்லாமல் இதுவரை இருந்தது விசனிக்கத் தக்கது. ஒவ்வொரு நாட்டிலும், குடியேற்ற நாட்டு இலாகா என்று தனியாக சர்க்காரில் ஒரு இலாகா உண்டு. இங்கிலாந்தில் இந்த இலாகாவிற்குத்தான் கர்னல் அமரி மந்திரியாயிருக்கிறார். இந்தியாவில் அம்மாதிரி ஏற்படுத்த வேண்டுமென்று சட்ட சபையில் அடிக்கடி தலைவர்கள் வற்புறுத்தி வந்ததையும் ராஜாங்க சபையில் இதைப்பற்றி ஸ்ரீ. ஜி. ஏ. நடேசன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது சர். ஹபிபுல்லா, தாம் இந்தியா மந்திரிக்கு அறிவிப்பதாகக் கூறியதையும் நண்பர்கள் அறிவார்கள். கடைசியாக இந்தியா மந்திரி இதற்கு அனுமதி கொடுத்து விட்டார் என்பதைக் கேட்டு சந்தோஷமடைகிறோம். இந்திய சர்க்கார் கல்வி இலாகாவுடன், குடியேற்ற நாட்டு இந்தியர்களைப் பற்றி கவனிக்க தனியாக ஒரு இலாகா சிருஷ்டிக்கப்படுமென்றும், அதற்கு ஒரு உதவி காரியதரிசி நியமிக்கப்படுவாரென்றும் நேற்று "தமிழ்நாடு"வில் வெளியான செய்தியை நண்பர்கள் பார்த்திருக்கலாம். இவ்வளவு காலம் கழித்தாவது இதை நியமிக்க வேண்டிய அவசியத்தை சர்க்கார் உணர்ந்து கொண்டதைப் பாராட்டுகிறோம். வெளிநாட்டு இந்தியர்கள் நிலைமை ஒவ்வொரு விதமாயிருக்கிறது. கயானாவிலும், மலாயிலும் தோட்டக்காரர்களிடம் கூலிகள் படுந்துன்பம் சகிக்கக் கூடியதாயில்லை. மலாய் நாட்டில் கூலிகள் சம்பளம் இவ்வளவு விகிதத்திற்குக் குறையக் கூடாது என்ற சட்டம் ஒன்றுமில்லை. தென் ஆப்பிரிக்காவில் போயர்களிடமும், பிரிட்டிஷாரிடமும் இந்திய சமூகமே படும் அவமானத்திற்கு முடிவைக் காணோம். ஒப்பந்தங்கள் ஏற்பட்டபோதிலும், தூதர் கூட்டங்கள் தென் ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் போய்வந்த போதிலும், இந்திய சர்க்கார் ஏஜண்டாக அதிகௌரவ சாஸ்திரி நியமிக்கப்பட்ட போதிலும், தென்னாப்பிரிக்கா இந்தியர் கஷ்டம் மட்டும் ஒழிந்ததாயில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னால் தென்னாப்பிரிக்கா மந்திரி ஸ்ரீ டில்மன் ராஸ் என்பவர் பேசிய போது, "இந்தியர் தாங்களாக சர்க்கார் சொல்லுகிறபடி கப்பல் ஏறி தென்னாப்பிரிக்காவை விட்டுப் போகாவிட்டால், அவர்களை பஜார்களில் ஒதுக்கி வைக்க சட்டஞ் செய்யப்படும்" என்று சொன்னார். ஆகவே, தென் ஆப்பிரிக்கா இந்தியரை பிடித்த சனியன் ஒழிந்து போனதாகச் சொல்லுவதற்கில்லை. தென் ஆப்பிரிக்காவிலிருந்து சர்க்கார் செலவில் கப்பலேறி இந்தியாவிற்கு வந்தவர்கள் தங்க இடமின்றி, உண்ண உணவின்றி திண்டாடுவதை நாம் பார்த்து வருகிறோம். சில தினங்களுக்கு முன்னால் பிரிட்டிஷ் கயானாவிலிருந்து "சட்லஜ்" என்ற கப்பலேறி வந்த 700 கூலிகளில் 37 பேர் இறந்து போயினர் என்ற கொடுமையைக் கேட்கும்போது, இந்தியக் கூலிகள் எத்தகைய கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை சிந்தித்து அறிந்து கொள்ளுவதும் கஷ்டமாகும். கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இந்தத் தொல்லை விட்டதாயில்லை. கூலிகளைத் தவிர, மற்ற இந்திய வியாபாரிகள், டாக்டர்கள் முதலியவர்கள் கண்ணியமாய் வாழ்வதற்குக் கூடவழியில்லாமல் புதிது புதிதாகச் சட்டங்கள் செய்து வருகிறார்கள். கர்னல் அமரி குடியேற்ற நாடுகளிலுள்ள வெள்ளையரின் நன்மையை கவனிப்பதிலேயே திருஷ்டியுடையவராயிருக்கிறார். பார்லிமெண்ட், இந்தியாவின் பொறுப்பை கடவுளிடம் இருந்து வாங்கியிருப்

பதாகச் சொல்லப்பட்ட போதிலும், வெளிநாட்டு இந்தியரைப் பற்றி கேள்வி கேட்கக் கூட இங்கிலாந்தில் ஒருவரையும் காணவில்லை. இந்த மோசமான நிலைமையில் இருக்கும் இந்தியரைக் கவனிக்க இந்திய சர்க்காருக்கே முக்கியமாக சிரத்தை இருக்க வேண்டும். வெளிநாட்டு இந்தியரைக் கவனிக்க தனியாக இலாகாவோ, உத்தியோகஸ்தரோ இந்திய சர்க்கார் காரியாலயத்தில் இல்லாதபடியால், அவர்கள் கதி அதோகதியாகவே இருக்கிறது. மலாய் நாட்டுக்கு அனுப்பும் கூலிகளில் இத்தனை ஆண் கூலிகளுக்கு, இத்தனை பெண் கூலிகள் இருக்க வேண்டுமென்ற சட்டத்தை, இன்னும் ஒரு வருஷம் அமுலுக்குக் கொண்டு வராமல் இருக்க இந்திய சர்க்காரைக்கேட்டுக் கொள்வதற்காக சென்ற வருஷம் ஸ்ரீ. கில்மன் என்பவர் மலாய் நாட்டிலிருந்து வந்ததை நண்பர்கள் அறிவார்கள். அவர் சிம்லா சென்று இந்திய சர்க்காரைக் கலந்து பேசிவிட்டு சென்னைக்கு வந்தார். அச்சமயம் ஒரு கனவானிடம் பேசிக்கொண்டிருந்தபோது, மலாய் நாட்டு இந்தியர்களைப்பற்றி இந்திய சர்க்காரைச் சேர்ந்தவர்களுக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லையென்று சொன்னார். இந்திய சர்க்காரே இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்குமானால், வெளிநாட்டு இந்தியரைப்பற்றி எந்த சர்க்கார் கவலை எடுத்துக் கொள்ளப் போகிறதென்று நமக்குத் தெரியவில்லை. இப்பொழுது தனி இலாகா ஏற்படுத்தியாய் விட்டது. இனியாவது வெளி நாட்டார் கேலி செய்யாமல் இருக்கும்படியாகவும், உண்மை சிரத்தையோடு வெளிநாட்டு இந்தியரைக் கண்காணித்து வரும்படியாகவும் அந்த இலாகாவை சர்க்கார் நடத்தி வருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

(தமிழ் நாடு.)

இந்தியருக்கு ஆபத்து.

பஸரா துறைமுகத்திலுள்ள இந்திய தொழிலாளர்களையெல்லாம் விலக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக இராக்கியர்களை நியமிக்க இராக் சர்க்கார் ஆரம்பித்துவிட்டனர். இதுவரை 11 இந்தியர்களை விலக்கி விட்டார்கள். இன்னும் 15 பேர்களை டிசம்பர் மாதத்திற்குள் விலக்கி விடுவார்கள். மிகுந்த திறமை வாய்ந்த சில இந்தியர்களைத் தவிர மற்றவர்களெல்லோரையும் அடுத்த மார்ச்சு மாதத்திற்குள் விலக்கி விடுவார்கள்.

32-ம் பக்கத் தொடர்ச்சி.)

தென்பதைக் காட்டுவதற்கும் பல வர்ணமுள்ள பந்துகளைப் போட்டிருக்கிறார்கள். அதிலுள்ள சூட்சுமப் பொத்தானை அமுக்கியதும் எந்த மாட்டை பரிசோதிக்கிறோமோ அந்த மாடு எத்தகைய சந்ததியைச் சேர்ந்த தென்பதைத் தெளிவாகக் காட்டி விடுகிறது. முட்டைகளைக்கூட இந்த இயந்திரத்தைக் கொண்டு பரீட்சித்து நிர்ணயித்துக் கொண்டு விடலாமென்று கூறுகின்றனர். இனி ஒவ்வொரு பால் பண்ணையிலும் இந்த இயந்திரத்தை உபயோகித்து நல்ல மாடுகளையே வாங்கி அதிகம் பலனடைய ஆரம்பித்து விடுவார்களென்பதில் சந்தேகமில்லை. மனிதரின் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளவும் இந்த இயந்திரத்தை உபயோகிக்க முடியுமா வென்பதைக் குறித்து ரசாயன சாஸ்திரிகள் யோசித்து வருகின்றனர்.

(தமிழ் நாடு)

வியாபாரிக் கழகு
விளம்பரம் செய்தல்.

ராமாமிர்தம் ஐயர்

அல்லது

பயனற்ற படிப்பு.

(ஒரு நாடகம்.)

(ஸ்ரீ. கே. எஸ். சுந்தரம்.)

(காபி ரைட்.)

காட்சி 1.

இடம் :—தெரு.

காலம் :—பிற்பகல்.

நடிகர்கள் :—ராமாமிர்தம், எம். ஏ.

வட்டி சிங் :—மார்வாடி.

ராமாமிர்தம் கான்வொகேஷனுக்குப் போய் M. A. டிக்கிரியை வாங்கிக்கொண்டு தானே மனதில் ஆகாசக் கோட்டை கட்டிக்கொண்டும் இங்கிலீஷில் ஒரு பாட்டு பாடிக்கொண்டும் பிரவேசிக்கிறார்.

O, Laughter! Laughter
Inextinguishable joy & Laughter.

I stood first in the Examination
and honoured in public Estimation
His Excellency awarded the M.A. degree
Ah, Ah, how glee I feel over the degree.

ராமா :—Blessed be this day, I........ M. A. 1st in the Presidency. His excellency the Governor of Madras, Representative of his Majesty King of England and Emperor of India and practically the Ruler of our great Presidency. அன்னாரின் திருக்கையினாலல்லவோ டிகிரியைப் பெற்றேன். என்ன ஆனந்தம், இன்று ஒரு நல்ல நாளாகும். நான் எடுத்த ஜென்மம் பவித்தமாயிற்று. என்ன Honour! Greatest honour. A man can really be proud of. என்னைவிட "Happiest Men" இந்த உலகில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் —என் "wife" தன் "அஸ்பெண்ட்" எம். ஏ. என மற்ற படிக்காத ஸ்திரீகளுடன் பேசும் போது எத்தனை தூரம் குதூகலப் படுவாள். உடனே டிகிரியைக் கொண்டுபோய் அவளிடம் காட்டவேண்டும். ஹா! என்ன வேலை செய்தேன். கொஞ்சம் தாமதம் செய்யாது போனேனே, என்ன முட்டாள் தனம் செய்தேன். நான் எம். ஏ; கணக்கில்லாத ஜாதகங்கள் கல்யாணத்திற்காக வருமன்றோ?......மெட்ரிக் 1000 ரூ, எப். ஏ, 1500 ரூ, பி. ஏ, 2000 ரூ; எம். ஏ. 5000 ரூ; வரதட்சணை என அடுத்தாத்து வைகுண்ட சாஸ்திரி அடிக்கடி சொல்வதுண்டே! மாமனார் என் படிப்புக்காக ரூ. 2000 கொடுக்க என்ன பாடு பட்டுவிட்டார். இப்பொழுதானால் அவரை ஓர் கை பார்த்து விடுவேன். இனி செய்வதென்ன!—"Too late to think of it now" முதலில் ஒரு பிரஸுக்குப்போய் 100 விஸிட்டிங் கார்ட்ஸ் ராமாமிர்தம் அய்யர், எம். ஏ. என பிரிண்ட்" செய்து விட்டு மறுஜோலி பார்க்கவேண்டும். Really! A man without some alphabets to add after his name is just like a woman without ornaments. I say-India can have salvation only when 75% of her population take the degree of B. A. & M. A.

வட்டிசிங் :—(மூட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு எதிரில் வருகிறான்) என்னா சாமி! நம்போ! மார்வாடிங்கோ! ரோஜ்கார் பண்ணே முதல் முதல் வந்தாங்கோ! அபசகுன் கருப்புத் துணி போட்டு முன்னே வாரே! இது என்னா! எத்னா பாரி சட்டை! துணி ரொம்பா பிடிக்குமே! மத்ராஜீ-பகுத்கரச்-செலவு செய்ராங்கோ! இந்தா-லம்பா-பெரிய சட்டை என் போடணும். சின்ன சட்டை போதாதா, நீ சொல்லு சாமி (பல்லைக் காட்டுகிறான்)

ராமா:—(கோபத்துடன்) "Nonsense," "Stupid! shut of" நான் எம். ஏ. பரீக்ஷையில் முதலில் "பாஸ்" செய்திருக்கிறேன். என்னைப்பார்த்து என்ன சொல்கிறாய் நீ.

வட்டிசிங் :—அது என்னு-சாமி-எம் ஏ. ஹாஹா, ஹா (சிரிக்கிறான்)

ராமா :—M. A. என்றால் பெரிய படிப்பு.

வட்டி சிங் :—இதுக்கு எத்னு புஸ்தகம் படிக்கினும் சாமி. இந்த தோ எழுத்துக்கு இத்னு பெரிய சட்டெடன்னு, ஏ. பி. ஸி. டி. லே பத்துபன்னிரெண்டு தெரிஞ்சா பாரி பாரி சட்டே போடனுமா ? அது தான் மதருசிலே —சிமைத்துணி வியாபாரம் - பஹுத் அச்சா-சல்த்தா நம்போ மார்வாடிங்கோ லக்ஷக்கணக்காய் சம்பாதிக்கிறான்.

ராமா :—" Mind your business "

வட்டிசிங் :—(பல்லைக்காட்டி) கோபிச்சுக்கிடாதே ! சாமி ! மார்வாடிங்கோ அடித்தாலும் காரியத்திலே குறி. நீங்கோ மதருஸ் ஆளுங்கோ. மூக்கிலே கோபம் வைக்கறுங்கோ. சட்டை இத்னு லம்பா பெரிசு போடுரீங்கோ—கர்க்கே கேட்டாக்கே கோபிச்சுக்கிடரே ! சொல்லு சாமி—நான் ஏழை.

ராமா :— M. A. என்றால் அது தான் பெரிய பரீக்ஷை. இதைவிடப் பெரியது ஒன்றுமில்லை. இந்தப் பரீக்ஷை பாஸ் செய்கிறவர்கள் தான் இந்தச் சட்டை போடலாம்.

வட்டிசிங் :—சரி ! மகாராஜ் ! நீ என்ன உத்யோகம் செய்யரே.

ராமா :—இன்று தான் பட்டம் வாங்கினேன். இனி வேலை பார்க்கவேண்டும். இன்னும் ஒன்றிரண்டு மாதத்தில் கிடைக்கலாம்.

வட்டிசிங் :—(கும்பிட்டுக்கொண்டு) கோபம் செய்யாதே மகாராஜ். இந்தப்படிப்பு எத்தனை வருஷம் படிச்சே. பைசா எவ்வளவு செலவு செய்தே! சொல்லு சாமி.

ராமா:—18 வருஷம் படித்தேன். ரூ. 5000 க்கு மேல் செலவாயிற்று.

வட்டிசிங்:—ஹும்—பாஞ்ச் ஹஜார்--5000 ரூபாய்—அரே—ரே— (கணக்குப் போட்டு பார்க்கிறான்) கெடுத்தான் சாமி—நம்போ—மார்வாடிங்கோ 10--30--40 தம்படி செய்திருப்பான். அரே சாமி-நாசம் செய்தான். முதலை கெடுத்தான் (தலையி லடித்துக் கொள்கிறான்.)

ராமா:—(யோசித்து) சரி! நீ எங்கு வந்திருக்கிறாய்? சென்னையில் உனக்கு என்ன வேலை?

வட்டிசிங்:—மகாராஜ்! மார்வாடி சும்மா ஒரு ஊரில் கால் வைக்க மாட்டான். நம்மளுக்கு முதலுமில்லே. இதோ! என் ஆஸ்தியைப் பார் சாமி! (இடுப்பில் சுற்றியுள்ள வேஷ்டிக்கு உள்ளிருந்து பையை எடுத்துக் கயிற்றை அவிழ்த்துத் தரையில் தட்டுகிறான்) ஒரு அணு-தீன் காலணு தம்படி 12. இதுதான் முதல் சாமி. இந்த சொம்பும், கயிறும் நம்ப சொத்து. இன்னும் 4, 5 வருஷத்தில் பணம் சம்பாதித்து நம்ப ஊருக்குப் போவான் சாமி.

ராமா—Nonsence. Big Liar. Physically Financially Mentally impossible. $2\frac{3}{4}$ அணுவிலா? அதிலும் சென்னையிலா சம்பாதிப்பது. ஒருநாளும் முடியாது. உனக்குமெட்ருஸ் தெரியாது. உடனே தந்தி கொடுத்து பணம் வரவழைத்து ஊர்போய் சேரு. வீணுகக் கஷ்டப் படாதே. நான் எம். ஏ. படித்தவன், உலகம் தெரிந்தவன். புத்திமதி சொல்கிறேன் கேள்.

வட்டிசிங்—என்னசாமி! நீ நம்பளுக்கு சம்பாதிக்கிறான். நம்பிக்கையுண்டு மகாராஜ். இந்த முதல்லே சம்பாதிக்கறுன்பார். சாமி! அடிக்கடி நம்பளுக்கு தோஸ்தி இருக்கட்டும். மகாராஜ் மறந்து விடாதே, ஏழை பேரில் தயவு வை. மகாராஜ் எம் ஏ. மகாராஜ். ராம் ராம்.

காட்சி 2.

இடம்:—தெருவில் வெற்றிலை பாக்கு கடை சமீபம்.

காலம்:—மாலை.

நடிகர்கள்:—ராமாமிர்தம் ஐயர், டபார்கான் பேப்பர் விற்கும் பையன், வெற்றிலை பாக்குக் கடைக்காரன்.

பேப்பர் பையன் :—மெட்ராஸ் மெயில் 2 அணு, ஹிண்டு" 1 அணு, "சுதேசமித்திரன்" "தமிழ் நாடு" 1 அணு ஸார்.

ராமா:—அடே பையா. அந்த நாலு டெய்லி பேப்பரையும் கொடு. இந்தா ஐந்து அணு.

பேபர்:—(கொடுத்துவிட்டு) மாடர்ன் ரெவியூ, லக்ஷ்மி, விநோதினி, வேணுமா? சாமி!

ராமா:—நோ.

பேபர்:—(போகிறான்)

ராமா;—(தனக்குள்) Wanted இருக்கிறதா பார்ப்போம். (பிரித்துப் பிரித்துப் பார்க்கிறார்.)

டபார்கான்—(பிரவேசித்து) கபான் அல்லா பிரதர். என்ன நி ரொம்ப பேப்பர் படிக்கிறான். உள்ளே படிக்கிறான் இல்லே. வெளி விளம்பரத்தை படிக்கிறான். ல-ஹொல்லா! என்னு பாயி! ஹ்ா-ஹ்ா-ஹா-சிரிக்கிறான்.

ராமா:—No Brother, wanted ஐ பார்க்கிறேன். "பாஸ் பண்ணி 11 Months ஆகிறது. இன்னும் வேலே கிடைக்கவில்லே. பெரிய விசாரமாயிருக்கிறது. ராத்திரி எல்லாம் சிவன் ராத்திரியாய் கழிக்கிறேன். Stupid world, Educated—க்கு மதிப்பே யில்லே.

டபார்—சரி! நம்பளுக்கு Mail ஐ கொடு- பார்க்கரான் (கொஞ்சநேரம்) பார்த்ததும் திடீரென பிஸ்மில்லா! ஹரே! பிரதர் நி Lucky Brother....

ராம்.—என்ன Brother?...என்ன சமாசாரம்.?

டபார்கான் —Wanted a clerk on Rs. 40 Must be a graduate:—Apply........நீ உடனே போ, அல்லா மாலீக்.

ராமா.—என்ன! M. A. 1st in the Presidency Rs. 40 சம்பளமா! Nonsense; (யோசித்து) சரி என்ன செய்வது முதலில் Footing ஏற்பட்டால் அப்பரம் பார்ப்போம்.

டபார்— "I wish you good luck Brother".

ராம்:—"Thank you very much—Good evening".

டபார்:— "Good Evening"....(போகிறார்.)

ராமா:—அதோ! அந்தக்கடையில் போய் 'I shall have a drink' (போகிறான்.)

கடைக்காரன் :—சாமி என்ன வேணும்— Syrup milk போடட்டுமா ?

ராமா :—Ice போட்டு ஒரு Kola கொடு....

கடை: —இதோ கொடுக்கி...சாமி அவடெ இருக்கி (பெஞ்சைக் காட்ட. ராமாமிருதம் உட்காருகிறார்...கடைக்காரன் கலர் கொடுக்க ராமாமிருதம் அதை வாங்கிக் கொண்டு.)

ராமா :—உனக்கு எந்த ஊர் ?

கடை :—மலேயாளம்.

ராமா :—இங்கு வந்து எத்தனே வருஷமாச்சு...

கடை :—2 கொல்லம் கழிஞ்ஞு...

ராமா :—மாசம் உனக்கு என்ன கிடைக்கும்...

கடை :—ஒரு பத்து நூறு ரூபாய் கிட்டும்.

ராமா :—உனக்கு எப்படி இந்தக்கடை வைக்க எண்ணம் வந்தது ?

கடை :—சாமி ! நான் ஆத்யம் சென்னேக்கு வரும்போ கையில் துட்டில்லா: தெ. 3 பிராட்வே கோபாலசாமி ஐயர் ஓட்டலில் வேலேக்குப் போய்—மாசம் சாப்பாடு போக ரூ. 5 ஐயா கொடுத்து...அப்பரம் ரூ 10 கொடுத்து. ஒரு பத்து அன்பது ரூபாய் கைக்குக்கிட்டியப்போள் இக்கச்சோடம் தொடங்கி, ஒரு கொல்லத்திலே ஒரு 200 ரூபாய் லாபம் கிட்டி...ஆலப்பெழேலே ஒரு சிறு வீடு வாங்கி ...சாமி ஆசிர்வாதத்லே மாசம் 100 ரூபா கிட்டும்.—நமக்கு மூணு குட்டிகளுண்டு—சாமி ! வெத்திலே கொடுக்கட்டுமா ?

ராமா :—கோ, கோ, வேண்டாம். (பெருமூச்சு விட்டுத் தனக்குள்) M. A. "1st in the Presidency" 40 ரூபாய் சம்பளத்துக்குத் திண்டாடப் போறேன்—இந்த மலேயாளி "காபி ஓட்டல் பிலேட் க்ளீனர்" ரூ. 100 சம்பாதிக்கிறானே—really God helps those" Who help themselves' வெறும் படிப்பினுல் மட்டும் பலனில்லே. என்பதற்கு இவனே நல்ல உதாரணம்—படிச்சுப் படிச்சுக் கோட்டை கட்டி விடலாமென நினைக்கும் என்னேப்போன்றவர்களின், உள்ளக் கண்ணே த்திறந்து உண்மையை வெளியாக்கும் குரு இவனே. Truly! We have given too much of our attention to more education and have sadly neglected the economic position ofour country. அதனுடைய பலன் an army of unemployed graduates in our country.

Drop

காட்சி 3,

இடம் :—ராமாமிர்தம் ஐயர் வீடு.

காலம் :—காலை.

நடிகர்கள் :—ராமாமிர்த மய்யர், அவர் மனைவி.

ராமாமிர்தம் ஐயர் கவலையுடன் எழுதிக் கொண்டிருக்க அவர் மனைவி பின்னல் வந்து சற்று நேரம் நின்று கொண்டிருந்தும், ஐயர் திரும்பிப் பாராததால்.

மனைவி :—ஒங்களைத்தானே !

ராமா :—(பதிலில்லை).

மனைவி :—நாந் தான்னு ! திரும்பிக் கூட பார்க்காமே என்னமோ எழுதின்டே இருக்கேளே.

ராமா :—என்னடி! பாக்காது கேக்காது ! பாத்ததும், கேட்டதும் போரும், போ உன் வேலையைப் பார்த்துண்டு.

மனைவி :—எத்தனை நாளக்கி ஒத்தொத்தரைப் போலே பாத்துப்பாத்து அலுத்துப் போச்சு, எதிராளாத்து குட்டியோட ஆம்படையான் அவ இல்லாதே அரை நாழி போது போகல்லே இங்கானும், அவ போடாத போனு சாப்படராதே இல்லையாம்.

ராமா :—அதுக்காக நான் என்ன பண்ணனும் இங்கே! எப்போ பாத்தாலும் ஒன்மூஞ்சியே பாத்துண்டே இருக்கனும் இங்கரேயா ? அந்த அசட்டுக் கிட்டுவுக்கு அவன் மாமனர் அந்தப் பெண் போராலே 5 வேலி எழுதி வச்சிருக்காராம். இத்தனைக்கும் அவருக்கு அது வேது பெண்.

மனைவி :—ஆமா. அவனுக்குத்தான் ஒங்களைப்போலே படிப்பில்லே. நீங்க M. A. பாஸ் பண்ணி யிருக்கேளே. ஒங்களுக்கு இன்னொருத்தர் கொடுப்பானேன்?

ராமா:—சரி! அது எம்மேலே தப்புத்தான் நான் அப்பவே ரூ. 5000 கீழே வச்சாத்தான் முடியுமின்னு, அப்போது ஒங்கப்பா தலையே அடகு வச்சாவது கொடுத்துத் தானே இருப்பார்.

மனைவி:—போருமே! 5000 ரூபாய் கொடுத்தா என்ன? M. A. போராது இன்னும் நாலு பரீட்சைக்குப் படிக்கிறேன் என்று, அந்தக் காசையும் கரியாக்கப் போரேள்--இதானே இதுக்குக் குடுக்கல்லே இங்கர தென்ன?

ராமா:—சீ! படிப்பில்லாத மூடம்-அறிவே கிடையாது போ அந்தண்டே! எனக்கு வேலையிருக்கு, என்னையும் அவனாட்டமா அசடென்று நினைச்சாயோ? பெண்டாட்டி மூஞ்சியே பாத்துண்டிருக்க-

மனைவி:—ஆமா! அவன் அசடு. மத்தப் பேரெல்லாம் ரொம்ப சமத்து-அந்தக் குட்டி ஆத்துக்கு வந்து எண்ணி ஆறுமாசம் முழுசா ஆகல்லே-அதுக்குள்ளே கல்லுக் கல்லா வேண நகை பண்ணிப் போட்டிருக்காள்-நான் என்னத்தேக் கண்டேன் மூன்று வருஷமாச்சே!

ராமா:—அவாள்ளாம் காட்டு மிராண்டிகள் அம்மியும் கொழவியும் கட்டித் தொங்கவிட்டுக்கரா! நீயும் ரெண்டு ஆட்டொரலைக் கட்டித் தொங்க விட்டுக்கோ-எனக்கும் அவன் மாமானர் மாதிரி என் மாமனர் கொடுத்தா-

மனைவி:—ஆமா, அவன் மாமனர் கொடுத்தார். ஒங்க மாமனர் கொடுக்கல்லே-அவன் மாமனர் கொடுத்த பணத்தே வச்சு நகைப் பண்ணிப் போட்டுட்டான்-என்னமோ வேண்டித்தையும் வேண்டாத்தையும் சொல்லுவானே?

ராமா:—இல்லாதே போனு அவன் M. A. பாஸ்பண்ணி மாசம் ரூ. 1000 சம்பாதிச்சு அதிலேருந்து செய்து போட்டுட்டானே?

மனைவி:—அவன் எம். எ, பாஸ் பண்ணது போனு என்ன? அவன் எல். டி பாஸ்பண்ணது போனு என்ன? அவன் மாமனர் அந்தப்பெண் மேலே எழுதிவச்ச சொத்து அவளுக்கு அப்பரம் மாப்புள்ளே கொள்ளிபோட்டா அவனுக்கு வரப்போராது. அதிலே ஒரு காசுகூட அவனுக்கு இப்போ வாதில்லே-கிராமாந்தம் போய் நெல்லு பிடிச்சு வியாபாரம் பண்ணரான்-வருஷத்திலே மூனு, நாலு மாசம் ஒடியாடித் திரியரான் 5000 ரூபாய் ஷ்டாக்கா லாபம் வந்துடரது-ஆம்படையாளுக்கு நகையும் நாணயமும் பண்ணிப்போட்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறன்.

ராமா:—என்னையும் நெல்லு வியாபாரம் பண்ணச் சொல்லரையாக்கும்-இதுக்கு இப்படி எம். ஏ. முதல் வகுப்பிலே பாஸ்பண்ண வேண்டாமே-ஒனக்கு நகை வேணுமின்னா ஒங்க அப்பாவை பண்ணிப் போடச் சொல்லு-இனிமேல் நகை கிகை இன்னு பேசினா தெரியுஞ் சேதி-

மனைவி:—போரும்! வேரே என்னத்தே தான் கண்டுது. இந்தப் பாழாப் போர கோவத்தே தான் கண்டேன்-மெட்ரிகுலேஷன்லே யிருந்து எம். ஏ. பாஸ் பண்ர வரைக்கும் எங்கப்பா ஒங்க படிப்புக்குச் செலவழிச்சதையும் எம்.ஏ, பாஸ் பண்ணி இன்னிக்குப் பதினாறு மாசமாரது. சர்க்கார்சம்பள மாட்டாமா-மாசம் 75 ரூபாய் அனுப்பாரே அதையும் சேர்த்து நகை பண்ணிப் போட்டுண்டா அந்தக் குட்டியைப் போலே மூன்று பங்கு நகை நானும் போட்டுண்டுதானிருப்பேன். (அழுகிறாள்.)

ராமா:—எண்டி அழுரே! பைத்தியமே! எனக்கும் இப்போதான் தோனரது-ஏதேனும் ஒரு வியாபாரம் வர்த்தகம் பண்ணாமே போனோமே இன்னு-என்ன பண்ணரது!

மனைவி:—அதான் எங்கப்பாவும் சொன்னர். நிங்க மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணின உடனே 2000 ரூபாய் மொதல் தரேன். ஒரு வியாபாரம் பண்ணு-இவ்வளவு இங்கிலீஷ் படிச்சிருக்கரத்துக்கு ந்ன்ன நடக்குமின்னு, அப்பா ஒரு காலாலே நின்னேள்-எம். ஏ. பாஸ் பண்ணனும் இன்னு, பாஸ் பண்ணி ஒரு வருஷம் ஆகப்போரதே! என்ன முடிஞ்சுது?

ராமா:—இப்படி நெனக்கலே நான். இங்கே ஒரு கம்பெனிலே ஒரு பெரிய வேலை காலியிருக்கிறதாம். அதுக்கு அப்ளிகேஷன் போட்டுத் தொரையையும் நேரப் போய் பார்க்கப் போரேன்-எனக்குக் கட்டாயம் கிடைக்குமின்னு நம்பிக்கை யிருக்கு-என்ன மோசமாப் போச்சு. நல்ல உத்தியோகம் வேணுமின்னா கொஞ்ச நாள் கழிச்சுத்தான் கிடைக்கும். இதுக்கெல்லாம் விசாரப்படாதே போ!

மனைவி.—என்னமோ! அந்த மங்களாம்பா தான் நமக்குக் குல தெய்வம்-நல்ல வேளை பார்த்துத் தொரையைப் பாருங்கோ

(போகிறாள்.)

ராமா;—(தனக்குள்) அவளை வெரட்டி என்ன பண்ணரது. நம்ப வாழ் நாள்ளே இன்ன உத்தியோகம் பார்க்கர தென்று தீர்மானிச்சுண்டு அதுக்கு வேண்டிய படிப்பை படிக்காமே, சும்மா படிச்சுண்டே, அப்பரம் யோசிச்சா இந்த கதிதான்-இதான் வெள்ளைக்காரம் படிக்கரத்துக்கும் நாம் படிக்கரத்துக்கும் வித்தியாசம்.

(தொடரும்.)

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமது 'லக்ஷ்மி'யை பெரிய உருவத்தில் 'அக்டோபர்' மாதத்தில் வெளியிடுவதாக ஜூலை மாதப் பத்திரிகையில் நாம் எழுதி யிருந்ததையும் கவனியாமல் அநேகர் 'பத்திரிகை வரவில்லை' யென்று புகார் செய்வதைப் பார்த்து நாம் ஆச்சரியப் படுகிறோம். சிற்சில அசௌகரியங்களால் இந்தப் பத்திரிகை சிறிது தாமதப்பட்டு வெளியாகிறது. நவம்பர் பத்திரிகை டிசம்பர் 10உ-க்குள் வெளிவரும். டிசம்பர் பத்திரிகை முதல் மாதாமாதம் 30உ-க்குள் ஒழுங்காக வெளிவரும். புது வருஷ சந்தா செலுத்ாதவர்களுக்கும் இந்தப் பத்திரிகையை சாதாரணத் தபால் மூலம் அனுப்புகிறோம். அடுத்த பத்திரிகை வெளிவரு முன் புது வருஷ சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பாத பழைய சந்தாதாருக் கெல்லாம் அடுத்த பத்திரிகை வி. பி. யாக அனுப்பப்படும். சந்தாத் தொகையை மணியார்டர் செய்தோ, வி. பி. மூலம் பெற்றோ நம் நேயர்கள் 'லக்ஷ்மி'யை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

மானேஜர்,
லக்ஷ்மி.

உலகில் தற்போது மூன்று கோடி மோட்டார் வண்டிகள் இருக்கின்றன.

* * *

பத்து மணிநேரம் உடல் உழைப்பினால் ஏற்படும் களைப்பு நான்குமணிநேரம் மூளை உழைப்பினால் உண்டாகுமாம்.

* * *

ஜப்பானில் உயிருள்ள எரிமலைகள் மொத்தம் 51 இருக்கின்றன. வேறெந்த நாட்டிலும் இவ்வளவு எரிமலைகள் இல்லை.

* * *

அமெரிக்காவில் உள்ள ஒரு வெந்நீர் ஊற்றிலிருந்து 38 வினாடிக் கொருமுறை தவறாமல் வெந்நீர் குப் குப் என்று கிளம்பி விழுகிறதாம். இதன் மூலம் ஒரு கடிகாரத்தை இயக்கி அவ்வூர் வாசிகள் காலம் அறிந்து கொள்கிறார்களாம்.

* * *

மின் மினிப் பூச்சிகளின் வாலில்உள்ள ஒளி, என்ன தத்துவத்தின் பேரில் சாதாரண விளக்குகளில் ஒளி உண்டாகிறதோ, அதே தத்துவத்தின்படி ஏற்பட்டதாம். அதாவது எரியக் கூடிய ஒரு பொருளும் பிராணவாயுவும் சேர்வதின் பயனாக அவ்வொளி உண்டாகிறதாம். ஆனால் விளக்கில் இல்லாத ஒரு விநோதம் அதில் உண்டு. அதாவது அவ்வொளியில் வெப்பமே கிடையாது. எனவே "குளிர்ந்த ஒளி" என்று அதைச் சொல்லலாம்.

* * *

பல சாதியார் பலவிதப் பிரமாணம் செய்யும் முறைகளை அனுஷ்டிக்கிறார்கள். சீனர்களுக்குள் உள்ள ஒரு விநோத முறை யாதெனில் பிரமாணம் செய்யுமுன் ஒரு விளக்கை ஊதி அணைத்துவிட வேண்டுமாம். மற்றொரு வழக்கத்தின்படி, பிரமாணம் செய்வோன் ஒரு பீங்கான் தட்டை முழங்காலால் அமுக்கி உடைத்து விட்டு "நான் பொய் சொன்னால் இந்தத் தட்டு உடைந்ததுபோல் என் ஆன்மா உடைந்து போகுமாக" என்று சொல்ல வேண்டுமாம்.

* * *

முற்காலத்தில் இந்திரஜித்தன் முதலிய அரக்கர்கள் மாயவித்தையினால் தாங்கள் மறைந்து நின்று கொண்டு எதிரிகளைத் தாக்கியதாகப் புராண இதிகாசங்களில் படித்துள்ளோம். இத்தகைய மாயப்போர் முறைகள் இக்காலத்திலும் இனிவரும் யுத்தங்களில் கையாளப்படலாமென்று தெரிகிறது. யுத்த காலங்களில், நகரங்களும் பட்டணங்களும் ஆகாயவிமானங்களால் தாக்குறாவண்ணம் அவற்றை அடியோடு மறைந்து போகும்படி செய்யும் முறையை ஜெர்மானிய நிபுணர் டாக்டர் ரெட்டிமான் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். ஒரு மின்சாரப் பொத்தானை அமுக்கினால் போதும். உடனே வெண்மையான புகை கிளம்பிச் சில நிமிஷ நேரத்தில் நகரம் இருக்குமிடம் தெரியாவண்ணம் மூடி மறைத்து விடுமாம். தரையில் ஆங்காங்குப் புதைக்கப்பட்டிருக்கும் இரகசிய இரசாயனப் பொருள்கள் அடங்கிய பாத்திரங்களிலிருந்து வேண்டும்போது மேற்படி புகையைக் கிளப்பி விடலாமாம்.

* * *

ஹடில்ஸன் என்ற ஆங்கில மாதொருத்தி சுமார் அறுபதுமணி நேரம் நீந்தியிருக்கிறாளாம். உலகத்தில் இவளே நீண்ட நேரம் நீந்தியவளாம். கங்குலி என்ற பத்து வயதுள்ள வங்காள சிறுமி ஒருத்தி சுமார் 2 மைல் நீந்தினாளாம். இவளுக்குக் கவர்னரால் பரிசுகளளிக்கப்பட்டன.

* * *

உலகத்தில் நீந்தத் தெரியாத பிராணி ஒட்டகம் ஒன்று தானாம். அது நீரில் தவறி வீழ்ந்துவிட்டால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சியே செய்வதில்லையாம்.

* * *

ஒரு நிமிடத்தில் வெளிச்சம் உலகத்தைச் சுற்றி 480 முறை வந்து விடும். ஆனால் சப்தமோ நிமிடத்துக்குப் பதின்மூன்று மைல்களுக்குக் குறைவாகவே செல்லுகின்றது.

* * *

உத்தரமகா சமுத்திரப் பிரதேசத்தில் காற்று அதிக சலன மற்றிருப்பதால் இரண்டு மைல்களுக்கப்பா லிருப்பவர்களும் ஒருவரோ டொருவர் பேச்சு வார்த்தை நடத்திக் கொள்ளலாம்.

* * *

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த எல்லோ ஸ்டோன் பார்க்கிலுள்ள வெந்நீர் ஊற்று உலகத்தில் மிகப் பெரிதாம். சமீபத்தில் அதிலிருந்து நீர் பொங்கி 70 அடி உயரம் வரை எழும்புகிறதாம். தண்ணீர் கிளம்பும் துவாரம் சுமார் 100 அடியுள்ள அரை வட்டமா யிருக்கிறதாம்.

* * *

அமெரிக்காவில் டையர்பார்ன் என்ற இடத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் பொருட் காட்சிச் சாலையில் மனிதரே காட்சிப் பொருளாக வைக்கப்படுவார்களாம். மனிதருக்குப் புராதன ஆடையணிவித்துப் புராதன ஆயுதங்களையும் சாமான்களையும் உபயோகப் படுத்திச்செய்து காட்டப் படுமாம்.

* * *

உலகத்தில் ஜனவிருத்தியினால் உணவுப்பஞ்சமேற்படு மென்றும், ஆனால் சிலகாலத்துக்குப் பிரேஸில் தேசமும் ஆபிரிகா தேசமும் உலகத்துக்குத்தேவையான உணவுப் பொருளை யளிக்குமென்றும் கூறப்படுகின்றன. அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் 500 மீட்டர் ஆழத்தின் கீழுள்ள தண்ணீரில் உணவுச் சத்து இருக்கிறதென்றும், வருங்காலத்தில் காலைப் போஜனத்துக்குச் சூரிய வெளிச்சமும், மத்தியான போஜனத்துக்குக் கடல் நீரும், இராப் போஜனத்துக்கு வாயுவும் ஆகாரமா யமையுமென்றும் டாக்டர் பர்னார்டு என்ற பிரபல ரசாயன சாஸ்திரி அபிப்பிராயப் படுகிறார்.

* * *

மைசூரில் சுத்தி:—ஹிந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்குச் சென்று விட்ட 30 குடும்பத்தினரைப் பின்னும் "சுத்தி" செய்து ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளலாமெனச் சிருங்கேரிமடச்சங்கராசாரியார் அனுமதி யளித்திருக்கிறாராம்.

* * *

ஆகாய விமானத் தொழிற்சாலை—ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்று அமெரிக்காவில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விமானம் ஒன்று 900 பவுன்களுக்கு விற்கப்படுகிறதாம்.

* * *

புதிய நூறு ரூபாய் நோட்டுகள்:—இதுவரை இங்கிலாந்தில் அச்சிடப்பட்டுவந்த நூறு ரூபாய் நோட்டுகள் செலவழிந்துவிட்டபடியால் இந்தியாவில் முதன் முதல் நாசிக் அச்சு இயந்திர சாலையில் அச்சிடப்படும் நோட்டுக்கள் வெளியாக்கப்படும்; புதிய நோட்டுகள் பார்வைக்குப் பழைய நோட்டுகள் போலவே யிருக்குமாம். ஆனால், நம்பர் போடப்பட்டிருக்கும் பழுப்பு வர்ணமான பாகம் பச்சை வர்ணமாக இருக்குமாம்.

எட்னா எரிமலை விபத்து.

எட்னா எரிமலை பூமியின் பல விடங்களிலிருந்தும் வெடித்துப் பரவி வருகிறது. மேற்படி விபத்தால் இதுவரையில் 209 ஏகர்கள் சேதமாகி விட்டன. 4300 பேர்கள் யாதொரு உதவியுமின்றித் தவிக்கிறார்கள். மெஸ்காலி என்ற கிராமம் பெரும்பாலும் பாழாகிவிட்டது. மேற்படி விபத்தைத் தடுக்க ஸ்ரீ. முசோலினி பல ஏற்பாடுகள் செய்து வருகிறார். எரிமலை விபத்து அடங்கியதும் புதிய மெஸ்காலி கிராமம் அமைத்து அங்கு 300 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார். மெஸ்காலி ரயில் பாலத்திற்கும் ஆபத்து வரும் போலிருக்கிறது.

* * *

வாஷிங்டனிலுள்ள ஓர் கோசாலையில், சமீபத்தில் இறந்துபோன ஒரு பசுவிற்காக அதைப்போன்ற ஓர் பசுச்சிலையை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். மேற்படி பசுவைப்போல் அவ்வளவு அதிகமாக இது வரையில் எந்த பசுவும் பால் கறந்த தில்லையாம். அதைப்போல தாங்களும் பால்கறக்க வேண்டுமென்ற உற்சாகம் மற்ற பசுக்களுக்கும் உண்டாவதற்காகவே மேற்படி பசுவின் சிலையை பசுச்சாலையில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

* * *

இங்கிலாந்தில் டேவிஸ்டாக் என்ற இடத்திலுள்ள ஒரு கிழவர் இதுவரை லாயிட் ஜார்ஜின் பெயரையாவது பால்டுவின் பெயரையாவது காதால் கூட கேட்டதே கிடையாதாம்.

* * *

பிரான்ஸிலுள்ள வில்லி என்னுமிடத்தில் இரண்டு வயதுள்ள பெண்குழந்தை யொன்றிருக்கிறதாம். அதன் பெயர் வின்பிரட் டை

ர்னி. அக்குழந்தை நான்கு பாஷைகள் பேசுகிறதாம். பிரெஞ்சு, ஆங்கிலம், ஜர்மன், தற்கால கிரீக் முதலிய பாஷைகளில் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுகிறதாம்.

* * *

உலகத்திலுள்ள சமுத்திரங்களிலிருந்து வருஷத்திற்கு 20 கோடி பவுன் பெறுமானமுள்ள மீன் முதலிய ஆகாரப்பொருள் கிடைக்கின்றனவாம்.

* * *

பிரிட்டன் பழங்கள் வாங்குவதில் 1924-ஐ விட 1925ல் 30 லக்ஷம் பவுன் அதிகமாக செலவிட்டதாம். 1925-ஐ விட 1926ல் 20 லக்ஷம் பவுன் அதிகம் செலவிட்டிருக்கிறதாம்.

* * *

இப்போது லண்டனிலிருந்து வாங்கூவருக்கு (அதாவது 7000 மைல்கள்) நேரே டெலிபோனில் பேசுகிறார்கள். உலகத்தில் வேறெங்கும் இவ்வளவு தூரம் டெலிபோனில் பேசுமிடம் இல்லை. அதில் 1 நிமிஷம் பேசுவதற்கு 3 பொன் 16 ஷில்லிங் கூலி.

* * *

சரியான மணிக்கணக்கைத் தெரிந்துகொள்வதற்காக நியூயார்க்கில் ஒரு டெலிபோன் வசதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் கட்டணம் 2½ அணாவாகும். ஒரு தினத்தில் மாத்திரம் இந்த டெலிபோன் கம்பெனியாருக்கு இதன் மூலம் 100 பொன் வருமானம் கிடைத்தது.

* * *

இங்கிலாந்திலுள்ள வட கிழக்கு ரயில்வே கம்பெனியாருக்கு தினமொன்றிற்கு குமஸ்தாக்களும், மற்றவர்களும் எழுதுவதற்காக உபயோகிக்கும் பேனா, பென்சில், காகிதம், மை முதலியவைகள் வாங்குவதற்காக மாத்திரம் தினம் ஆயிரம்பொன் செலவாகிறது. பென்சல்கள் மாத்திரம் வருஷமொன்றிற்கு 3,509 பொன்னுக்கு வாங்குகிறார்கள்,

* * *

பெண்கள் கால்களின் அளவைக் கொண்டு அவர் இந்த தேசத்தைச் சேர்ந்தவரென, ஆக்ஸ்போர்ட் செருப்பு தொழிற்சாலையிலுள்ள ஒருவர் சொல்லி விடுகிறார். கால்களின் அளவைக் கொண்டு அவர், ஓர் பெண் பிரான்ஸ் தேசத்தவரா, [illegible] தேசத்தைச் சேர்ந்தவரா, அல்லது பிரிட்டனைச் சேர்ந்தவரா என நிர்ணயித்து விடுகிறாராம்!

பிரிட்டன் பொக்கிஷ மந்திரி ஸ்ரீ. சர்ச்சில் பார்லிமெண்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது தன்னை பத்திரிகாசிரியரெனக் கூறிக்கொண்டார். அதற்கு முன் அவர் சிப்பாயாக யிருந்தார். இப்போது அவர் ராஜதந்திரியாகவும், சித்திரம் எழுதுவதில் சிறந்தவராகவும், நூலாசிரியராகவும் விளங்கியிருக்கிறார். தவிர சமீபத்தில் அவர் கொத்து வேலையிலும் தனது சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டார். இவ்வளவு விஷயங்களில் தேர்ச்சி பெற்ற அரசியல் வாதியை இதுவரை யாரும் கண்டதில்லையாம்!

சென்னை கடற்கரை தீவிபத்து.

சென்னை சாந்தோம் கடற்கரைக்கருகில் கொச்சிக்குப்பம் என்னுமிடத்தில் செம்படவர்கள் வசிக்கும் குடிசைகளில் நேற்று இரவு திடீரென ஒரு தீவிபத்து ஏற்பட்டது. செம்படவர்களுடைய சுமார் 20 குடிசைகள் குடிசைகள் தீக்கிரையாகிவிட்டன. தீ யணைக்கும் இயந்திரம் வந்து சேர்ந்து தீயை அணைத்தது. இத் தீவிபத்தால் சுமார் 1000 ரூபாய் வரை சேத மேற்பட்டிருக்கலாமென மதிப்பிடப்படுகிறது.

ஆகாயத்தில் புதிய சக்தி.

வெஸ்ட் ஹார்ட்டல்பூல் என்ற விடத்திலுள்ள ஸ்ரீ. டேட் என்ற ஓர் விஞ்ஞான சாஸ்திரி ஆகாயத்தில் ஓர் புதிய சக்தி யிருக்கிறதென கண்டு பிடித்திருக்கிறார். அவர் மிக இளைஞர். ஆகாயத்திலிருந்து கனமான ஓர் வஸ்துவைக் கீழே போட்டால் யாதொரு காந்த சக்தியும் சாதனமு மின்றி அது கீழே விழாது நிற்கின்றதாம். அதை யொட்டி மேற்படியானைக் கேட்டதற்கு அவர் கூறியதாவது:... ஆகாயத்தில் ஓர் கனமான வஸ்துவை ஒரு விதமாகப்போட்டால் அது அப்படியே ஆகாயத்தில் நிற்கிறது. அதிலிருந்து ஆகாயத்தில் இதுவரையில் கண்டுபிடித்திராத ஏதோ ஓர் புதிய சக்தி யிருக்கிற தென்பது நன்கு தெரிகிறது. மேற்படி விஷயத்தில் ஓர் நிச்சயமான முடிவிற்கு வர இன்னும் நான் பரிசோதனை செய்து வருகிறேன். மேற்படி ஆராய்ச்சியை நான் செய்த பிறகு, நிபுணர்களான விஞ்ஞான சாஸ்திரிகள் முன்னிலையில் அதைப் பரிசோதனை செய்து காட்ட உத்தேசித்திருக்கிறேன். இன்னும் மேற்படி விஷயத்தை யொட்டி யாராவது கூறும் யோசனையையும் நான் வரவேற்கிறேன்.

லக்ஷ்மி வாழ்த்து

8. "இலக்குமி" உன் சக்திகளை இப்பாரத நாட்டார்
எல்லோரும் இரவு பகல் எத்தி யுருவிடுவர்
அலக்கணுற அடிமைகளாய் அவர்களை என் விட்டாய்?
ஆய் வெறுக்கும் குழந்தைகளும் அகிலமதி லுண்டோ?(வாழியநீ.)

9. தளி யமைத்துக் கை குவித்தோம் தாயே ! யுன்பாதம்
தரித்திரராய் அடிமைகளாய்த் தாழாது காவாய் !
அளியறியா அன்னியருக் காக்க மளிக்கின்றாய்
அன்னாய் ஒ "இலக்குமி" ஈதருள் வழக்க மாமோ. (வாழியநீ.)

10. வாழிய நீ "இலக்குமி" உன் மக்கள் வளம் பெருக்கி
மா பெரும் பாரத நாடும் வழி வழியாய் என்றும்
பாழிய பேரிருக்கை யொடும் பலகலையும் மல்கி
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டாய் என்றும் (வாழியநீ.)

வந்தே மாதரம்.

லோகோபகாரி பத்திராதிபர் ஸ்ரீமான் பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை வாழ்த்து.

திருவளர் தமிழும் சைவமும் நிகழும்
பெருவள நாட்டில் பிறந்து வளர்ந்து
ஆறாண் டெய்திய அழகிய லக்குமீ
நூறாண்டின்னும் நுவல் நலம் பெருக்கி
அன்புடைத் தலைவன் சுந்தர னுருடன்
இன்புடன் வாழ இறையருள் புரிக !
வாழிய தமிழே! வாழிய சிவமே!!
வாழிய திருவே! வாழிய நலனே !!

ஸ்ரீமாந் மணி. திருநாவுக்கரசு முதலியார் வாழ்த்து.

வெண்பா.

கண்ணைக் கவர்ந்து கருத்தின் கண் வீற்றிருக்கும்
உண்ணும் அமுதே உயர் லக்ஷ்மீ—என்னும்
எழுத்தும் இனி துணர்த்தும் இன் றமிழின் செல்வி
வழுத்துவதென் பல்லூழி வாழ்!

புத்துயிர்.

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி எழுதியது)

மனித சமூகம் மட்டும் அன்று; ஒவ்வொரு ஜீவராசியும் செடி கொடி புற் பூண்டுகளும் புத்துயிர் பெற்றுயர விரும்புவது இயற்கையாகும். புத்துயிர் பெறறுயர விரும்பாதன அழியக் கடவது.

தற்பொழுது உலகத்தில் உயர்நிலை யடைந்து வாழ்ந்து வரும் ஒவ்வொரு ஜாதியும், ஒவ்வொரு நாடும் ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்டு அறிவின்மையால் அடிமையாகி இருந்த இடமும் தெரியாது இருந்து வந்ததேயாகும். ஆங்கிலோ சாக்ஸன் ஜாதியாரும், ஜர்மானிய ஜாதியாரும் துரானிய மக்களும் எண்ணற்ற கோத்திரங்களைப் பெற்ற ஐரோப்பிய ஆசிய ஆப்பிரிக்கா ஜாதியார்கள் பலரும் நசுக்கப்பட்ட அநாகரீக வகுப்பைச் சேர்ந்தவர்களே யாவர்.

பல காரணங்களால் உண்டான சந்தர்ப்பங்களின் பலத்தால் அந்நாடுகள் புத்துயிர்பெற்று வளரத்தொடங்கித் தற்போது நாகரீகத்தின் மகோன்னத பதவியால் ஜ்வலிக்கின்றன.

மற்றும் உலகில் பல நாடுகள் இந்தியா, சீனா ருஷியா, ஆபிரிக்காவின் பல பாகங்கள் ஆகிய ...வைகள் பூர்வத்தில் உயர்ந்த நாகரீக பதவி ...நுபவித்து ஆனந்தித்து வந்து தக்க பல பெரிய காரணங்களாலும் துர்த்தசையினாலும் தவறி பதவியை யிழந்து தாழ்த்தப் பட்டும், அடக்கப்பட்டும், அடிமையாக்கப் பட்டும் போ...ருக்கின்றன.

இ...நாடுகளில் சமீபகாலத்தில் ஏற்பட்ட ம... மாற்றம் என்ற ஆரம்பப் புரட்சியின் வ...மையால், இந்த நாடுகளும் நாட்டாரும் ...டியும் புத்துயிர்பெற்றுயாத் தொடங்கி ...ருக்கிறார்கள்.

எந்த ஜாதி புத்துயிர் பெற்று உயரத் தொடங்கிவிட்டதோ அந்த ஜாதியை அடக்கவோ அதன் முயற்சிகளைத் தடுக்கவோ ஒரு ஜாதியாராலும் தெய்வத்தாலும் கூட முடியாது. ஏனெனில் அந்த சுதந்தர எழுச்சி இயற்கை ... எழுச்சியாகும்.

பாரதநாட்டில் புத்துயிர் ஓங்கி வளர்வதை நாம் நாற்புறமும் தற்போது பார்க்கிறோம். நம்மவர்களின் எப் பகுதியும் புத்துயிரால் எழுப்பப் பட்டிருக்கின்றது. இந்நிலை ஓங்கி வளர்வதாக!

இனியும் புத்துயிரின் வல்லமையால் ஜாதிக் கட்டுப்பாடுகள் அடியுடன் தகர்க்கப்பட வேண்டும். பிராமண அப்பிராமண பந்தங்களும் வித்தியாசங்களும் துவேஷங்களும் புத்துயிரால் நாசமாக்கப்பட்டுப் பரிசுத்த மடைய வேண்டும். பெண் மணிகளைத் தாழ்த்தும் கொடுமையும், பாலிய விவாகச் சிறுமையும் புத்துயிரின் சக்தியால் அழிந்தொழிய வேண்டும். ஒரே ஜாதி, ஒரே ஐக்கியம், ஒரே அன்பு என்ற பதவிகளும், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம், என்ற தெய்வீகக் கொள்கைகளும் புத்துயிரால் தான் எழுப்பப்பட வேண்டும். மதச் சண்டைகளும் மதவெறியும் மதப் போராட்டங்களும் புத்துயிரால் தகர்க்கப்பட்டு ஒழிதல் வேண்டும். நாட்டினரின் தேசாபிமானமும், நாட்டின் சுதந்தரமும், செல்வமும், சக்தியும், புத்துயிர் பெற்று ஓங்குதல் வேண்டும்.

புத்துயிர் பெற்றுயர்ந்து நாகரீகத்திலும் சக்தியிலும் மேலோங்கி நிற்கும் உலகத்தின் பல நாட்டுச் சரித்திரங்களை நம்மவர்கள் ஒருவாறு அறிந்திருந்த போதிலும், தற்போது நமது கண்களுக்கு முன் நடந்தும் நடந்துகொண்டுமிருக்கும் ருஷிய நாட்டின் புத்துயிர் இ... தின் சக்தியையும், தன்மையையும் ஆ... ஆராய்தல் வேண்டும். சென்ற பத்... களுக்குமுன் உண்டான இந்நாட்டின் ... லும் அற்புத அபிவிருத்தியும் நம்மவர்க... இன்னமும் புத்துயிர் அளிப்பதாகும்... கோல் ருஷிய அதிகாரம் ஜன சமூக... துயிரால் அழிந்து சாம்பரானதும், ... மும் சகோதரத்துவமும் இதுவரையில் உலக... தில்இருந்திராத புது விஞ்ஞான வழியில் அ... விருத்தி யடைந்திருப்பதும் புத்துயிரால் தா... என்பதையும் நம்மவர்கள் நன்கறிய வேண்...

புத் துயிர் ! புதிய வாழ்வு ! ! நோயற்ற வாழ்வு ! ! !

நீங்கள் புதிய வாழ்வு, யௌவன வாழ்வு, ஆண்மை வாழ்வு, இன்ப வாழ்வு, நோயற்ற வாழ்வு அடைய விரும்புகிறீர்களா ?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மறுக்க முடியுமா ?

உண்மையில் நீங்கள் நோயற்ற வாழ்வு, யௌவன வாழ்வு விரும்பினால்இன்றே,

"வீ ர சி ங் க லே ஹி ய ம்"

அனுப்பும்படி எழுதுங்கள். எவ்விதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனியைப் போல பறந்துவிடும்.

வீரசிங்க லேஹியம் இரத்தத்திற்குச் சுத்தியும் விருத்தியும் உண்டாக்கி நோய்களைத்தொலைத்து உடம்பை வஜ்ரம் செய்கிறது. எல்லா நோய்களையும் அகற்றவல்லது. தலைநோய், மந்தம், மயக்கம், முதலியவைகளைத் தடுக்கிறது. தாதுவிற்கு அதிசய அபார ஆச்சரியப்படும்படியான வீரபலத்தைக் கொடுக்கிறது. மேக சம்பந்தமான சகல நோய்களையும் உடனே தொலைக்கிறது.

40 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 4—8.

பாக்கிங் தபால் செலவு இனம்.

☞ சிங்கப்பூர், பினங்கு, மலாய் ஸ்டேட் நண்பர்கள் மூன்று டப்பிகளுக்கு ஆர்டர் செய்தால், தபால் செலவு, பாக்கிங் செலவு இனம்.

மானேஜர் :—வைத்திய ஆஸ்ரமம் :: காசி.

வியாபாரி

வர்த்தக யுக்தி !

வர்த்தக தந்திரம் !!

வர்த்தக வெற்றி !!!

முதலியன

புகட்டும் ஒரு நூதனப் பத்திரிகை.

வியாபாரிகளுக்கு இதுவே உத்தம நண்பன்

வருஷ சந்தா அணா. 8.

1929 ஜனவரிமீ 15உ வெளிவரும். மாதிரிப் பிரதி இனம்.

மானேஜர்,

"வியாபாரி"

தபாற் பெட்டி 99, சென்னை.

A. S.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்,

இரும்பு - - - பெட்டிகள்



விலையில் குறைவும், உழைப்பில் சிறப்புமுள்ள இரும்பு பெட்டிகளுக்கு, பிற இடங்களுக்குப் போகுமுன்—எங்களை வந்து பாருங்கள் நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதிகம் மதிப்பிடக் கூடிய பெட்டிகள். எங்களிடம் கிடைக்கும்.

V. Doraisamy Mudaliar

58, Broadway, : MADRAS.

சென்னையில்

சிறந்த சிற்றுண்டிச்சாலை!

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு சுத்தமான பசுவின் நெய்யில் அன்றாடம் செய்யப்படும் அநேக வித பக்ஷணங்கள் ஹல்வா, பாதம் ஹல்வா, மைசூர் பாகு குலோப் ஜான், இன்னும் பல விதமான பம்பாய்—பெங்காலி மிட்டாய் தினுசுகள் ஒவ்வொருவர் சுவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற முறையில் கிடைக்கும். நாவிற்கு ருசியும், மனதிற்கு இனிமையும் அளிக்கக் கூடிய பக்ஷணங்களில் முதன்மை பெற்றவை. - - -

இன்றே வந்து பாருங்கள்.

வெளியூர் ஆர்டர்களுக்கு வி.பி. யில் அனுப்பப்படும்.

Neo Ramakrishna Lunch Home.,

285, China Bazaar Road,

Next to Pachaiyappa's, MADRAS.

புத்துயிர்

நரம்புத்தளர்ச்சி தேக மெலிவு பலமின்மை வீரியக் குறைவு இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றே ஒரு புட்டி

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்)

வாங்கி உபயோகியுங்கள் தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளையும் அறவே நீக்கி, போன பலத்தை மீட்டி புதிய ஊக்கம் காட்டி உங்களை உண்மையில் ஒரு புதிய மனிதனாக்கி விடும். இந்த அரிய ஔஷதம் கண்டு பிடிக்கப்பட்டு 30 வருஷங்களாக நல்ல பெயருடன் உலகில் நிலவி வருவதே இதற்கு பெரியதொரு அத்தாட்சி.

விலை ரூ. **3—4—0.**

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

தபால் பெட்டி 287

சென்னை.

பல அழகிய சித்திரப்படங்கள் நிறைந்த

குடும்ப விநோதக் கதைள்.

800 பக்கம். 26 கதைகள். விலை ரூ. 2.

நண்பர்களே ! குடும்பத் தொல்லைகளால் அல்லற்படும் நீங்கள் அத்துன்பங்களினின்றும் நீங்கி ஆனந்தமாய் வாழ வேண்டுமானால் இந்தப் புத்தகத்தை வாங்கி வாசியுங்கள். உங்கள் மனைவி மக்களுக்கும் வாங்கிக் கொடுங்கள்; கலியாணம் முதலிய மங்கள காரியங்கள் நடக்குங் காலங்களில் இப்புத்தகத்தை வாங்கி சன்மானஞ் செய்யுங்கள். படிப்பதற்கு உற்சாகமா யிருப்பதோடு, படிப்பவர்க்குப் பேரானந்தத்தையும் சிறந்த அறிவையும் உண்டாக்கத்தக்க இப்புத்தகத்தை எப்பொழுதும் கை விடாதீர்கள். இது; குடும்பங்களில் பற்பல நன்மைகளை உண்டாக்கும் பேரானந்தக் களஞ்சியம்.

விலை ரூ. 2—0—0

இதில் அடங்கியிருக்கும் 26 கதைகள்.

1. மனைவியின் கடமை, 2. பாத்திரமறிந்து பிச்சையிடு, 3. கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு, 4. பணம் வந்தவழியே செல்லும், 5. புருஷனை ஆண்டியாக்கிய மனைவி, 6. அன்புள்ள மனைவியும் அறிவில்லாப் புருஷனும், 7. தாய் செய்த நன்றி, 8. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே. 9. அண்ணியின் கொடுமை. 10. மாமியின் கொடுமை, 11. மருமகளின் கொடுமை, 12. மனைவியைக் கொன்ற புருஷன், 13. புருஷனைக் கொன்ற மனைவி, 14. கண் மறைக்கும் காமம், 15. நவீன நாகரீகம், 16. பாலாம்பாள் செய்த படுமோசம், 17. தந்தை செய்த நன்றி, 18. ஆடம்பர நகை யலங்காரி, 19. நகைப் பைத்தியத்தால் நாசமடைந்த கமலம், 20. திருட்டுச் சாமியாரும் குருட்டுக் கூத்தியாரும், 21. பெண் சிரித்தால் போச்சு, 22. மதம்பிடித்த மாமனார்; 23. மோசம்போன மாமனார், 24. இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம், 25. சகோதரத் துரோகி. 26. மைத்துனன் கொடுமை.

இல்லற வாழ்க்கையின் இன்ப இரகசியம்	...	...	2—0—0
இராஜராஜேஸ்வரி ;	...	...	1—8—0
கப்பற் கொள்ளைக் காரர்கள்	...	...	1—4—0
கதாமாலிகா	... ...	...	1—0—0
விசித்திர தேவலோகக் கோர்ட்டு	...	...	0—8—0
பத்மனாபன் (இனிய நாவல்.)	...	...	0-14—0

MUTHIAH BOOK DEPOT,

Post Box No. 99,

MADRAS.

நயம்! உறுதி!! நம்பிக்கை !!!

உள்ள

இரும்புப் : : பெட்டிகள்

புதுமாதிரியான

தினுசுகளில்

கிடைக்கும்.

பி. நடேச முதலியார், இரும்புப் பெட்டி உற்பத்தியாளர்,

59, பிராட்வே, மதராஸ்.

நடராஜன் என்சினீரிங் ஒர்க்ஸ்



இரும்பு செம்பு வார்ப்படக்காரர்கள்.

ரயிஸ் அல்லர்கள், ரயிஸ் மில் பார்ட்டுகள், சிலிண்டர், காலர், ஷாப்டிங் முதலானவைகள் குறைந்த விலையில் கிடைக்கும். எல்லாவிதமான மெஷீன் பாகங்களும் ஆர்டரின் மேல் செய்து கொடுக்கப்படும்.

ஆயில் என்ஜின்கள் மோட்டார்கள், மெஷீன் பார்ட்டுகள் முதலானவைகளை நன்றாகப் பழுது பார்த்துக் கொடுப்பதில் பெயர் பெற்றிருக்கிறோம்.

உங்களுக்கு வேண்டுபவைகளுக்கு எழுதுங்கள்.

ஒர்க்ஷாப் :—சுப்பராய பிள்ளை தெரு, மதராஸ்.

ஆபீஸ் :— 59, பிராட்வே மதராஸ்.

PRINTED AT MUTHIAH PRESS, MADRAS AND PUBLISHED BY K. S. SUNDARAR.